Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 | வெள்ளி - 17 | 17 - 23 - யூன் - 2005




## எதுவரை தொடரும் இந்தப் போராட்டங்கள்...



## சந்திரிகா எழுதப்போகும் சோதினை...

# நறுக்கென...

## பிக்குவா..? சந்திரிகாவா..?



எனக்கு முதலே ஒரு சந்தேகம் இருந்தது.

நான் சந்தேகப்பட்டதுபோல செய்தியள் கூட வந்தன.

என்னண்டா கண்டியில பொதுக்கட்டமைப்பை எதிர்த்து சாகும்வரை உண்ணாவிரதப்போராட்டம் நடாத்தினாரே முற்றும் துறந்த சமயத்துறவி எண்டு போட்டு அரசியலை மட்டும் துறக்காத பௌத்தபிக்கு. ஏன் அவர் அவசர அவசரமாக உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டவர் எண்டு.

சிலவேளையில பட்டினி கிடக்கேக்கதான் ஏதேனும் ஞானம் பிறந்திட்டுதோ எண்டு கூட ஒரு கற்பனை எனக் கிருந்தது. அதாவது போதி மரத்தின்கீழே புத்தர் ஞானம் பெற்றது போல இந்த பிக்குக்கு பட்டினி கிடக்கேக்க படுக்கையில ஞானம் கிடைச்சிட்டுதோ எண்டமாதிரி ஒரு நினைப்பு வந்துபோனது.

ஆனால் ஒரு மண்ணாங்கட்டியும் உந்தப் பிக்குவுக்குக் கிடைக்கயில்ல. எல்லாம் பயம்தான் காரணமாம். அதாவது பிக்கு தானாக உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடாட்டி குண்டுக் கட்டாத் தூக்கிக்கொண்டுபோய் ஆஸ்பத்திரியில போடபொலிசார் ஒரு நடவடிக்கைக்கு திட்டமிட்டவையாம். அத எப்பிடியோ மோப்பம் பிடிச்ச பிக்குமார் அவசர அவரமாக கண்டியில போலி கனவான் அரசியல் நாடகம் நடத்தினவையாம்.

ஆனால் உந்த விளையாட்டு கொழும்பு ரயில் நிலையத்துக்கு முன்னால உண்ணாவிரதம் நடத்தின பிக்குவுக்கு தெரியேல்ல விளைவு பொலிசாரும் சனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்காரரும் சேர்ந்து ஆளைத் தூக்கிக்கொண்டு போய் ஆஸ்பத்திரியில வளத்திப்போட்டினமாம். அப்ப சரிதானே சந்தேகம் உறுதியாயிட்டு, கண்டியிலயும் கொஞ்சம் பிந்தினா உதுதான் நடந்திருக்கும்.

சந்திரிகாவுக்குத் தெரியாத பிக்குமாரின் விளையாட்டையெல்லாம்.

பிக்குமாரின் அரசியலை சனாதிபதி சந்திரிகா இன்றைக்கு இல்லை தன்னுடைய தந்தையார் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவை சுட்டுக்கொன்ற பிக்குவின் இடத்திலிருந்து கற்றுக்கொண்டவராச்சே.

சும்மா புத்தம் சரணம் கச்சாமி என்று விகாரையில ஓதுறத விட்டிட்டு வந்து சுனாமி பொதுக்கட்டமைப்பு பௌத்த நாடு என்று பிக்குமார் கதைக்க வெளிக்கிட்டா இப்படி பலதும் நடக்கத்தான் செய்யும்.

## சந்திரிகா... ரணில்... யார் துணிச்சல் மிக்கவர்!



என்னதான் இருந்தாலும் ரணில் சொல்லுறதிலயும் ஒரு சின்ன நியாயம் இருக்கத்தான் செய்யுது.

அதாவது ரணில் தானொரு துணிச்சல் மிக்கவர் எண்டமாதிரி அடிக்கடி கதை பேசுறார்.

எப்படியெண்டால் புரித்துணர்வு உடன்படிக்கையில கைச்சாத்திட வேண்டும் என்றபோது எதிர்ப்புக்களையும் அச்சுறுத்தல்களையும் பற்றி கவலைப்படவில்லை. துணிந்து கையெழுத்திட்டேன். ஆனால் சனாதிபதி சந்திரிகா பொதுக் கட்டமைப்பில் கையெழுத்திட பயந்துகொண்டு இருக்கிறார், எனத் தெரிவித்துள்ளார்.

ரணில் சொல்லுறமாதிரி கூட்டிக்கழித்துப்பார்த் தால் ரணில் துணிச்சல்காரர் மாதிரித் தெரியுதல்லோ.

ஆனால் ரணில் துணிச்சல்காரர் இல்லை. ஏனெண்டால் ரணில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டிய சூழல் ஏன் அப்ப அப்படியிருந்த தெண்டால் ஒட்டுசுட்டானிலிருந்து டொலர்பாம், கென்றபாம் எண்டு மணலாற்றில ஒரு தொங்கலிலயும் , மாங்குளத்திலிருந்து ஓமந்தை வரைக்கும் பிறகு பரந்தனிலிருந்து ஆனையிறவு பிறகு ஆனையிறவுக்கு அங்கால முகமாலை சாவகச்சேரியெண்டு புலிப்படை குடுத்த குடுவை கொஞ்சம் நஞ்சமோ. அப்ப அந்த சூடு ரணிலை யோசிக்க வைக்குமே அது தான் உடன அவர் கையெழுத்து வைச்சவர்.

இப்ப அம்மா சந்திரிகாவுக்கு என்னத்தான் இருந்தாலும் மூன்றாண்டு கால ஓய்வு கொஞ்சம் புளிச்சலை கொடுத்திருக்கு வாங்கின அடியல் கொஞ்சம் மறந்திருக்கு அதால இப்ப இப்படி விளையாட்டுக்காட்டுறா.

இதே சந்திரிகாவுக்கு ஒரு சண்டை நடந்து புலிப்படை அடிச்சா எப்படி கையெழுத்து வைப்பா தெரியுமோ ரணிலைவிட வேகமாக அப்ப ரணில் துணிச்சல்காரரோ சந்திரிகா துணிச்சல்காரரோ எண்டு பார்த்த ரெண்டு பேரும் துணிச்சல்காரரில்லை யார் துணிச்சல் காரர் எண்டு சொல்லவேணுமோ சொல்லாமலே விளங்கும்.

## ஜே.வி.பி-சந்திரிகா கொடுக்கல் வாங்கல் தீருமா?



ஜே.வி.பிகாரர் சந்திரிகா அம்மையாரை வெருட்ட சந்திரிகா அம்மையார் ஜே.வி.பிகாரரை வெருட்ட இப்படியே ஒரு கசாப்பு அரசியல் இலங்கையில் நடக்கிறது.

கடைசியாக சனாதிபதி சந்திரிகா அம்மையார் பொதுக்கட்டமைப்பு விடயத்திற்காக ஜே.வி.பி அரசிய லிருந்து விலகுவதானது ஒரு வரலாற்றுத்தவறாக அமையும் என தன்னுடைய எட்டுப்பக்கக் கடிதத்தில் எழுதியுள்ளார்.

ஆனால், ஆரம்பமே இப்பொழுதுதான் என்பது போலல்லவா இருக்கிறது. கடந்த காலததில் அம்மையார் எத்தனை தவறுகள், எத்தனை குளறுபடிகள் எண்டு விளையாட்டுக்கள் விட்டவர்.

அது சரி இதெல்லாம் இப்படியிருக்க ஜே.வி.பிக்கும் சந்திரிகா அம்மையாருக்கும் இடையில சில கொடுக்கல் வாங்கல் இருக்கிறதே அதை எப்படி தீர்த்துக்கொள்ளப போகிறார்கள்.

அதாவது சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் என்னதான் இருந்தாலும் சனாதிபதி என்கிற கொஞ்சநஞ்ச மரியாதையைக்கூட வைக்காமல் என்னவெல்லாம் பேசி சந்திரிகாவை ஜே.வி.பி அவமானப்படுத்தியது.

எல்லாம் இந்தப் பாழாய்ப்போன அரசியல் அதிகார ஆசை சனாதிபதியின் வாயை கொஞ்சம் கட்டிப்போட்டு வைத்திருந்தது என்பது உண்மையே.

இந்த நிலையில் வெட்டு ஒண்டு துண்டுரெண்டு என்கிறமாதிரி ஜே.வி.பி சுதந்திரக்கட்சி உறவு வந்தாப்பிறகு சனாதிபதி சந்திரிகா அம்மையார் என்ன செய்யப்போறா.

இல்லாட்டி உந்த ஜே.வி.பிக்காரர் யப்பானுக்குப் போகேக்குள்ள அவையிண்ட தலைவர் சோமவன்ச அமரசிங்கவை கட்டுநாயக்கா விமான நிலையத்தில திருடனைக் காட்டிக்கொடுக்கும் கருவி காட்டிக்கொடுத்ததல்லே. அதே மாதிரி நாட்டில எல்லா இடமும் காட்டிக்கொடுக்கக்கூடிய மாதிரி ஏதேனும் செட்டப் வைச்சிருக்கிறாரோ என்னவோ.

ஏனெண்டா கொஞ்சக்காலமாக ஜே.வி.பிக்காரரிட்ட கணக்கப்பிடி தன்னட்ட இருக்கெண்டு தகவல்களை கசியவிட்டவரல்லோ அதனாலதான்.

## அமைச்சருக்குத் தெரியாத; சங்கதியும் உண்டு!



சில வேளைகளில் அரசியலுக்குள் உள்ளவர்கள் எதை பேசுகிறோம் என்பதை தெரிந்தோ தெரியாமலோ உண்மை களை கக்கி விடுவார்கள்.

அதுவும் சரி எதுவரை தான் உண்மைகளை அவர் களால் மறைக்க முடியும் என நீங்கள் கேட்பதும் புரிகிறது.

சரி விசயத்துக்கு வருவோம். அண்மையில் தென்னி லங்கையில் நடந்த நிகழ்வு ஒன்றில் சிறிலங்காவின் நிதி அமைச்சர் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் கடமை யாற்றும் பொலிசாரின் தகுதி நிலைகள் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் வடக்கு கிழக்கில் பணியாற்றும் பொலிசாருக்கு துப்பாக்கியால் சுடத் தெரிந்தால் போதும் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டு விடுவார்கள் என்றும். ஆனால் இந்த பொலிசாருக்கு சட்டம் ஒழுங்கை பேணக்கூடிய வகையில் சட்டம் தொடர்பான அறிவு கிடையாது எனவும் தெரிவித் துள்ளார்.

சரி அமைச்சர் அவர்கள் வடக்கு கிழக்கில் பணியாற்றும் பொலிசாரின் தகுதிநிலை பற்றி கூறிவிட்டார். அவர்களுக்கு வடக்கு கிழக்கில் எத்தகைய பணி வழங்கப்பட்டது எனக் கூறவில்லையே.

இல்லை.....இல்லை.... துப்பாக்கியால் சுடத் தெரிந்தால் போதும் கடமைக்கு நியமிக்கப்பட்டு விடுவார்கள் என கூறுவதன் மூலம் நாகரிகமாக அவர்களின் கடமையை குறிப்பிட்டுள்ளார் போலும்.

ஆனாலும் வடக்கு கிழக்கில் பணியாற்றும் பொலிசாருக்கு ஏன் தான் சட்டம் ஒழுங்கைப்பற்றிய அறிவு போதாது என அவர் கவலைப்படுகிறார், என்பது தான் தெரியவில்லை.

ஏனெனில் வடக்கு கிழக்கில் கடமையாற்றும் பொலிசார் மேற்கொள்ளும் காரியமே சட்ட விரோதமானது என்கிற போதும் அவர்களுக்குக்கேன் சட்டம். ஏன் ஒழுங்கு? தமிழர்களின் நிலங்களையும் தமிழர்களின் உடமைகளையும் கொள்ளையிட வந்த காக்கிச்சட்டைக் கொள்ளையர்கள் அல்லவா அவர்கள்.

அன்பான அமைச்சரே உமக்கு இது தெரியாதா?

இந்த நிலையில் முன்பொருமுறை நடந்த ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது.

அதாவது அநுராதபுரத்தில ஒரு பொலிஸ்காரரின் மனைவி இரண்டு தாலிக் கொடிகளை அணிந்திருந்தாவாம். இதைக் கண்ட எங்கட தமிழ் பெண்மனி ஒருவர் ஏன் இரண்டு தாலிக்கொடிகள் அணிந்துள்ளீர்கள் என்று கேட்டாவாம். அதற்கு அந்த பொலிஸ்காரனின் மனைவி ஏன் ஒரு தாலிக்கொடிதான் அணியவேண்டுமா எனக் கேட்டு தெரிந்து கொண்டாராம். அந்த பொலிஸ்காரன் யாழ்ப்பாணத்தில் கொள்ளை யடித்த தாலிக்கொடிதானாம் அது.

சும்மா கிடந்ததுதானே இரண்டை அணிந்தால் என்ன என்று அணிந்து கொண்டது தானாம் அது.

ஆகவே இத்தகைய நாட்டுப் பணி புரியும் சிங்கள பொலிசார் எப்படிச் சட்டத்தை தெரிந்துகொள்ளமுடியும்.

—வேழினி—

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# சந்திரிகா எழுதப்போகும் சோதினை...

நிலாந்தன்

ஐ.பி.கே.எவ் விற்கு எதிராக திலீபன் சாகும்வரை உண்ணாவிரதமிருந்தபோது ஒருகட்டத்தில் இந்தியா அவரைச் சாகவிடுவது என்று முடிவெடுத்தது. ஏனெனில் திலீபனின் கோரிக்கைகளுக்கு விட்டுக்கொடுத்தால் பின்னர் புலிகள் சாகும்வரை உண்ணாவிரதம் என்ற போராட்ட முறைக்குள்ளாலேயே எல்லாவற்றையும் சாதித்துவிடக்கூடும் என்று புதுடில்லி அஞ்சியது. எனவே திலீபனைச் சாகவிட்டால் அவரைப் போல வேறுயாரும் போராடத் துணிய மாட்டார்கள் என்றும் புதுடில்லி நம்பியது.

பொதுவாக, எல்லா ஆட்சியாளர்களும் அப்படித்தான் நம்புகிறார்கள். சாகும்வரை உண்ணாவிரதம் என்பது ஆகக்கடைசி ஆயுதங்களில் ஒன்று. எனவே அந்த ஆயுதத்தைக் கையாண்டு போராடுபவர்களின் கோரிக்கைகளுக்கு விட்டுக்கொடுத்தால் பின்னர் தமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு எல்லாருமே அந்த ஆயுதத்தை கையாளத்தொடங்கிவிடுவார்கள் என்றும் அவர்கள் அஞ்சுகிறார்கள்.

ஆனால் அப்படியொரு அச்சம் அண்மையில் கண்டியில் ஒரு பிக்கு சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தபோது சந்திரிகாவிடம் இருந்திருக்குமா என்பது சந்தேகமே. ஏனெனில் அந்தப்பிக்கு சாகத்துணியமாட்டார் என்று முடிவெடுப்பதற்கு பெரிய சிக்கலான தர்க்கம் எதுவும் தேவையில்லை. நாடாளுமன்றத்திற்கு போகவேண்டும் என்ற ஆசைகொண்ட ஒரு பிக்கு எப்படிச்சாகத்துணிவார்? அவர் சந்திரிகாவை மிரட்டத்தான் அப்படிச்செய்தார். அதி தீவிர இனத்துவேசிகளுக்கான தலைமைத்துவத்தை ஜே.வி.பியிடமிருந்து கைப்பற்றவேண்டும் என்பதற்காகவும் அவர் அப்படிச்செய்தார். இதைத்தவிர தனிப்பட்டமுறையில் அந்தப்பிக்குவும் அவரையொத்த எல்லாப்பிக்குக்களும் தம்முடைய பெருந்தேகங்களில் திரண்டிருக்கும் கொழுப்பைக் கரைப்பதற்குக் குறைந்தபட்சம் சில மாதங்களுக்காவது இருவேளை உணவை துறக்கவேண்டியிருக்கிறது என்பது வேறு விசயம்.

எனவே, பிக்கு சாகத் தயாராக இருக்கவில்லை. இது சந்திரிகாவுக்கும் தெரியும். சில நாட்களுக்காவது பிக்குவை வயிறுகாய வைத்துவிட்டு ஏதோ ஒரு விட்டுக்கொடுப்புக்கு வருவதுபோல சிறிது இறங்கிவர பிக்கு அந்தத் தருணத்தை அப்படியே பற்றிப்பிடித்துக்கொண்டு உண்ணாவிரதத்தைக் கைவிட்டுவிடுவார் என்ற கணிப்பு சந்திரிகாவிடம் இருந்திருக்கும்போலத் தோன்றுகின்றது என்பதால்தான் சந்திரிகாவுக்கு நெருக்கமான அமைச்சர் ஜெயரட்ண திலீபனைச் சுட்டிக்காட்டி பிக்குவைச் சீண்டினார்.

உண்மையில் பிக்குவின் உண்ணாவிரதம் சந்திரிகாவை முன்னரைவிடப் பலப்படுத்தியிருக்கிறது என்றே தோன்றுகிறது. சர்வதேச அரங்கில் அவருடைய கதாநாயகி அந்தஸ்து மேலும் உயர்ந்திருக்கிறது. அவர் ஏதோ சமாதானத்தின் தியாகி போல காட்சியளிக்கத் தொடங்கிவிட்டார். சர்வதேச அளவில் அவர் மீது அனுதாபம் பெருகிவருகிறது.

தனது அரசியல் எதிர்காலத்தைப் பணயம் வைத்து அவர் பொதுக் கட்டமைப்பை உருவாக்கப் போராடிக் கொண்டிருக்கிறார் என்று வெளிப்பார்வையாளர் வியக்கும் ஒரு நிலையை தென்னிலங்கையில் நிகழ்ந்துவரும் போராட்டங்கள் உருவாக்கிவருகின்றன.

அவர் பொதுக்கட்டமைப்பை உருவாக்கினாலும் சரி, உருவாக்காவிட்டாலும் சரி மேற்கு நாடுகளுக்குப் பதில் கூறத்தக்க ஒப்பீட்டளவில் பலமான ஒரு நிலையை படிப்படியாக அடைந்துகொண்டிருக்கிறார். அவர் இனி பொதுக்கட்டமைப்பை உருவாக்கமுடியாது போனாலும்கூட மேற்குநாடுகளுக்குச் சாட்டுக்கூற ஒரு பலமான காரணம் கிடைத்துவிட்டது. அதாவது ஜே.வி.பி, ஹெலஉறுமய போன்ற தீவிரமான சக்திகளின் எதிர்ப்பை மீறி செல்லமுடியாத ஒரு அரசியல் யதார்த்தம் கொழும்பில் உண்டு என்று அவர் மேற்குநாடுகளுக்குக் காட்டமுடியும்.

அவருடைய கடந்த சுமார் 10 வருடங்களுக்கு மேலான அரசியல் வாழ்வில் அவர் சந்திக்கப்போகும் ஒப்பீட்டளவில் பெரிய சோதினையாக இது மாறிவருகிறது. 1995இல் யாழ்ப்பாணத்துக்கான சமரை அவருடைய மாமனாரின் தலைமையில் செய்தபோது அதன் வெற்றிதோல்வி குறித்து எத்தகைய திகில் நிறைந்த எதிர்பார்ப்புக்களோடு அவர் இருந்திருப்பாரோ அப்படியொரு கட்டம் இப்பொழுது வந்திருக்கிறது.

சில தசாப்தங்களுக்கு முன்பு அவருடைய தந்தை எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க, எஸ்.ஜி.வி. செல்வநாயகத்துடன் ஒரு உடன்படிக்கையைச் செய்தபோது பிக்குக்கள் அதை வன்மமாக எதிர்த்தார்கள். செல்வநாயகம் ஒரு மிதவாதி அதோடு சத்தியாக்கிரகி. அன்றைக்கு அவரிடம் ஒரு கட்டுத்துவக்குக்கூட இருக்கவில்லை. ஆனால் இன்றைக்கோ படையணிகள் சகிதம் ஒரு விடுதலைப் பிரதேசத்தை வைத்திருக்கும் விடுதலைப்புலிகளுடன் பண்டாரநாயக்கவின் மகள் ஒரு உடன்படிக்கைக்குப் போகவேண்டியிருக்கிறது.

சிலசமயம் சந்திரிகா உடன்படிக்கையைச் செய்தாலும்கூட அதை அவர் தமிழர்கள் மீது திடீரென்று காதல்கொண்டு செய்ததாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. இது முழுக்க முழுக்க சர்வதேச நிர்ப்பந்தங்களுக்குள்ளாகி செய்யப்படுவதும் உள்நாட்டில் நிதிநெருக்கடிகளைக் கையாள்வதற்காக செய்யப்படுவதுமான ஒரு உடன்படிக்கையே. சுனாமி நிதி கிடைக்கவில்லை என்றால் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தமுடியாது என்ற ஒரு நெருக்கடி நிலையே அவர் இப்படியொரு சோதினைக்கு முகம்கொடுக்கவேண்டிய தேவைகளை உருவாக்கியிருக்கிறது. அதாவது தமிழர்களுடனான ஒரு தந்திரோபாய இணக்கமே இது.

மேலும் இது விசயத்தில் இந்தியாவை தமதுவழிக்குக்கொண்டு வருவதில் மேற்குநாடுகள் சில வெற்றிகளைப் பெற்றிருப்பதாகவும் எடுத்துக்கொள்ளமுடியும். இந்த வெற்றிகள் சில சமயம் தற்காலிகமானவையாகவோ அல்லது வெறும் தோற்றங்களாகவோ இருக்கக்கூடும். ஆனால் எதுவாயினும் இப்படியொரு உடன்படிக்கை ஏற்படுமாயிருந்தால் அது சமாதானத்தின் வழியில் காணப்படும் ஒரு சிறு தடையை அகற்றுவதில் கடந்த இரண்டு வருடங்களில் மேற்குநாடுகள் பெற்ற ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியாகவே எடுத்துக்கொள்ளப்படும்.

அதோடு இந்தப் பிராந்தியத்தில் மேற்கு நாடுகளின் மேலாண்மைக்கு இந்தியா எதுவரை நெகிழ்ந்து கொடுக்கும் என்பதற்கான ஒரு குறிகாட்டியாகவும் இதை எடுத்துக்கொள்ளலாம்.

ஆனால் இப்படியொரு பொதுக் கட்டமைப்பு சிலசமயங்களில் வந்தாலும் கூட தமிழர்கள் அதைக்குறித்து உடனடியாக பரவசப்படமுடியாது. ஏனெனில் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதை விடவும் ஆபத்தான சர்ச்சைகள் மிகுந்த நெருக்கடியான ஒரு கட்டமெனப்படுவது ஒப்பந்தம் செய்யப்பட்ட பிறகே உருவாகும். இலங்கைத்தீவின் இனப்பகை வரலாறு தமிழர்களுக்கு அப்படியொரு கசப்பான பாடத்தையே கற்றுத்தந்திருக்கிறது. அதாவது ஒப்பந்தங்களைச் செய்வதை விடவும் கடினமானது அவற்றை அமுல்படுத்துவதென்பதே.

ஒன்றில் எழுதப்பட்ட ஒப்பந்தம் மை காய முன்பே கிழிக்கப்படலாம். அல்லது கிடப்பில் போடப்படலாம். அதுவும் இல்லையென்றால் அதை அமுல்படுத்துவதில் நிர்வாக ரீதியில் நடைமுறைத் தடைகள் உருவாக்கப்படலாம்.

இலங்கை- இந்திய உடன்படிக்கையில் இது நடந்தது. அதில் கையெழுத்திட்டு ஒப்புக்கொண்ட விசயங்களை நிறைவேற்றுவதற்கு ஜெயவர்த்தனர் காலத்தை இழுத்தடித்தார். இப்போதுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் அப்படிப்பட்ட நிறைவேற்றப்படாத சரத்துக்கள் பலவுண்டு. ஜெயவர்த்தனா அளவுக்கு இல்லையென்றாலும் ரணிலும் கூட புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுல்படுத்துவதில் முழு அளவு இதயசுத்தியுடன் இருக்கவில்லை. பேச்சுவார்த்தைகளில் ஒப்புக்கொள்ளப்பட்ட சிலவிசயங்களை அவரும் நிறைவேற்றவில்லை. 'சிரானுக்கு' நடந்தது இதுதான். பொதுக்கட்டமைப்பு என்ற ஒன்று உருவாக்கப்படுமிடத்து அதற்கும் இந்தக் கதி வரலாம். எனவே காசு கைக்கு வந்துசேரும் வரைக்கும் தமிழர்கள் எதையும் நம்பமுடியாது.

ஒப்பந்தங்களைச் செய்வதை விடவும் அவற்றை அமுல்படுத்துவதில் இதயசுத்தியுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் நடந்துகொண்ட எந்த ஒரு சிங்களத் தலைவரையும் எடுத்துக் காட்டமுடியாத அளவுக்கே இலங்கைத்தீவின் குரூரமான வரலாறு காணப்படுகின்றது.

வெளிநிர்ப்பந்தங்களுக்கு விட்டுக்கொடுத்து அல்லது உள்நாட்டு நிதி நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக ஒரு தற்காலிகப் பின்வாங்கலாக ஒப்பந்தங்களைச் செய்துவிட்டு பின்பு தக்கதருணம் வரும்போது தமது வாக்குறுதிகளை தாமே சாப்பிட்டுவிடும் வழமையுடையவர்கள் சிங்களத் தலைவர்கள். தாங்கள் செய்ய விரும்பாதவற்றுக்கெல்லாம் தீவிரவாதிகளின் மீது பழியைப்போட்டுவிட்டு தப்பிவிடுவது அவர்களுடைய வழமையான உத்திகளில் ஒன்று.

மற்றது இனப்பகை மயப்பட்ட நிர்வாகக்கட்டமைப்பும் படைத்துறைக் கட்டமைப்பும் ஒப்பந்தங்களை அமுல்படுத்துவதில் நடைமுறைத் தடைகளை உருவாக்கமுடியும். இத்தகைய தடைகளை அரசாங்கம் கண்டும் காணாததுபோல் இருந்துவிடும். இதற்கு அண்மைக்கால உதாரணங்கள் சிலவற்றைக் காட்டலாம். கிழக்கில், புலிகளின் விமானத் தளம் ஒன்று அமைக்கப்படுவதாக சந்தேகத்தை எழுப்பி அங்கே புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீது ஒருவித உத்தியோக பற்றற்ற பொருளாதாரத் தடையை படையினர் விதித்துள்ளார்கள்.

மற்றது, புத்தர்சிலை விவகாரம் இதில் அவர்களுடைய நீதிமன்றில் அவர்களால் நியமிக்கப்பட்ட ஒரு நீதிபதி வழங்கிய தீர்ப்பையே அமுல்படுத்துவதற்கு அங்குள்ள அரச நிர்வாகக்கட்டமைப்பு தயாரில்லை.

எனவே உடன்படிக்கைகளைச் செய்வதைவிடவும் அவற்றை அமுல்படுத்துவது அதிகம் சோதினையானதாக மாறும் ஒரு அரசியல் நிர்வாகப்படைத்துறைக்கட்டமைப்பே இலங்கைத்தீவில் உண்டு. இந் நிலையில் பொதுக்கட்டமைப்பு ஒன்று வந்தாலும்கூட அதனை அமுல்படுத்துவது என்பது கூட அதிகபட்சம் வெளிச்சக்திகளின் அழுத்தங்களிலேயே தங்கியிருக்கப்போகிறது.

ஏற்கனவே யுத்தநிறுத்தத்தை அமுல்படுத்துவதில் அதைக் கண்காணித்துவரும் வெளிச்சக்திகளின் இயலாமை காரணமாக யுத்தநிறுத்தத்தை அரித்துக்கொண்டு செல்லும் ஒரு மென்தீவிர யுத்தத்தை கட்டுப்படுத்த முடியாதிருக்கிறது.

இந்த லட்சணத்தில் பொதுக் கட்டமைப்பில் கையொப்பமிடுவதல்ல பிரச்சினை. அதை எப்படி அமுல்படுத்துவது என்பதே அதைவிடப் பெரிய பிரச்சினை. சமாதானம் செய்யும் மேற்குநாடுகள் இதை விளங்கிவைத்திருக்கின்றனவா?







# புலுமச்சிநாதகுளம் கிராமத்தை வளமானதாக மாற்றுங்கள்

-சுழியன்-



இன்னும் வன்னியில் பல கிராமங்களுக்கு மூன்றாண்டு காலத்திற்கு மேலான அமைதியின் பயனெதுவும் கிட்டவில்லை. துப்பாக்கிச் சத்தங்களின் நிரந்தரமற்ற ஓய்வே சமாதானமாக எண்ணிக்கொண்டு தங்கள் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கின்றனர்.

அந்த வகையில்தான் அண்மையில் எமது பார்வைக்கு எட்டிய புலுமச்சிநாதகுளம் என்ற கிராமம், முல்லைத்தீவு மாவட்டத்தில், ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட இந்த கிராமம், யுத்தகால வடுக்களை, சுமைகளை முழுமையாகத் தாங்கிய கிராமம், ஜெயசிக்குறு இராணுவ ஆக்கிரமிப்புக் குட்பட்டு பெரும் அழிவினைச் சந்தித்த பிரதேசம். ஆனால் சமாதானத்தின் பயனை அனுபவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நான்கு பக்கமும் காடுகளால் சூழப்பட்ட இக்கிராமம் எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் காணப்படுகிறது. மக்களின் பொருளாதாரம் விவசாயம் மற்றும் கூலித் தொழில்களே. இருப்பினும் விவசாயத்தில் ஈடுபடுகின்ற மக்கள் அதில் எதிர்கொள்கின்ற பல பிரச்சினைகள் காரணமாக அதனை விடுத்து கூலித் தொழில்களை நாடிச் செல்கின்றனர்.

65 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் மக்களின் வாழ்க்கைத்தரம் என்பது மிகவும் பின்னோக்கிய நிலையிலேயே உள்ளது. பனை ஓலைகளால் வேயப்பட்ட சிறு குடிசைகளில் வாழ்கின்ற மக்கள் பெரும் சிரமங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். புலுமச்சிநாதகுளம் கிராமம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தில்லையம்பலம் லோகராஜா கூறும்போது,

எமது கிராமத்தில் எல்லாமே பிரச்சினைகள்தான். எவ்வித வசதிகளும் இல்லை. சமாதானத்தின் பின் பல கிராமங்கள் நல்ல முன்னேற்றத்தினை அடைந்துள்ளன. ஆனால் எமது கிராமத்தினை பொறுத்தவரை எவ்வித முன்னேற்றமும் இல்லை. இங்குள்ள வீதிகளை பார்த்திருப்பீர்கள் இருபக்கமும் அடர்ந்த காடுகளால் சூழப்பட்டு மிக மோசமான நிலையில் உள்ளதை. சிலவேளைகளில் பகல் நேரங்களில் யானைகள் ஊருக்குள் புகுந்துவிடுகின்றன. இதனால் அவசர தேவைக்குக்கூட போக்குவரத்துச்செய்யமுடியாத நிலை. அதைவிட விவசாயத்திற்கு யானைகளால் பெரும் அழிவுகள். இவ்வாறு பல பிரச்சினைகளை எதிர்கொண்டுதான் வாழ்ந்து வருகின்றோம். மீள குடியேறிய போது எமக்குக் கிடைத்தது 25000 ரூபா மட்டும்தான். அதன்பின் எவ்வித உதவியும் எமக்குக் கிடைக்கவில்லை. உதவி செய்பவர்கள் கூட பிரதான வீதிகளுடன் வந்து திரும்பிவிடுகின்றனர். எமது கிராமத்தினையும் வந்து பார்த்து உதவி செய்வதாகத் தெரியவில்லை. எனவே மக்கள் சார்பாக எமது வேண்டுகோள் என்னவென்றால் புலுமச்சிநாதகுளம் என்கிற இந்தக் கிராமத்தினை பழைய வளமான புலுமச்சிநாதகுளமாக மாற்றுவதற்கு உதவி செய்யுங்கள் எனக் கூறுகின்றார் கிராமஅபிவிருத்திச் சங்கத் தலைவர்.



1932ஆம் ஆண்டளவில் ஆரம்பமான இந்தக் கிராமத்தில் ஜெயசிக்குறு இராணுவ ஆக்கிரமிப்பால் 1997ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்கள் பின் மீண்டும் 2000ஆம் ஆண்டு மீளக் குடியேறியுள்ளனர். தரம் ஐந்துவரை உள்ள புலுமச்சிநாதகுளம் அ.த.க பாடசாலையில் ஒரு ஆசிரியர் மட்டுமே. அதிபரும் அவரே ஆசிரியரும் அவரே. எனவே பாடசாலை நிலைமை தொடர்பாக அதிபரிடம் கேட்டபோது,

இப்பாடசாலையில் தான் மட்டுமே கற்பித்தலில் ஈடுபடுவதாகவும் கல்வித் திணைக்கள கூட்டங்கள் சந்திப்புகள் என செல்லும்போது பாடசாலையை மூடவேண்டியநிலை ஏற்படுகிறது எனவும் கூறுகின்ற அதிபர், தான் கோட்டைகட்டிய குளத்தில் இருந்து இங்கு வந்து படிப்பிப்பதாகவும் ஆனால் தான் தங்கி நிற்பதற்கு விடுதி வசதிகள் இல்லை எனவும் சேதமடைந்து இருக்கின்ற விடுதியினை திருத்தித் தந்தால் பெரும் உதவியாக இருக்கும் எனவும் கூறுகின்றார்.

தற்போது ஒரு நிரந்தர கட்டடத்தில் இயங்குகின்ற பாடசாலையில் இருக்கின்ற ஒரு அறையிலேயே தங்கி நின்று கற்பித்தலை மேற் கொண்டு வருகின்றார். சுகயீனம் மற்றும் அவசரமான அத்தியாவசியமான குடும்பத்தேவைகளுக்குச் கூட விடுமுறை எடுக்கமுடியாது இருக்கின்றது. அவ்வாறு அதிபர் விடுமுறை எடுக்க நேர்ந்தால் கூட அந்தக் காலப்பகுதி யில் பாடசாலையை மூடுவதனைத்தவிர அங்கு வேறு வழியில்லை.

அதிபர் உட்பட மக்களின் வேண்டுகோள் என்னவெனில் சேதமுற்றிருக்கும் ஆசிரியர் விடுதியினைப் புனரமைப்புச் செய்வதோடு, மேலதிக ஒரு ஆசிரியரையும் நியமித்துத் தருமாறு கேட்கின்றனர்.

எனவே இவ்வாறான பாடசாலை நிலை ஒரு புறம் இருக்க இக்கிராம விவசாயிகளை பொறுத்தவரை தமது விவசாய உற்பத்திப்பொருட்களை பொறுத்தவரை சந்தைப்படுத்துவதற்கு பல கிலோ மீற்றருக்கு அப்பால் இருக்கின்ற கிளிநொச்சி சந்தைக்கே வரவேண்டிய நிலை உள்ளது. தமது உற்பத்திப் பொருட்களை எட்டுக்கிலோமீற்றர் தூரத்திலுள்ள மாங்குளத்திற்கு எடுத்துவந்து அங்கு இருந்து பேருந்து மூலம் கிளிநொச்சிச் சந்தைக்குக்கொண்டுவர வேண்டும். இதனால் கால தாமதம் ஏற்படுகிறது. அதன் விளைவு அவர்களது உற்பத்திப் பொருட்களுக்கு கேள்வி இல்லாமல் விலை வீழ்ச்சி ஏற்படுகிறது. பல்வேறு செலவுகளை மேற்கொண்டும் போதிய வருமானம் இன்மையால் விவசாயத்தினை விட்டுவிட்டு மக்கள் ... தொழிலை நாடிச் செல்கின்றனர். போதிய... நீர் வசதி மற்றும் வளமான நிலவள வசதி இருந்தும் மேற்போன்ற காரணத்தால் விவசாயத்தினை மக்கள் வெறுக்கின்றனர்.

தலைமயிர் வெட்டுவதற்குக்கூட எட்டுக்கிலோமீற்றர் செல்லவேண்டும் என்றால் பாருங்கள் எங்களது கிராமத்தின் நிலையை என்கிறார் ஒரு பெரியவர்.

இடம் பெயர்வுக்கு முன் ஆரம்ப சுகாதார நிலையம் இருந்ததாகவும் இப்போது இல்லை எனவும் கூறுகின்றார். தரம் ஐந்துக்குப் பின் கல்வி பயில ஒலுமடுப் பாடசலைக்குச் செல்லவேண்டும். காட்டுப்பாதை காரணமாக பெரும்பாலான மாணவர்கள் தரம் ஐந்துக்குப்பின் படிப்பதனை நிறுத்திவிடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.



பெருமளவு வசதிவாய்ப்புக்கள் அற்ற புலுமச்சிநாதகுள கிராமத்தில் சிறிய வானொலிப்பெட்டியினைத் தவிர வேறு எந்த இலத்திரனியல் பொருட்களும் இல்லை. ஒரு பக்கத்தில் உலகம் தகவல் தொழில் நுட்பத்தில் உள்ளங்கையில் சுழன்று கொண்டிருக்க வேறுபக்கம் மக்கள் பட்டினிக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

எனவே இந்தக் கிராமத்திற்கும் நவீன, ஆடம்பர வாழ்க்கையை ஏற்படுத்தி கொடுக்குமாறு கூறவரவில்லை, ஓரளவுக்கேனும் அடிப்படைத்தேவைகளையாவது பூர்த்தி செய்து அவர்களது வாழ்க்கைக்கு வழி காட்டுங்கள் என்றே நாமும் கூற விரும்புகின்றோம். ■



# பொதுக்கட்டமைப்பும் — மாறிவரும் அதன் பரிமாணமும்

-ஐங்கரன்-

பொதுக்கட்டமைப்பு பிராந்திய, சர்வதேசப் பிரச்சினைக்குரிய பரிமாணத்தை பெற்றுவிட்டது. கடந்த மாதங்களில் ஈழக்கோரிக்கைக்கு சமமாக பார்க்கப்பட்டது. இந்த மாதத்தில் சர்வதேசம் வரையும் எடுத்து செல்லப்பட்ட பிரச்சினையாக மாறிவிட்டது. இலங்கையை மட்டுமல்ல இந்தியாவையும் அமெரிக்காவையும் கூட பாதிக்கும் விடயமாகிவிட்டது. அவ்வகை வலுவுடைய பொதுக் கட்டமைப்புக்கான இந்திய நிலைப்பாட்டையும் கூடிவரும் அமெரிக்க- இந்திய நெருக்கத்தையும் நோக்குவோம்.

முதலில் இந்திய நிலைப்பாட்டின் யதார்த்தத்தை பார்ப்போம். இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் மற்றும் அதன் செயலாளர் ஷியாம் சரண் போன்றவர்களது வருகை பொதுக்கட்டமைப்பை ஆதரிப்பது போன்று காணப்பட்டாலும் அதனை எதிர்க்கும் சக்திகளையே அவர்கள் முக்கியத்துவப்படுத்தியிருந்தனர். சமாதானத்தையும் பொதுக்கட்டமைப்பையும் ஆதரிப்பதுபோன்று காட்டிக்கொண்டாலும் அவர்கள் அவற்றின் வரவை நிராகரித்துவிட்டனர்.

ஆரம்பத்தில் பொதுக் கட்டமைப்புப் பற்றி பேசும்போது முதலில் எதிர்த்தவர்கள் இந்தியர்கள்தான். அதற்கு தெளிவான சாட்சி ஆனந்தசங்கரி அவர்கள். அதுமட்டுமல்ல பொதுக் கட்டமைப்பின் ஆரம்பவடிவமே தெளிவாக இனங்காண முன்பு எதிர்த்தவர்கள் இந்தியர்கள் தமக்கான அரசியல் களத்தை உருவாக்கும் நோக்குடனேயே அவர்கள் செயற்பட்டனர். இலங்கையின் களநிலவரம் மிகத்தெளிவாகவும் துல்லியமாகவும் பொதுக்கட்டமைப்பை எதிர்க்கின்றது. என்பதன் பின்னர், அதற்கான தயாரிப்புகளும், போராட்டங்களும் சரியாக அமைந்த பின்னர் இந்தியா ஆதரிப்பதென்பதோ, எதிர்ப்பதென்பதோ பிரதான விடயமல்ல. இப்போதுகூட இந்தியத்தரப்பு நட்வர்சிங் நல்ல பேரோடுதான் இலங்கையைவிட்டு வெளியேறினார். அவர் பகிரங்கமாக அறிவித்தார் பொதுக்கட்டமைப்பை இந்தியா நிராகரிக்காது என்று. ஏனெனில் அவர்களுக்கு நன்றாகவே தெரியும் சிங்கள பௌத்தப் பேரினவாதம் பொதுக் கட்டமைப்பை அதன் வடிவத்திலோ, அர்த்தத்திலோ ஏற்றுக் கொள்ளாது என்பதாகும்.

அதனால் தெளிவாக தெரியும் விடயம் பொதுக்கட்டமைப்பின் எதிர்ப்புக்கு இந்தியத் தரப்புதான் காரணம் என்பதாகும். நட்வர்சிங் முதலில் சந்தித்தது ஆனந்தசங்கரி, மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகிய மாற்றுக் குழுக்களையும் அதன் தலைமைகளையுமே. அதன் பின்பு அரசாங்கத்திற்கு சவால் விடும் தலைமையை சந்தித்தார். இறுதியாக கண்துடைப்புக்கு தமிழ்க் கூட்டமைப்பையும், சனாதிபதியையும், எதிர்கட்சித் தலைவரையும் நட்வர்சிங் சந்தித்தார். இந்த ஒழுங்குபடுத்தலே ஒன்றை உணர்த்தியிருக்கும் இந்தியா எதனை விரும்புகிறதென்பதை.

இதற்கு இன்னோர் காரணமும் உண்டு. எப்படியாவது சேதுக்கால்வாய்த்திட்டத்தை அமுல்படுத்திவிடுவதென்பதாகும். தென்னிலங்கை புலமையாளர்கள் சேதுக் கால்வாயை நிராகரிக்க தொடங்கும் போது இந்தியா பொதுக்கட்டமைப்பை பெருப்பிக்கத் தொடங்கியது. இந்திய அடிவருடிகளுக்கு தங்கள் நலன் முதன்மை என்பதை கருத்தில் கொண்டு செயற்பட்டனர். குறிப்பாக தமிழ்த்தரப்பு பொதுக்கட்ட மைப்பு எதிரிகள் அவர்களே இந்தியாவுடன் சேர்ந்து நின்று சேதுக்கால்வாயை உருவாக்கும் முயற்சிக்கு எதிர்க்கருத்து ஏற்படாதவகையில் செயற்பட்டு வருகின்றனர்.

மறுபக்கத்தில் இன்னோர்விடயத்தையும் புரிந்து கொள்ளவேண்டும். பொதுக் கட்டமைப்பை முன்னிறுத்தி இந்தியத் தரப்பு இலங்கையை தமது பிடிக்குள் கொண்டுவர முயன்றுவருகிறது. 1998களில் போர் நிலையை ஆதாரப்படுத்தி வரியற்ற வர்த்தகத்துக்கு (குறிப்பிட்ட பொருட்களுக்கு) இலங்கையை உடன்பட வைத்ததோ அதேபோன்று தற்போது இந்தச் சூழலைப்பயன்படுத்தி தனது பெற்றோலிய வர்த்தகத்திற்கு தடங்களற்ற சூழலையும், சேதுக்கால்வாயையும் சாத்தியப்படுத்திவிட்டது. சேதுக்கால்வாய் இலங்கை போன்ற வறிய, சிறிய நாடுகளுக்கு பெரும் இந்தியாவின் தொழில்நுட்பத்திற்கும், வாய்ப்புகளுக்கும் முன்னால் இலாபம் கிடைப்பது கடினம். அந்தவகையில் இந்தியா இக்கட்டான நிலையைப் பயன்படுத்தி தென்னிலங்கையை விழுங்கிவருகின்றது. இது படிப்படியாக வளர்ந்துவருகிறது.

விடுதலைப் புலிகளின் கடற்படை, நீர்மூழ்கி, விமானப் படை என்றெல்லாம் சிறிய விடயங்களை ஊதிப்பெருப்பித்து இறுதியில் இந்தியாவின் உற்பத்திக்கான சந்தையாகவும்,இந்தியாவின் கொள்கைகளை அமுல்படுத்தும் மையமாகவும் தென்னிலங்கையை இந்தியா மாற்றுவதாகவே அமையும். இதன் பாதிப்பு தென்னிலங்கை அரசியல் சக்திகளுக்கு புரியும்போது அவர்களது கட்டுப்பாட்டில் அப்போது நாடு இருக்காதநிலை உருவாகும். தற்போது தந்திரசாலிகளாகவும் கெட்டிக்காரராகவும் விளங்கும் தென்னிலங்கை தீவிரவாதிகள் பிறிதொரு காலத்தில் முட்டாள்களாகும் நிலை ஏற்படும்.

இலங்கையின் யதார்த்தம் வித்தியா சமானது. காரணம் அதன் அமைவிடம் என்றே கூறவேண்டும். ஒருபோதும் இலங்கை முழுமையாக இந்தியாவிடம் சரணடைவதோ அல்லது மேற்கிடம் சரணடைவதோ நிகழவில்லை. மாறிமாறி ஆட்சிக்கு வந்த ஐ.தே.க. வும் சி.சு.க. இந்தியாவிடமும், மேற்கிடமும் மாறிமாறி தங்கியிருந்ததுடன் ஒருகாலத்தில் இந்தியா பக்கமும் மறு காலத்தில் மேற்கின் பக்கமுமே செயற்பட்டுள்ளனர். இந்த நிலையில் மாற்றம் ஏற்பட முனைவது இலங்கைக்கு ஆரோக்கியமானதல்ல. ஆனால் சந்திரிகா தலைமையிலான கடந்த தசாப்தம் இந்தியாவிடம் சரணடையும் நிலையே அதிகரித்துள்ளது. இதனால் அடுத்துவரும் தசாப்தம் ஆபத்தானதாக அமைய அதிக சந்தர்ப்பம் உண்டு.

அடுத்த பகுதிக்கு செல்வோம், இந்தியாவை இணைத் தலைமையாகக் கொண்ட வாஷிங்டன் மாநாடு இலங்கை விடயம் பற்றி ஆராய்கின்றது. ஏற்கனவே நிகழ்ந்த வாஷிங்டன் மாநாடே பேச்சுவார்த்தையின் போக்கை குழப்பியது. மீண்டுமொரு வாஷிங்டன் மாநாடு, நிதிவழங்கும் நாடுகளின் சந்திப்புக்கான நடவடிக்கை. இதில் இந்தியாவும் அமெரிக்காவும் கைகோர்த்துள்ளதுடன் அமெரிக்கா இந்தியாவை அணைத்துக் கொண்டு இப்பிரச்சினையை கையாள நினைக்கிறதா? அல்லது இந்தியாவுக்கு மீண்டுமொரு நெருக்கடியை உருவாக்கப்போகிறதா? என்பதே தற்போதைய கேள்வியாகும். எதுவாயினும் இலங்கைவிடயத்தை கையாள்வதில் இரண்டுதரப்புக்கும் ஒரேவகையான நோக்கம் இல்லாதுவிட்டாலும் சதிவேலைகளிலும் தமிழர் தரப்பை பலவீனப்படுத்துவதில் ஒன்றாகவே செயற்படக்கூடியவையாகவுள்ளன. இருதரப்பும் தமது செல்வாக்கில் இலங்கை இருத்தல் வேண்டும் என்று போட்டியிட்டாலும் தமிழ்த் தரப்பை பலவீனப் படுத்தும்வகையிலேயே செயற்படுகின்றன.

வாஷிங்டன் மாநாட்டில் பெருமளவுக்கு பொதுக்கட்டமைப்புப் பற்றியும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு பற்றியும் அதிகம் உரையாடப்பட்டிருக்கலாம். இந்த நிலையில் அரசை சமாதானத்தின் பால் ஊக்குவிப்பதாகக் கருதிக்கொண்டு அரசை பலப்படுத்தி தமிழர் தரப்பில் இணங்கியிருக்கும் இறுதி பொதுக்கட்டமைப்புத் திட்டத்தை உருச்சிதைக்க முனையப்படுமானால் குறிப்பாக பலஸ்தீன அதிகார சபையை அமைத்துவிட்டு அதற்கான நிதிக்கையாளுகையை யூதர்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது போல் செயற்படும் நிலை ஏற்படலாம்.

அத்தகைய பொதுக்கட்டமைப்பை தமிழர் தரப்பு ஏற்பதனைவிட ஒட்டுமொத்தமாக நிராகரிக்கும் நிலையே தவிர்க்க முடியாததாகும். எனவே பொதுக்கட்டமைப்பின் பலவீனம் நன்கு புரியக்கூடியதாக சூழல் அமைந்திருப்பதனால் அதற்கு அளவுக்கதிகமான ஆதரவைக் காட்டுவது அர்த்தமற்றது. அது கிடைப்பது கடினம் என்பதல்ல பிரச்சினை. கிடைப்பதனால் எந்தப்பயனும் ஏற்படப்போவதில்லை என்பதே தற்போதைய பிரச்சினையாகும். அத்தகைய நிலைக்குப் பின்பு அதற்காக போராடுவது அர்த்தமற்றதாகும்.

எனவே பொதுக்கட்டமைப்பை முளையிலே குழப்பியவர்கள் இந்தியர்கள். இப்போது அமெரிக்காவுடன் கூடி தமிழர் தரப்பை முறியடிக்கத் திட்டமிடுவதுடன், தமது வீட்டோ அதிகார மற்ற ஐ.நா உறுப்புரிமையை தக்கவைக்கமுயன்று வருகின்றனர்.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 17. 06 . 2005
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# சந்திரிகா என்ன செய்யப்போகிறார்

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே. வி. பிக்கும் இடையில் கடந்தவருடம் சனவரி 20ஆம் திகதி தொடங்கிய அரசியல் கூட்டுபந்தம் நேற்று நள்ளிரவுடன் முடிவுக்கு வந்துள்ளது.

இனி இரண்டு கட்சிகளும் தனித்தனிப்பாதைகளில் பயணத்தை மேற்கொள்ளும். ஆயினும் சேரக்கூடாதவர்களுடன் கூட்டுச்சேர்ந்ததன் பலனை சிறிலங்கா சுதந்திரக்கட்சி அனுபவித்து பலம் இழந்தநிலையில் சிறுபான்மை அரசாக நாடாளுமன்றத்தில் உள்ளது.

மரம் பற்றிப்படந்த கொடி பெற்றபலம் போல குறைந்த நாடாளுமன்ற ஆசனங்களைக்கொண்டிருந்த ஜே. வி. பி சுதந்திரக்கட்சியோடு கூட்டுச்சேர்ந்ததன்மூலம் தனது பலத்தை அதிகரித்துக்கொண்டு வெளியேறியுள்ளது. இனி சனாதிபதி சந்திரிகாவிடம் சனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரம் மட்டுமே கைவசமுள்ள நம்பிக்கை ஆயுதம்.

நாடாளுமன்றில் இதுவரை இருந்த 120 ஆசனங்களில் 39 ஆசனம் ஜே. வி. பிக்குரியது.

இந்தவகையில் ஜே. வி. பியின் வெளியேற்றத்தோடு சனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல சிக்கல்களை எதிர்கொள்ளப்போவதில்லை. பதிலாக மாகாண சபைகளிலும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியவராகவே உள்ளார்.

ஏனெனில் ஜே. வி. பிதான் அரசில் இருந்து விலகப் போவதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் பத்திரிகையாளர் மாநாட்டில் "இனிமேல் நாம் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்து சுயாதீனமாக இயங்கவல்ல கட்சியாகச் செயற்படுவோம். நாடாளுமன்றத்தில் மட்டுமல்லாமல் தென்னிலங்கையில் உள்ள மாகாணசபைகளிலும் எமது உறுப்பினர்கள் எதிர்க்கட்சியிலேயே அமர்வார்கள்,, என அறிவித்துள்ளது.

ஆயினும் ஜே. வி. பி அரசிலிருந்து விலகுவதற்காக கூரிய பொதுக்கட்டமைப்பு விடயத்திற்காக சனாதிபதி சந்திரிகாவின் அரசு ஒருபோதும் நாடாளுமன்றத்தில் அரசு கவிழும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படமாட்டாது என்பதே பொதுவான எதிர்பார்ப்பாக உள்ளது.

ஏனெனில் ஜே. வி. பி அரசிலிருந்து விலகிக் கொண்டாலும் அரசின் பிரதான பங்காளிக்கட்சியாக அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கொண்ட கட்சியாக முன்பு இருந்தபோதும் தனித்து அரசைக் கவிழ்க்கும் அளவிற்கு அதற்கு சக்தி கிடையாது.

அவ்வாறு அரசைக் கவிழ்க்கவேண்டுமாயின் ஏனைய எதிர்க்கட்சிகளின் துணையும் தேவை. ஆனால் ஏனைய கட்சிகள் பொதுக்கட்டமைப்பு விடயத்திற்காக அரசைக் கவிழ்க்கும் அளவுக்குப் போகமாட்டா. அதிலும் ஐக்கியதேசியக்கட்சி போகாதென்பதே பொதுவான எதிர்பார்ப்பு.

ஏனென்றால் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சியாக இருந்தாலும் சமாதான முயற்சியிலும் பொதுக் கட்டமைப்பு விடயத்திலும் அதற்கு ஒரு பொறுப்பு உண்டு. இதனைஅந்தக் கட்சியால் மீறி செயற்படமுடியாது என்பதே யதார்த்தம்.

இந்த நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனி எத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுக்கப்போகிறார் என்பதே பிரதான கேள்வியாகும். சனாதிபதி சந்திரிகாவின் முன் இப்பொழுது இரண்டு பிரதான விடயங்கள் உண்டு. ஒன்று தன்னுடைய அரசின் பிரதான கட்சிகளில் ஒன்று எதனைக்காரணங்காட்டி வெளியேறியதோ அந்தப் பொதுக்கட்டமைப்பு உருவாக்கத்தை விரைவாகச் செயற்படுத்துவது.

இரண்டாவது தனது அரசு இழந்துபோயிருக்கும் நாடாளுமன்ற பலத்தை மீண்டும் பெறுவதற்கு பலம் சேர்ப்பது. இதில் எதற்கு அவர் முன்னுரிமை அளிக்கப்போகிறார் என்பது தெளிவில்லை.

ஏனெனில் சனாதிபதி சந்திரிகாவின் அரசியலில் எதற்கு அவர் முக்கியத்துவம் அளிப்பார் என்பதை நிச்சயம் எவராலும் அறுதியிட முடியாது.

ஆனால் இப்பொழுது சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடுவதற்குத் தயக்கம் காட்டுவதற்கு அவரால் எந்தக் காரணத்தையும் கூறமுடியாது. இந்த நிலையில் உண்மையில் பொதுக் கட்டமைப்பு உருவாக்கத்திற்காகவே அவர் இத்தகைய நெருக்கடிகளைச் சந்தித்தவர் என்றால் பொதுக்கட்டமைப்பில் விரைவாகவே கையொப்பம் இடுவார் பதிலாக மேலும் அவர் தாமதிப்பாரானால் இதற்கு அப்பால் அவரிடம் பல நோக்கங்கள் இருப்பதாகவே சந்தேகிக்கவேண்டும்.

# ஜே.வி.பி—சந்திரிகா யாருக்கு என்ன இலாபம்



சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் கடந்த ஆண்டு சனவரி 20 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் அந்த இரு கட்சிகளுக்கும் இடையில் முறிவடைந்த யூன் 16 ஆம் திகதி வரை 532 நாட்களை கொண்ட ஒரு ஒப்பந்தமாக மிக சர்ச்சை மிகு கூட்டாக விளங்கியது.

இதே நேரம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு மிடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜே.வி.பி சுதந்திரக்கட்சி கூட்டு முறிவடைந்த யூன் 16 ஆம் நாள் 1212 நாட்களைக் கொண்ட ஒப்பந்தமாகத் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கிறது.

இதில் ஒரு கேள்வி சனநாயக நீரோட்டத்திலுள்ள இரண்டு கட்சிகளுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் ஆயுள் 532 நாட்களாக இருக்க, ஒரு சனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்ளாத ஒரு விடுதலை அமைப்போடு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 1212 நாட்களையும் கடந்து கெட்டியான ஆயுளுடன் உள்ளது.

இதில் முதலாவது செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக இலங்கை மக்களுக்கு ஒரு கொடிய யுத்தத்திலிருந்து தற்காலிக விடுதலையை அளித்தது என்றால் இரண்டாவது ஒப்பந்தம் முறிவடைந்ததன் மூலம் ஒரு யுத்தத்தை ஆதரிக்கும் போக்கு தூண்டிவிடப்படுகிறது.

இந்த நிலையில் மக்களுக்காக பாடுபடுவதாகவும் மக்களுக்காக உழைப்பதாகவும், உரத்துக் குரல் எழுப்பும் இந்த சனநாயகக்கட்சிகள் மக்களுக்கு எதனை பரிசளிக்க விரும்புகின்றன.

ஒரு யுத்தத்தை நிறுத்துவது என்பது அதன் மூலமாக மக்களுக்கு நன்மையை ஏற்படுத்துவதையையே நோக்காக கொண்டிருக்கும். இந்த நோக்கத்தின் ஒரு கட்டமான ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகக் கோரப்படுகின்ற பொதுக்கட்டமைப்பைக் காரணம் காட்டி அரசிலிருந்து ஜே.வி.பி வெளியேறியது என்றால் அந்த கட்சியின் நோக்கம் என்ன என்கிற சந்தேகம் எழவே செய்கிறது.

இந்த நிலையில் சுதந்திரக் கட்சி ஜே.வி.பி கூட்டு மூலமாக யாருக்கு என்ன இலாபம் என்கிற கேள்வி எழத்தான் செய்கிறது.

முதலாவதாக ஜே.வி.பியின் கணக்கின் படி சுதந்திரக் கட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதன் மூலமாக சுதந்திரக் கட்சிக்குரிய தனித்துவத்தை சிதைப்பதில் அது ஓரளவு வெற்றிக் கண்டது என்பது உண்மையே.

இரண்டாவது ஜே.வி.பி சுதந்திரக் கட்சியுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் மூலமாக தன்னுடைய ஆதரவுத் தளத்தை விஸ்தரித்துக் கொள்வதற்கு பயன் படுத்திக் கொண்டது.

மூன்றாவது சுதந்திரக் கட்சியோடு ஒப்பந்தம் செய்து கொண்ட போதும் ஜே.வி.பி இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்பதோடு அதனை யாருக்கும் தாரைவார்த்துக் கொடுத்து விட அனுமதிக்காத ஒரு நாட்டு பற்றுள்ள கட்சியாக சிங்கள மக்கள் மத்தியில் தன்னை பறைசாற்றிக் கொண்டுள்ளது.

இப்படி ஜே.வி.பி சுதந்திரக் கட்சியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மூலமாக பெற்றுக் கொண்ட நலன்களை அடிக்கிக் கொண்டே போகலாம்.



இவ்வாறு சுதந்திரக் கட்சியைப் பற்றிக் கொண்டு ஜே.வி.பி அசுரகதியில் வளர்ச்சி பெறுவது என்பது சுதந்திரக் கட்சிக்கு ஒரு பேராபத்தாக முடியும் என்பதை ஒரு கட்டத்தில் சனாதிபதி சந்திரிகாவும் சுதந்திரக் கட்சிக்காரரும் உணர்ந்து கொண்டனர்.

இதன் மதிப்பீட்டின் விளைவுதான் ஜே.வி.பி சுதந்திரக் கட்சியைவிட்டு வெளியேறுகின்ற விடயத்தில் சந்திரிகாவோ, சுதந்திரக் கட்சிக்காரர்களோ அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

இதற்கு சனாதிபதி சந்திரிகாவிடமும் சுதந்திரக் கட்சிக் காரரிடமும் ஒரு மதிப்பீடு உண்டு.

அதாவது ஜே.வி.பியுடன் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தத்தின் மூலமாக சுதந்திரக் கட்சி எதையெல்லாம் இழந்ததோ அதன் ஒரு பகுதியையாவது இதன் மூலமாக நிவர்த்தி செய்து கொள்ளலாம் என்பதே சந்திரிகாவின் நோக்கம்.

சந்திரிகாவுக்கு இந்த சனாதிபதி பதவிக் காலத்தோடு அவரின் சனாதிபதிக் கனவு நிறைவுக்கு வருகிறது.

இந்த நிலையில் சனாதிபதி சந்திரிகா தன்னுடைய இரண்டு பதவிக் காலங்களிலும் இலங்கை அரசியலிலும் சர்வதேசத் தளத்திலும் ஒரு நெருடல் மிக்கவராகவே இனங் காணப்பட்டிருக்கிறார்.

ஆயினும் சனாதிபதி சந்திரிகாவுக்கு சனாதிபதிக் கனவு கலைகின்றபோதிலும் அரசியல் மீதிலான பற்று அல்லது பொது வாழ்வின் மீதான பற்று அறுந்து போய் விடவில்லை.

ஆகவே அவரின் அடுத்த இலக்காக ஒரு வெற்றிடத்தை நோக்கி அவரின் பார்வை குவிமையம் கொள்ளவே செய்கிறது. இதற்காக அவர் இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் ஒரு நற்பெயரை சம்பாதிக்க வேண்டிய ஒரு சூழல், ஒரு நிர்ப்பந்தம் அவருக்கு இருக்கவே செய்கிறது.

இதற்கான ஒரு களமாகவே ஜே.வி.பி யுடனான இந்த முறுகல் நிலையை தோற்றிவித்து ஜே.பி.பி.யின் செல்வாக்கைச் சரித்து தன்னுடைய செல்வாக்கை உயர்த்தி சர்வதேசத்தில் தன்னை ஒரு கவனத்திற்குரியவராக மாற்ற முயல்கிறார் என்கிற சந்தேகம் இருக்கவே செய்கிறது.

ஏனென்றால் பலமும் அதிகாரமும் கையில் இருக்கின்றபோது எடுக்காத துணிவை சனாதிபதி சந்திரிகா இப்போது எடுக்கத் துணிகிறார்.

இதேநேரம் சனாதிபதி சந்திரிகாவுக்கு பொதுக்கட்டமைப்பு விடயம் தொடர்பாக புறம் தள்ளிவிட முடியாத ஒரு சர்வதேச அழுத்தம் பலமாகவே அவரை அழுத்திக் கொண்டேயிருக்கிறது.

இந்த அழுத்தத்தின் முன் சந்திரிகாவால் எதுவுமே செய்ய முடியாது என்ற நிலைமையே யதார்த்தத்தில் காணப்படுகின்றது. இதனால்தான் சந்திரிகா இவ்வாறு துணிந்திருக்கிறார்.

இந்த நிலையில் நாம் முதலில் பார்த்த சுதந்திரக்கட்சி ஜே.வி.பி கூட்டின் மூலமாக யாருக்கு என்ன இலாபம் என்று பார்த்தால் உண்மையில் ஜே.வி.பியைப் பொறுத்தமட்டில் இனவாதத்தைத் தளமாகக்கொண்ட பெரும் பரப்பில் தன்னுடைய செல்வாக்கைச் சற்று அதிகரிக்கவே செய்துள்ளது.

ஆனால் சந்திரிகாவுக்கு ஒரு குறுகியநேர 'கவுண்டவுண்' எனச் சொல்லக்கூடிய இறங்குவரிசை நாள் எண்ணிக்கையை வழங்கியதன் மூலமாக சந்திரிகாவுக்கு மட்டுமன்றி ஜே.வி.பிக்கும் ஒரு நெருக்கடியை 'ஜே.வி.பி தோற்றுவித்ததென்பதே உண்மை.

ஏனெனில் அரசியலில் மந்த கதியும் ஆபத்தை ஏற்படுத்தும், அதி தீவிரமும் ஆபத்தை ஏற்படுத்தும். சுதந்திரக்கட்சியைப் பொறுத்தவரைக்கும் நீண்ட பாரம்பரிய அரசியலின் பயனாக அது பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் ஜே.வி.பியை போன்று ஒரு அதிதீவிர அரசியலைச் செய்யமுயலவில்லை. ஆனால் ஜே.வி.பியோ அதிதீவிர அரசியலை நம்பியே தன்னுடைய அரச பதவிக்காலத்தைப் பயன்படுத்தியது.

**சிறி. இந்திரகுமார்**

இந்த நிலையில் ஜே.வி.பிக்கும் சுதந்திரக்கட்சிகுமிடையிலான இலாபம் எனப்பார்க்கும்போது சந்திரிகா பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடும் பட்சத்தில் தன்னுடைய செல்வாக்கை சர்வதேச மட்டத்தில் உயர்த்தலாம். ஆனால் ஜே.வி.பியோ அரசை விட்டு வெளியேறியதன்மூலம் இனவாதப்பரப்பில் மட்டும் தன்னுடைய செல்வாக்கைச் சற்று அதிகரிக்கச்செய்யலாமே ஒளிய வேறெந்தத் தளத்திலும் அதனால் எதனையும் செய்யமுடியாது என்பதே கள நிலவரம்.

இந்தவகையில் சனாதிபதி சந்திரிகா தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர் ஜே.வி.பியை ஒரு பொருட்டாக மதிக்காமல் விட்டு பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக துணிவாக எந்தக் காரியத்தை எடுத்தாலும் கூட அவர் ஒரு அரசியல் தியாகியாகிவிட முடியாது.

ஏனெனில் தமிழர்களின் நலன் என்பதைவிட சந்திரிகாவின் நலன்களே இந்தநாகடத்தில் அதிகம் புதைந்துகிடக்கிறது.

# ஆட்சியாளர்களின் தேவை



தமிழ் மக்கள் தமது உரிமைகள் தொடர்பாக மிக நீண்ட போராட்டம் நடத்தியிருகிறார்கள். இலங்கையை விட்டு பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் வெளியேற முன்னரும் வெளியேறிய பின்னரும் கூட இலங்கைத்தீவில் தமது உரிமைக்காக போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

இந்தப் போராட்டம் ஆரம்பகாலத்தில் இலங்கை என்ற கட்டுக்கோப்பின் கீழ் சகல இன மக்களுடனும் இணைந்து உரிமையுடன் வாழ்வதற்கானதாக இருந்தது. ஆரம்ப காலத்தில் அதாவது பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலும் பிரிட்டிசார் இலங்கையை விட்டு நீங்குகிற சமயத்திலும் கூட சிங்கள மக்களுடன் இணைந்து ஒற்றுமையாக தமது உரிமைகளுடன் வாழ்வதே அவர்களது நோக்கமாக இருந்தது.

அதேவேளை அரசியலமைப்பு ரீதியாக இந்த உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் அன்றைய தலைவர்கள் உறுதியாகஇருந்தார்கள். ஆனால் இலங்கையின் அரசியலமைப்புகள் அந்தப் பாதுகாப்பை வழங்கத் தவறிவிட்டன. அதன் காரணமாக தமிழ்மக்களின் தலைவர்களால் அந்த அரசியலமைப்புகள் நிராகரிக்கப்பட்டன. அத்துடன் உரிமைக்கான தமிழ் மக்களின் போராட்டம் என்றுமே கைவிடப்படவில்லை.

ஆரம்ப காலப் போராட்டங்கள் நாடாளுமன்றத்திலும் நாடாளுமன்றத்துக்கு வெளியேயும் அகிம்சை தழுவிய ரீதியிலேயே மென்முறைப் போராட்டங்களாகவே நடைபெற்றன. ஆனால் அவை சிங்களத்தலைவர்களால் கேலிக்குரியனவாகவே பார்க்கப்பட்டன.

1972 ஆம் ஆண்டு சிறிலங்காவின் குடியரசு அரசியல் யாப்பானது தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாது முழு சிறுபான்மையினருக்கும் அரசியல் யாப்பு ரீதியாக வழங்கப்பட்டிருந்த சிறிய பாதுகாப்பையும் இல்லாது ஒழித்தது.

முன்னைய அரசியல் யாப்புகளுக்கு ஆலோசனைகளை வழங்கிய தமிழ்த் தலைவர்கள் இந்த அரசியல் யாப்பை உருவாக்க அமைக்கப்பட்ட அரசியல் யாப்பு நிர்ணய சபையையே முற்றாகப் புறக்கணித்தனர். இந்த அரசியல் யாப்பை தீயிட்டு எரித்தனர்.

இவ்வாறு தொடர்ந்த போராட்டத்திற்கு சிங்கள அரசாங்கங்கள் வன் முறை ரீதியாக வழங்கிய பதிலடிகளும் திட்டமிட்டு தமிழ் நிலங்கள் அபகரிக்கப்பட்டமையும் காலத்துக்குக் காலம் தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட இனப் படுகொலைகளும் அவர்கள் வாழ்வாதாரமாகக் கொண்ட கல்வி மறுக்கப்பட்டமைதான் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாற வழி கோலியது.

இந்தப் போராட்டத்தை கொடூரமாக ஒடுக்க சிங்கள ஆட்சியாளர்கள் மேற்கொண்ட இராணுவ வன்முறையும் தமிழ் மக்களுக்கு பெரும் துன்பத்தை விளைவித்தன. ஆனால் தமிழ் மக்கள் தங்கள் உரிமைக்காக எத்தனை தூரமும் போராடக் கூடியவர்கள் என்பதை சிங்கள ஆட்சியாளருக்கு எடுத்துக்காட்டியது.

இந்தப் போராட்டத்தின் உச்சக் கட்டத்தில் சிங்கள ஆட்சியாளர்கள் சந்தித்த தோல்வி அவர்களை தமிழர்களுடன் சமரசம் பேசும் நிலைக்குத் தள்ளியது.

ஆனால் இந்த மூன்று ஆண்டுகாலமானது உண்மையில் அவர்கள் தமிழ் மக்களுடன் சமரசத்திற்கு- தமிழ் மக்களுடன் இணைந்து சமாதானமாக வாழத் தயாராக இருக்கிறார்களா என்ற கேள்வியை வெளிப்படையாகவே எழுப்புகிறது.

அதிலும் கடந்த வாரமும் இவ்வாரமும் தீவிரம் பெற்றுள்ள தென்னிலங்கையிலுள்ள இனவாதிகளின் செயற்பாடுகள் இந்தக் கேள்வியை பலமாகவே எழுப்புகிறது.

உலகமே அனுதாபத்துடன் பார்த்து உதவிக்கரம் நீட்ட ஓடோடி வந்த ஒரு துன்ப நிகழ் வில் சிக்கியுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதை ஒருங்கிணைக்க அல்லது கண்காணிக்க ஓர் அமைப்பு உருவாக்கப்படுவதற்கு எதிராகத்தான் இவ்வளவு ஆரவாரமும் என்னும் போது எவ்வாறு இக்கேள்வியை எழுப்பாதிருக்க முடியும்?

இணைந்து வாழுதல் என்பது பரஸ்பரம் நம்பிக்கை, புரிந்துணர்வு, பெருமளவு விட்டுக்கொடுப்பு என்பவற்றின் மத்தியில்தான் நிகழக் கூடியது. தமிழ் மக்கள் தரப்பில்- அதாவது ஒடுக்கப்படுகின்ற மக்கள் தரப்பில் மட்டும் இவை இருந்தால் போதாது. மனிதாபிமான அடிப்படையிலான பிரச்சினையில் கூட இவை எதுவும் மறுதரப்பிலிருந்து கிடைக்கவில்லை.

முன்னர் போரினால் அழிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வைச் சீர் செய்ய சிரான் உருவாக்கப்பட்டபோது எழுந்த எதிர்ப்பை விடவும் மோசமாக இந்தச் சுனாமி அனர்த்த நிவாரணப் பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புகள் எழும்பியுள்ளன.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ள எதுவுமேயில்லை. சிங்கள மக்கள் தமிழ் மக்களுடன் இணங்கி வாழ விரும்பினாலும் சிறிலங்காவின் ஆளும் வர்க்கம் அதற்கு அனுமதிக்குமாற் போல இல்லை. 1994 இல் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் 2001 ஆம் ஆண்டில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சிங்கள மக்கள் தெளிவாக சமாதான முறையில் தீர்வு காண ஆணை வழங்கினார்கள். ஆனால் சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்த அவர்கள் தவறிவிட்டனர். அத்துடன் முன்னரை விட மோசமான நிலையையும் உருவாக்கியுள்ளனர்.

இதன் காரணமாக இனவாதிகள் எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்து விட்டார்கள் என்பது இப்பொழுது தெளிவாகியுள்ளது. இது காலம் காலமாகவே தொடர்கின்றது. ஆட்சியாளர்களுக்கு தேவையானதும் இதுதான்.

**வேலவன்**

## நேர்நோக்கு

# மக்களை ஆபத்துக்குள்ளாக்கும் செயல்!



இப்போதுள்ள இலங்கைத்தீவில் பயம், பதட்டம், பீதி, போராட்டம், கொலை, கொள்ளை என எங்கு பார்த்தாலும் எதைப்பார்த்தாலும் ஒரே குழப்பமான அமைதியற்ற சூழ்நிலையே தொடர்கின்றது.

மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலை ஒழிந்து எந்நேரமும் ஏதோவொரு பயத்தின் மத்தியில் வாழ்ந்துகொண்டிருப்பதனைக் காணமுடிகின்றது. சிறிலங்காவில் ஏறபட்டுள்ள அரசியல் நெருக்கடிகள், யுத்தநிறுத்த உடன்படிக்கை முறிவடைந்து மீண்டும் போர் மூளுமா என்ற அச்சம் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு அப்பால் அண்மைக்காலமாக கிழக்குப் பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்ற நடவடிக்கைகள் தமிழர்களை வெறுப்பேற்றுவதாகவே அமைந்துள்ளன.

அதாவது திருகோணமலை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் விமானத்தளம் இருப்பதாகக் கூறி அப்பிரதேசத்திற்கான ஒரு பொருளாதாரத் தடையை விதித்தமை, போராளிகள் மீதும் அரசியல் பிரிவு அலுவலகங்கள் மீதும் தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொள்கின்றமை போன்ற விடயங்கள் தமிழர் தரப்பினை வெறுப்படையச்செய்வதோடு அவர்களை பொறுமை இழக்கச் செய்து யுத்தத்திற்கு வலிந்து இழுப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வாறான ஆத்திரமூட்டுகின்ற செயற்பாடுகளின் தொடர்ச்சியாக அண்மையில் மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஆகும். போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பு இது மூன்றாவது தடவையாக தங்கள் அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர். தமது அலுவலகங்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்கள் தொடர்பாக சிறிலங்கா பொலிசாரிடம் முறையிட்டும் இதுவரை எவ்வித பயனும் இல்லை எனவும் தமிழர் புனர்வாழ்வுக்கழக தரப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

எனவே இதிலிருந்து நாம் ஒன்றை தெளிவாக விளங்கிக்கொள்ளலாம். அதாவது வேலி எப்போதும் பயிரை மேய்வதில்லை என்பதனை கிழக்கு மாகாணங்களில் இவ்வாறு தமிழர் தொடர்பான தாக்குதல்களை மேற்கொள்பவர்களை சிறிலங்காவின் காவலர்கள் எனக் கூறிக்கொள்கின்றவர்கள் தீனிபோட்டு வளர்க்கின்றனர். அவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்பவர்களை இவர்களே வேலி போன்று நின்று பாதுகாக்கின்றனர். தமிழர்கள் மீதும் அவர்கள் சார்ந்து செயற்படுபவர்கள் மீதும் இவ்வாறானவர்களை பயன்படுத்தி தாக்குதலையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் தங்களது அலுவலகம் மீது தாக்குதல்கள் மேற்கொண்டவர்கள் மீதும் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் சிறிலங்காப் பொலிசார் மேற்கொள்ளவில்லை என்பதானது எந்தப்பயனையும் விளைவிக்கப்போவதில்லை என்பதையே காட்டுகிறது. ஏனெனில் ஒருபோதும் வேலி பயிரை மேயப்போவதும் இல்லை. வேறு எவரும் மேய அனுமதிக்கப் போவதும் இல்லை. இதுதான் இலங்கைத்தீவில் தமிழர்கள் தொடர்பாக சிங்களப் பேரினவாதத்தின் நிலைப்பாடு.

இத்தீவை தனிச் சிங்கள பௌத்த தீவாக மாற்றக் கனவுகண்டுகொண்டிருக்கும் பேரினவாதிகளை இவ்வாறான நடவடிக்கைகள் ஊக்குவிப்பார்களே தவிர கட்டுப்படுத்தமாட்டார்கள்.

இலங்கையின் சமூக சேவைத் திணைக்களத்தில் அதனது சட்ட விதிகளுக்கு அமைய பதிவுசெய்யபட்ட ஒரு அரச சார்பற்ற மனிதாபிமான உதவிகளை செய்கின்ற ஒரு அமைப்பின் மீது தாக்குதல்கள் நடத்தியுள்ளனர் என்றால் அவர்கள் நிச்சயமாக மனிதநேயம் மிக்கவர்களாக இருக்கமாட்டார்கள். காட்டுமிராண்டித்தனமாக இவ்வாறான செயற்பாடுகள் தொடருமானால் பல மோசமான விளைவுகளை இனவாத அரசும், அதன் படைகளும் சந்திக்கநேரிடும் என்பதில் சந்தேகமில்லை.

இத்தீவை சுனாமிப் பேரலை தாக்கிய போது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடு அளப்பரியது. அதனை சர்வதேசச் சமூகமும் நன்கு புரிந்து கொண்டது.

இந்த நிலையில் இராணுவ நெருக்கடி மற்றும் சுனாமிப் பேரலையினால் அவதியுற்ற அப்பாவி மக்களுக்கு மனிதாபிமான பணியினை மேற்கொண்டுவரும் ஒரு தொண்டு நிறுவனத்தின் மீதான தாக்குதல்களானது மக்களிற்குக் கிடைக்கும் மனிதாபிமான உதவிகளை தடுக்கும் நோக்கத்தைக் கொண்டதே தவிர வேறொன்றுமில்லை.

கிழக்கு மாகாணத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியை முடக்க அரச படைகளும் அவற்றோடு சேர்ந்தியங்கும் குழுக்களும் முழுமூச்சோடு செயற்படுகின்றமை தெரிந்ததே.

முன்னரும் இவ்வாறுதான் மன்னார் உயிலங்குளம் பாதையூடாக புனர்வாழ்வுக் கழக கிளைகளுக்குப் பங்கிடவென கொண்டுசெல்லப்பட்ட ஒரு தொகை நிதியினை சிறிலங்காப் பொலிசார் கைப்பற்றி பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தியிருந்தமை.

எது எப்படியோ பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை சென்றடைய விடாமல் தடுக்கத் தீவிரம் காட்டப்படுகின்றமை அதிகரிக்கின்றன.

**மு.தமிழ்ச்செல்வன்**

# சிவராம் கொலையின் மர்மக்கரம் 'புளொட்'

தமிழ், ஆங்கில ஊடக உலகின் பிரபல்யமானவராக விளங்கிய பிரபல ஊடகவியலாளரும், அரசியல் இராணுவ ஆய்வாளருமான டி.சிவராம் (தராகி) 28.04.2005 இரவு பம்பலப்பிட்டியில் வைத்து ஜீப் வண்டியில் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் PLOT இயக்கத்திற்குச் சம்பந்தம் இருப்பதாக அரச பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்திருக்கிறது.

மாமனிதர் சிவராமின் படுகொலையுடன் தொடர்புபட்டதாகக் கூறப்பட்டு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் (PLOT) சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள் இருவர் கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இக் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கைதுசெய்யப்பட்டவர்கள் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் PLOT தலைவர் சித்தார்த்தனின் செயலாளரும், PLOT இன் மத்திய குழு உறுப்பினரும், சித்தார்த்தனின் வாகனச் சாரதியும், ஆலோசகருமான பீற்றர் என்று அழைக்கப்படும் அ.சிறிஸ்கந்தராஜாவும் மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

PLOT இயக்கமே சிவராமை கொலை செய்ததாக பொலிஸ் திணைக்களம் நம்புகின்றது. அதற்கு தம்மிடம் உறுதிப்படுத்தக்கூடிய தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் அது கூறுகின்றது.

சிவராமை PLOT இயக்கம் படுகொலை செய்தமை தொடர்பாகவும், PLOT இற்கும் சிவராமுக்குமான கடந்தகால உறவுகள், முரண்பாடுகள், கசப்புணர்வுகள், அரசியல் நோக்கங்கள் தொடர்பாக PLOT இயக்கத் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்ததனும் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தராகியின் கொலையுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர் எனக் கருதப்படும் தர்மலிங்கம் சித்தார்த்தனின் பிரத்தியேகச் செயலாளரும், நெருங்கிய தோழருமான RR என்று அழைக்கப்படும் ராகவன் பொலிசாரினால் தேடப்பட்டு வருகின்றார். ராகவன் தற்போது தலைமறைவாகி விட்டதாகக் கூறப்படுகிறது. ராகவனைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி பொலிசார் சித்தார்த்தனுக்குக் கட்டளையிட்டுள்ளனர். ஆனால் ராகவனைச் சித்தார்த்தன் நாட்டைவிட்டு அனுப்பிவிட்டதாகவும் ஒரு தகவல் தெரிவிக்கின்றது. அதேவேளை ராகவன் இராணுவப்புலனாய்வுப் பிரிவுடன் நெருங்கிச் செயற்படுபவர் என்று தெரியவருகிறது. அதனால் ராகவனைப்பாதுகாக்க புலனாய்வுத்துறை முயன்றுவருவதாகவும் கருதப்படுகின்றது.

சிவராம் கொலையுடன் கருணா குழுவுக்குச் சம்பந்தம் இருப்பதாகக் கருதப்படுவதனால் கருணா கும்பலுடன் ENDLF மற்றும் PLOT அமைப்பு என்பன இணைந்து இக் கொலையைச் செய்திருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது. அதேவேளை இக் கொலையுடன் தமிழ் அமைச்சர் ஒருவருக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளதாக பொலிசார் கூறுகின்றனர்.

சிவராம் கொலையுடன் PLOT இற்கு தொடர்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டமைக்கு மூலகாரணமான தடயமாக சிவராம் கடத்தப்பட்டவேளை அவரின் கவனத்தைத் திசை திருப்பி அவரை நிறுத்துவதற்காக சிவராமின் தொலைபேசிக்கு வந்த அழைப்பு PLOT உறுப்பினர் ஒருவரின் தொலைபேசியில் இருந்து வந்த அழைப்பு என்பதனை பொலிசார் கண்டுபிடித்திருக்கின்றார்கள். அவர்தான் தற்போது கைதுசெய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

சிவராம் 1980களில் தமிழீழ விடுதலைக்கான புரட்சிகரப் போராட்டப்பாதையில் தன்னை இணைத்துக்கொண்டவர். அவர் PLOT இயக்கத்தில் இணையும் போது பல்கலைக்கழக மாணவனாகக் கல்வி கற்றுக்கொண்டிருந்தார்.



சிவராம் இயல்பாகவே யதார்த்தத்துடன் ஒப்பிட்டு சீர்தூக்கிப்பார்க்கும் தன்மையுடையவர். எவருடைய கருத்துக்களையும் முழுமையாக ஏற்றுக்கொள்பவர் அல்ல. சொந்தத் தீர்மானத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவராகவும் இருந்தார். அதாவது நினைத்ததை எடுத்துச் சொல்லும் ஊடகவியலாளருக்கு இருக்கும் குணம் அவருடன் இருந்தது. தனது சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுப்பவராக இருந்தார். இதனால் அன்றைய காலத்தில் PLOT இயக்க உறுப்பினர்களுடன் முரண்பட்டும் இருக்கின்றார்.

சிவராம் தமிழீழ சுதந்திரப் போராட்டத்திற்காக மண்பற்றுடனும், இனப்பற்றுடனும் போராடப் புறப்பட்டவர். அவர் சோரம் போகாத மனிதராக இருந்தமையினாலும் கொள்கையில் தெளிவும் உறுதியும் இருந்தமையினாலும் PLOT இயக்கம் வழி தடுமாறியபோது சிறிது காலம் அதில் மூழ்கிப் போனாலும் பின்னய நாட்களில் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டார்.

தமிழீழ தேசியப் போராட்டத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கொள்கைக்கு ஏற்பவும் தன்னைப் புடம்போட்டுக்கொண்டார்.

PLOT இயக்கம் தவறான வழிக்குச் சென்றபோதும், அதன் கொள்கைக்கு எடுபடாததினால் அவர்களின் சீற்றத்திற்கு ஆளாகினார்.

சிவராம் தனது ஆளுமையாலும், திறமையாலும் யதார்த்தத்தை சீர்தூக்கிப் பார்த்து விடுதலைப்புலிகளின் கோட்பாட்டுடன் தன்னை இணைத்தமையாலும் PLOT க்கு வேண்டப்படாத மனிதராக சிவராம் இனங்காணப்பட்டார்.

PLOT இயக்கத்துக்குள் வேகமாக வளர்ந்து முன்னிலைக்கு வந்து, PLOT இயக்கத்தின் அரசியல் பிரிவின் முதல் செயலாளராக எழுச்சி பெற்றிருந்தார்.

சிவராமின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்படும் PLOT இயக்கத்தின் அங்கத்தவர்களான பீற்றர், ராகவன், சிவராம் ஆகிய மூவரும் PLOT இயக்கத்தில் ஒரே காலப் பகுதியில் இணைந்து ஒரே பயிற்சிப் பாசறையில் பயிற்சி எடுத்தவர்கள்.

இவர்கள் மூவருக்கும் அன்றே அதிகாரப்போட்டி காணப்பட்டதாகவும் அதனால் காலத்திற்குக் காலம் இவர்களுக்கு முரண்பாடுகள் ஏற்பட்டு வந்தன என்றும் கூறப்படுகின்றது. இதனாலேயே 1977ஆம் ஆண்டு சிவராம் PLOT இல் இருந்து வெளியே றியதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறான ஓர் சூழலில்தான்

**சங்கரன்**

கருணா தனது எதிர்கால அரசியல் வாழ்க்கைக்கு சாபக்கேடாகக் கருதிய கருத்துலகில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பலம்மிக்க ஊடகவியலாளரான சிவராமை அழிக்க வேண்டும் என்று முயன்றவேளை சிவராமின் போக்கு ஆழ அகலம், பலம் பலவீனம் எல்லாவற்றையும் அறிந்த PLOT இயக்கத்தையும் தன்னுடைய செயற்றிட்டத்தை நிறைவேற்றத்துணைக்கு அழைத்திருக்கலாம்.

"சிறந்த புத்திஜீவிகளில் ஒருவரான சிவராம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும். தமிழர்களை தமிழர்கள் அழித்தொழிக்கும் இன்றைய ஆயுதக் கலாசாரத்தை நாம் அனைவரும் ஒன்றிணைந்து தடுக்கவேண்டும். இல்லையேல் எமது உண்மையான விடுதலையை நாம் பெறமுடியாது. சிவராமின் படுகொலை எவராலும் நியாயப்படுத்த முடியாத துயரமான சம்பவம். 1990 ஆம் ஆண்டு முழுநேரப் பத்திரிகையாளராகச் செயற்படத்தொடங்கிய தற்குப் பின் எமது கட்சியிலிருந்து விலகிச் சென்றாலும்,எம்முடன் ஆரோக்கியமான அரசியல் உறவை சிவராம் வைத்திருந்தவர்'' என விழுந்தடித்து இப்படி அறிக்கை விட்டவர் வேறு எவரும்அல்ல. சிவராமின் படுகொலையின் சூத்திரதாரி எனக் கருதப்படும் தர்மலிங்கம் சித்தார்த்தன்தான். முதலைக் கண்ணீர்விட்டு தனது கொலைக் கலாசாரத்தை நியாயப்படுத்தவும் மூடிமறைக்கவும் முனைந்திருக்கிறார்.

PLOT விடுதலைப்புலிகளின் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு இருப்பதாக அறிக்கைவிட்டுக் கொண்டும் மென்போக்கைக் கடைப்பிடிப்பவர்களாக தம்மை இனங்காட்டிக்கொண்டாலும் அவர்களின் உள்ளகச் செயற்பாடுகள் அனைத்தும் புலிகளுக்கு கொடூரமானதாகவும் முரணானதாகவுமேயுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினையும் புலிகளின் கோட்பாட்டையும் ஏற்றுக்கொள்வதாகக் காட்டிக் கொண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அல்லது விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களைத் தீர்த்துக் கட்டுவதிலிருந்து PLOT இன் கபடத்தனம் புலனாகிறது.

அரச புலனாய்வுப் பிரிவுடன் PLOT உறுப்பினர்கள் இணைந்து செயற்படுகிறார்கள் என்பது வெளிப்படையானது. சித்தார்த்தனின் கட்டளையை மீறித்தான் செயற்படுகிறார்கள் என்பது உண்மையாகவிருந்தால் அவர்கள் தொடர்பான விபரங்கள் அம்பலப்படுத்தியிருக்க வேண்டும். அல்லது அவர்களை கட்சியிலிருந்து விலக்கியிருக்க வேண்டும்.

இதிலிருந்து சித்தார்த்தன் தூய்மையான எண்ணத்துடன் செயற்படவில்லை என்றும் அரச படையில் துணைப்படையாகவும் இராணுவப்புலனாய்வுப் பிரிவின் உளவாளிகளாகவும் PLOT இயக்கத்தை வைத்திருக்க விரும்புவது உறுதிப்படுத்தப்படுகின்றது.

சனநாயக நீரோட்டம் என்று கூறிக்கொண்டு அரச ஆயுதப் படையின் துணைப்படையாகவும் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் ஒற்றர்களாகவும் இயங்குவதன் மூலம் ஆயுத மேந்திய அரசியலை PLOT இயக்கம் நடத்துகின்றது என்பது புலனாகின்றது.

டக்ளசின் இணைபிரியாத நண்பனாக விளங்கும் சித்தார்த்தனும் அவரது குழுவும் ஒட்டுமொத்தத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் முரண்பாடாகவே செயற்படுகிறார்கள். ஆனால் புலிகளின் கொள்கையினை ஆதரிப்பதாக பேசிக்கொண்டு இரட்டை வேடம் போடுகின்றார்கள்.

தமிழீழ தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்தின் முக்கிய பங்காளியாக சிவராம் கருதப்படுகின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோற்றம் வவுனியாவில் சித்தார்த்தனின் வீழ்ச்சிக்குக் காரணம் என கருதப்படுவதால் சிவராம் சித்தார்த்தனுக்கு வேண்டப்படாத மனிதரா கவே கருதப்பட்டிருக்கலாம்.

சிவராமின் முயற்சியால் உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு முரணாகத் தோற்றம் பெற்றதே "மாற்றுக்கொள்கைக்கான கூட்டமைப்பு'' இதன் இணைத் தலைவர் சித்தார்த்தன். இவ் மாற்றுக் கோட்பாட்டுக் கூட்டமைப்பில் EPDP ENDLF, EPRLF, வரதர் அணி, EROSE ,PLOT ஆகிய குழுக்கள் சேர்ந்து கொண்டன.. இக் கூட்டமைப்பில் சித்தார்த்தனும் முக்கிய உறுப்பினராவார். இதனாலும் சிவராமுக்கும் சித் தார்த்தனுக்கும் முரண்பாடு ஏற்பட்ட தாகக் கருதப்படுகின்றது. இதனால் சித்தார்த்தனின் நாடாளுமன்ற வீழ்ச்சிக்கு மூலகாரணமாக இருந்த சிவராமை PLOT படுகொலை செய்திருப்பதற்கும் ஏது நிலைகள் உண்டு.

PLOT இயக்கம் 1998-2001 வரை வவுனியாவில் 18, வதை முகாம்களை நடத்தி சித்திரவதை படுகொலைகளைச் செய்தது. அதில் முக்கியமான வதை முகாம்தான் மலர் மாளிகை வதைமுகாம். இங்கு மனித உரிமைகள் மதிக்கப்பட வில்லை என்பது அனைத்து மனித உரிமை ஸ்தாபனங்களுக்கும் தெரிந்த உண்மை. அந்தவகையில் சிவராமை PLOT படுகொலை செய்திருக்கலாம். PLOT இயக்கத் தைப் பொறுத்தவரையில் தனது துப்பாக்கிகளை எந்த மக்களின் விடுதலைக்காகத் தூக்கியதோ அவர்களைக் குறிபார்த்துச் சுடுவதற்கு பயன்படுத்தப்பட்ட கரிசனை பொது எதிரிக்கு எதிராகப்பயன்படுத்த வில்லை. தனது மக்களை அழித்தொழிப்ப தற்கும் தங்களைத் தாங்கள் அழித்துக் கொள்வதற்குமே PLOT உறுப் பினர்களின் கையிலிருந்த துப்பாக்கிகள் பயன்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் PLOT துப்பாக்கியால் அரசியல் இராணுவ ஆய்வாளரும் மாமனிதருமான சிவராமின் உயிரும் பறிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் உறுதிசெய்யப்பட்டுள்ளது.



# ஓவியங்கள் வரையாத ஓவியன்



ஓவியர் புகழேந்தி என்கிற தொடர் விடுதலையை யாசிக்கின்ற எமக்கு புத்துணர்வின் புதிய வரவாகி விட்டது. ஒடுக்கப்படுகின்ற மக்களுக்கான பரந்துபட்ட தார்மீக ஆதரவினை அவருடைய ஓவியங்கள் வழி அவர் வழங்குகின்றார் என்பதே இதன் பொருள். விடுதலைப்பயணத்தின் முக்கிய நிலையொன்றுக்குள் நாம் பிரவேசிக்க ஆயத்தமாகும்வேளையே இருபத்தியேழு ஓவியங்களோடு அவர் இங்கு வந்து சேர்ந்தார். அவரது ஓவியக் கண்காட்சி சொன்ன செய்திகள் மிகப் பல. எம் மக்களுக்கு போராட்ட வரலாற்றை ஓவியமாக அவர் புகட்டினார்; வெற்றி உங்களுக்கே என நம்பிக்கையூட்டினார்; தோழமையின் நரம்புகளை சுண்டினார். எனவே ஓவியங்களோடு ஓவியமாகவே அவரும் தெரிந்தார். அவரையும் அவரது ஓவியத்தையும் பிரித்தறிய முடியாதென எனக்குப்பட்டது. போராட்டமே வாழ்வாக வாழும் எமக்கு ஓவியமே வாழ்வாக வரித்தமை புரிந்தது. நாம் ஆயுதம் தாங்கியும் அவர் ஓவியம் தாங்கியும் போராடுகின்றோம். 20 ஆண்டுகளுக்கு மேலாக இடைவிடாத ஓயாதசலிப்பற்ற உழைப்பின் மூலம் அவர் ஓவிய அரசியல் சமூக இயக்கமாகிவிட்டார். ஒத்த கருத்துள்ள பல்வேறு தளங்களிலுள்ள அணைவரோடும் இணைந்து இயங்கும் ஒரு இயக்கமவர்.



"எனது தூரிகையை இருட்டின் பிரதிநிதியாக நியமித்திருக்கின்றேன்" என்கிற அவரது சொற்கள் சருவதேசப்பரிமாணம் கொண்டவை. இருளில்தான் ஒளியிருக்கின்றது; இருளையுணர்ந்தால்தான் ஒளியைத் தேடமுடியும். புகழேந்தியின் சிறிய ஆனால் கூர்மையான ஒளி மிகுந்த கண்களிலே வலியின் இருளை நான் கண்டேன். இவ்வலி தமிழ்நாட்டின் தமிழர் நிலை கண்டு மட்டும் வந்ததால் - தமிழ் ஈழத்தமிழர் படும் துயர் நொந்து மட்டும் வந்ததல்ல - இவ்வுலகில் மானுடம் படும் வலியாலும் வந்தது. அதே வேளை இம் முயற்சியால் அவர் பட்டிருக்கக் கூடிய வலியையும் நான் இணைத்துக்கொண்டேன். இதுவொரு மிக ஆரோக்கியமான அற்புதமான **தமிழர் பண்பாட்டு கலைப் பின் புலத்திற் தோன்றும் ஓவியப் பரிமாணம்** தமிழ் அடையாளங்களோடு சருவதேச அடையாளங்கள் பொருத்தப்பட்டு இரண்டும் ஒரு புள்ளியில் சந்திக்கும் வேளையை அவர் பிறப்பித்துள்ளார். கிளிநொச்சி அழகியற் கலாமன்றத்திலே மக்களோடு நின்று அவரது ஓவியங்களை அவதானித்தபோது மனதில் பலதரப்பட்ட உணர்வுகள் தோன்றின. வண்ணங்கள் மேலும் மேலும் அழுத்தம் பெற்று உக்கிரமடைந்தன; அவை தீப்பற்றி எரியும் நிலையிலிருப்பதுபோல் தோன்றின; திடீரென ஓவியங்கள் மறைந்தன அவற்றிலிருந்து ஆட்கள் வெளிக்கிளம்பினர்; அவர்கள் எம்மோடு பேசத்தொடங்கினர்; பின்னணியில் வேட்டுச் சத்தங்கள், தாக்குதல்கள் வதைபடும் மனிதத்தின் அது சிந்திய குருதியின் மணமும் கிளம்பியது. பார்வையாளர்கள் மனங்களிலேயே அதிர்ச்சியலைகள் பரவின; அவர்கள் கலக்கமடைந்தனர். சோகத்தின் புதை சேற்றுக்குள் அவர்கள் வேகமாகப் புதையத் தொடங்கினர். பின்னர் மெதுவாக மேலேயெழுந்தனர். அமைதியடைந்தனர். மிகச்சிலர் உடனடியாக எதிர்வினை காட்டினர். நாம் கடந்துவந்த துயரப்பாதையை ஏன் நினைவுபடுத்தினீர்கள்? நம்பிக்கை தரும் ஓவியங்களை மட்டும் வரைந்திருக்கலாமே என முணுமுணுத்தனர். எல்லாவற்றிற்கும் சிரிப்பையே பதிலாக புகழேந்தி தந்தார்.

எனக்கொரு உண்மை அப்போது உறைத்தது. புகழேந்தியின் ஓவியங்கள் மனிதர் முகத்திலே அறைகின்றன. அவை வலியைக் கிளப்புகின்றன. வலி கிளம்பினால் நோவு கண்டால் என்னசெய்யவேண்டும்? அதனை நீக்கவும் போக்கவும் வழி கண்டறிய வேண்டும். எனவே விடை இலகுவில் கிடைக்கின்றது. இருளைத் தரும் ஓவியங்களே ஒளியைப் பிறப்பிக்கின்றன. எனவே புகழேந்தி மக்கள் ஓவியராக மாற்றம் பெற்றுவிட்டார். வரலாற்றின் இயங்குவிதியினை ஓவியத்தின் வழி அவர் நிரூபிக்கும் வண்ணம் அலாதியானது. இன்னும் பலரோ எமது வாழ்வினை வாழாது நீங்கள் எவ்வாறு அவற்றினை வரைந்தீர்கள் என வியந்தனர். அவர்களும் பதில் சொல்லப்படாமலே பதிலையுணர்ந்தனர். வாழ்ந்தவராகிய நாம் பட்ட வலியை வாழாத

*க.வே.பாலகுமாரன்*

அவரும் பட்டார். அவ்வலியை ஓவியம் வரையும் பொழுது அவர் வாழ்ந்து பட்டார். இதுவே அவரது ஓவிய வெளிப்பாடு. ஓவிய வெளிப்பாடு மட்டுமன்றி அவரது **தோழமையின் வெளிப்பாடு.** உலக மொழியாகிய ஓவியம் மூலம் எமது துயரம் வரையப்பட்டதால் அத்துயரம் மானுட விடுதலையின் மகத்தான பங்களிப்பாகவும் அதன்வழி சருவதேச அங்கீகாரத்தையும் புகழேந்தி எமக்கு பெற்றுத்தந்துள்ளார். இதுவொரு விடுதலைப்போராட்ட **தரமுயர்த்துகைச் செயற்பாடு.** வெண்மணியோடு செம்மணியும் பகத்சிங்கோடு குட்டிமணியும் சந்திரபோசு, மாவோ, லெனின், சே, பிடலோடு பிரபாகரனும் திலீபனும் சாலியன்வாலாபாக் படுகொலையோடு வல்வைப்படுகொலையும் உறங்கா நிறங்களின் வெளிப்பாடாகும்போது அவை இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றுப் படிமங்களாகி விடுகின்றன. இதுவொரு அறிவுபூர்வமான கலைச் செயற்பாடு; சருவதேச அரசியல் வெளிப்பாடு. இக்கட்டத்திலே எம் மக்கள் ஓவியர் வீரசந்தானத்தினை நினைவிற் கொள்வர். எண்பதுகளில் கரும் தாடியும் ஆழமான கண்களும் தொலைநோக்கிய பார்வையும் கொண்ட அரிய இனிய நண்பர் வீரசந்தானத்தின் தமிழ்த்துயர் பேசிய துயர்களைய எமக்கு உரமூட்டிய அவரது ஓவியங்களை மனதிற்கொள்வர். நிழலாடும் சந்தானத்தின் ஓவிய முகத்தின் தொடர்ச்சியாக இப்போது ஓவியர் புகழேந்தி. எதுவும் வீணாகவில்லை. **பகிரப்பட்ட தோழமை, சிந்தப்பட்ட குருதி, இழக்கப்பட்ட உயிர்கள், கொடுக்கப்பட்ட விலை எல்லாமே காலத்தால் அழிக்கப்பட முடியாத நிரந்தர படிமங்களாகி விட்டன.** அடுத்த சந்ததிக்குக் கடத்தப்பட ஆயத்தமாகிவிட்டன. திசைமுகத்தின் முன்னுரையில் எழுதப்பட்டிருப்பது போல விதைக்கப்பட்ட விதைகள், உச்சரிக்கப்பட்ட சொற்கள் அதுபோல கிழிக்கப்பட்ட கோடுகள்போல எல்லாமே சும்மா இருப்பதில்லை. அவை தொடர்ந்து இயங்குகின்றன. அவை இயங்கி "மெல்லவே ஆமை குன்றேறல்" போல எமது இலக்கினை நோக்கி இடைவிடாது எம்மை நகர்த்துகின்றன.

ஓவியக்கலை பற்றி என்னைப் போலவே பலரும் பெரிதாக அறிந்தவர்களில்லை. ஆனால் அவற்றில் பல பேசும் வாழ்வு எம்முடையது என்பதை மட்டும் அறிந்தவர். ஆயினும் பொதுமக்களின் கவனம் ஓவியக் கலையின்பால் அதிகம் ஈர்க்கப்படவில்லை. அது தமக்கானது தமது விடிவினை வேகப்படுத்தும் ஆற்றல் கொண்டதென்பதை உணரவில்லை அவர்களுக்கு உணர்த்தப்படவில்லை. ஓவியமென்பது அரிதான நுண்கலையாக அன்னியப்பட்டதாக எட்டாத் தொலைவிலிருப்பதாக அவர்கள் எண்ணிக்கொள்கின்றார்கள். இந்நிலைக்கு பலகார்ணங்களிருக்கலாம். அரண்மனைகள், மடாலயங்கள், தேவாலயங்களில் தெய்வத்தன்மை சார்ந்ததும் அரசாள்கை சார்ந்ததும் வரையப்பட்ட ஓவியங்கள் பின்னர் அடக்குமுறைகள், சருவாதிகாரங்கள் என்பவற்றிற்கு எதிராகவும் குரலெழுப்பின. இன்று நவினத்துவமும் புதுமையும் கொண்ட வித்தியாசமான ஓவியங்கள் வரவேற்பினை பெறும்நிலையைக் காண்கிறோம். தொழில்நுட்ப வளர்ச்சியின் வெளிப்பாடாக கணனியில் வரைகலை வளர்வதையும் காண்கிறோம். அவை நுகர்வுலகின் உயர் இரசனைப் படைப்பாகவும் திரைப் படத்துறை சார்ந்ததும் அவற்றின் நீட்சியாக வெளிவருவதையும் பார்க்கின்றோம். ஆனால் இவற்றின் வழி ஓவியம் ஒரு புது வழியை அடையும் வேளையில் மிகச்சிக்கலான பார்வையாளனை மிரட்டும் தன்மையால் சிலவேளை புரியாமையால் தாழ்வுணர்ச்சி கொள்ளச்செய்யும் நிலைக்கு ஆழமான தனிமனித சிந்தனையின் வெளிப்பாடாகும் போது மீண்டும் அவை மக்களிடமிருந்து வேகமாக அன்னியமடைகின்றன.

இதுவொரு தேக்கநிலை. இவ்வாறாக பல நிலைகளிருப்பினும் ஓவியக்கலை தொடர்பான அடிப்படைக் கேள்வி ஒன்றுள்ளது. மிக நீண்ட காலமாகவே எழுப்பப்படும் கேள்வியிது. மக்கள் மொழியறிந்திருந்தபோது முதன் மொழியாகவிருந்த ஓவியம் எவ்வாறு மக்களிடமிருந்து அன்னியப்பட்டது? இதற்கு விடை காணாமல் ஓவியக் கலையின் மேம்பாடு பற்றி பேசுவதால் என்ன பயனென்பது சமூக நலன்சார்ந்த புகழேந்தியின் வினா. இங்கேதான் புகழேந்தி கவனிக்கப்பட வேண்டியவராகின்றார். **புகழேந்தியின் ஓவியங்கள் தோன்றிய அரசியலையும் அவைபேசும் அரசியலையும் இங்கேதான் முக்கியப்படுத்தப்பட வேண்டியதாகின்றது.** "மக்களுக்குத் தேவையானவை ஓவியங்கள் பேசாமற் போனதால் அவர்கள் வரலாறு ஓவியங்களில் பதியப்படாது போனதால் தனிமனித வெளிப்பாடுகளாக ஓவியங்கள் வெளிவருவதால் மக்களுக்கும் ஓவியங்களுக்குமான இடைவெளி நீண்டுவிட்டது" இதுவே புகழேந்தியின் விடை. விடையிலிருந்து அவரது பயணம் ஆரம்பமாகிறது. மிகச்சரியான, தருக்கீக அடிப்படையிலான விடையிது.

எனவே இங்கேயொரு புத்தம் புதிய கோட்பாடு பழமையின் வேர்களிலிருந்து கிளம்புகின்றது. வரலாற்று வழிவந்த பகுத்தறிவின் அடிப்படையிலான அறிவியலை துணை கொண்ட கோட்பாடிது. பாரதி பாடியது போல "பூ மண்டலத்திலே அன்பும் பொறையும் விளங்க துன்பமும் மிடிமையும் சாவும் நோவும் நீங்கிச் சார்ந்த பல்லுயிரெல்லாம் இன்புற்று வாழ" ஓவியங்கள் பயனாக வேண்டும். விடிவை நோக்கி நகரும் மக்கள்; ஆக்கிரமிப்புக்களை, அடக்குமுறைகளை உடைத்தெறிய முனையும் மக்கள் பற்றிய பதிவுகள், அதேவேளை இவர்களிற்கு தேவைப்படும் மனவுரம் தார்மிக ஆதரவு ஆகிய இரு நிலைகளில

*(20 ஆம் பக்கம் பார்க்க..)*

# கார சாரம்

## என்னவென்று சொல்வது..?

மூன்று மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பமாகும் என்று பத்திரிகையில் இருந்ததே. என்றால் நான்கு மணிக்குத்தான் ஆட்கள் வர ஆரம்பித்து நிகழ்ச்சி முடியுந்தறுவாயிலும் வருவார்கள்.

"ரெண்டரைக்கு பஸ்ராண்டடிக்குவா நானும் வாறன்" என்று சொல்பவர் மூன்றரை நான்கு மணிக்கு மேலும் காக்க வைப்பதுண்டு.

"நாலரைக்குள்ள என்னை விட்டிரவேணும், நானும் பஸ்சுக்கு போகவேணும்" என்று வருபவரை ஐந்து மணிவரை காக்கவைப்போம். மேல்நாட்டு நாகரிகங்களை விரும்பி ஏற்றுக்கொண்ட எங்களுக்கு நேரத்தை மட்டும் சரிவர வெள்ளையரைப்போல பேண முடிவதில்லை.

நல்லனவற்றைத் தள்ளி நாங்களும் நீங்களும் சமம் எனக்காட்ட நாம் இப்போது ஏற்றுக்கொண்டுள்ள புதிய சடங்கு பிறந்த நாள் கொண்டாட்டங்கள். நாகரிகம் அதிகரிக்க



அதிகரிக்க சடங்குகளும் அதிகரித்து வருகின்றன என்றாலும் பிறந்த நாள் வைபவங்கள் வருடந்தோறும் வருபவை. இதைவிட நாள் தோறும் புதிய குழந்தைகள் பிறந்து கொண்டேயிருக்கின்றன. பிறந்த நாள் ஒரு குடும்பத்தினர் அனைவருக்கும் கொண்டாடப்படவேண்டுமாயின் அதன் அருமையே குறைந்துவிடும். நித்தஞ் சாவாருக்கு நித்தம் அழுவாருண்டோ.. வெளிநாட்டிலிருந்து இரத்தம் சுண்டிப் போக கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தில் இங்கு விழாக்கள் அமளிதுமளிப்படுகின்றன. அயலவர் வீட்டில் கோலாகலமாக நடக்கும் பிறந்த நாள் விழாவைக் கண்டு உள்ளூரில் தன் சொந்த உழைப்பில் கூலி செய்து வாழ்பவனும் தன் பிள்ளைக்குப் பிறந்த நாள் கொண்டாடுகிறான். அண்மையில் ஒருவர் தன் பிள்ளைக்கு அழைப்பிதழ் அடித்து ஊரெங்கும் விநியோகித்துப் பிறந்தநாள் கொண்டாடினார். சுமார் பத்துமைல் சுற்றுவட்டத்துக்குள்ள உறவினர்கள், நண்பர்கள் அழைக்கப்பட்டனர். நான் கைந்து உறவினர்கள் மூன்றுநாள் முன்னதாகவே வந்துவிட்டனர். பெண்டுகள் பலகாரச்சூடு, ஆண்கள் பந்தல் வேலை, அலங்காரம், கள்ளுக்குடிப்பு, பெருஞ்சமையல் எனக்கலகலத்தது வீடு. பிறந்த நாள், பலகாரம் தேநீருடன் முடியும் விருந்துதானே. ஆகவே நான்கு மணிக்கு அறிவிக்கப்பட்டபடி அயலவர்களும் கூடியாயிற்று. ஒப்பனைக்கென விசேடமாக ஒரு பெண் அழைக்கப்பட்டிருந்தாள். கேக்குக்கான அலங்காரங்கள் அதற்குரிய விசேட நிபுணிகளால் செய்தாயிற்று. பின்னர் ஒப்பனைப்பெண் அந்தக் குச்சுவீட்டினுள் ஒப்பனையில் ஈடுபட்டிருக்க, அவளைச் சுற்றி இளவட்டப் பெண்களுடன் கொஞ்சம் இளமை தாண்டிய பெண்களும் தாழ்வாரம் வரை தொங்கிக்கொண்டிருந்தனர். ஒரு வயது நிரம்பிய குழந்தைக்கு ஒப்பனை நடக்கிறது. குழந்தை என்றாலே அழகுதானே. அதற்கேன் ஒப்பனை என நான் வியந்து நிற்க ஒப்பனை முடிந்து குழந்தையை வெளியேகொண்டு வந்தனர். ஆனால் ஒப்பனைப்பெண் வெளியே வரவில்லை. தாழ்வாரத்தில் தொங்கி நின்றோரும் அசையவில்லை. மேலும் ஒரு முப்பது நிமிடங்களை விழுங்கியபின் குழந்தையின் தாய் வெளியேவந்தாள். கூடவே காவடிக்குச்செடில் பிடிப்பவர்களைப்போல ஒப்பனைக்காரி தாவணியைப்பிடித்தவாறே ஓடி வந்தாள். கொய்யகத்தைச் சரிசெய்தாள். கண்மையை நேர்த்தி செய்தாள். முகத்தை தடவி நாடியைப பிடித்து இப்புறமும் அப்புறமும் சரிபார்த்தாள். இப்போதும் அவளுக்குத் திருப்தியில்லாமல் நெற்றியிலிருந்த பொட்டை நேர்செய்தாள். கண்மை, உதட்டுச் சாயம், நகப்பூச்சு, கொண்டை அட

தாய்க்கு இப்போது இது இரண்டாவது மணவறைபோல, தந்தையும் அப்படித்தான், கோட்சூட் சகிதம் (வாடகைக்குப்பெற்றது) வந்து நின்றான். அப்பப்பா, பிள்ளையை மாறி மாறிக் கையிலேந்தியபடி புகைப்படங்கள் எடுத்தனர். உறவினர் நண்பர்களுடன் தனித்தனிப்படங்கள் அடடா பகல் வெளிச்சம் போய் விட்டதே. இனி "எஞ்சினப் போடு" அந்தக் குக்கிராமத்தில் எஞ்சின் வாடகைக்குப்பெற எங்கு போனார்களோ?

இரண்டு நாள் கழித்தே முழுஉறவினர்களும் வெளியே போனார்கள். விழா முடிந்தும் இரண்டு குடும்பங்கள் இருநாள் தங்கியிருந்தே புறப்பட்டன. இனி அந்த வீட்டின் குடும்பத் தலைவனுடைய வருமானத்தைப் பார்ப்போமா. நாட்கூலி நாநூறு முதல் ஐநூறு வரை, இப்பணத்தில் தங்கியிருப்போர் பேரன், பேத்தி உட்பட ஏழுபேர். வேறு உதவியில்லை. சீதனம் வாங்கவில்லை. அது தனக்கு கௌரவக்குறைச்சலாம். (நல்லது) இப்போ செலவுக்கு என்ன செய்தாய் ஒரு சீட்டுக்கட்டினேன். ஐம்பதாயிரம் ரூபாய். மகன் பிறந்த மாதம் தொடங்கியது. அதில் கடைசிச் சீட்டு எனக்கு. அதை எடுத்துச் செலவு செய்தேன் என்றார். போதுமா..?

பிறந்தநாள் தானே என்று பொம்மைகள் வாங்கி அன்பளிப்புச் செய்தால் என்ன செய்வது.

"இல்லை... காசும் வந்தது. அதிகமா மோதிரம் போட்டவை. அதில ஒரு பத்தாயிரம் வந்திருக்கும்"

"கையுங் கணக்குஞ் சரி"

"என்ன ஒரு சந்தோசந்தானே என்ர பிள்ளைக்கு செய்யிறதில"

ம்.. உண்மைதான் பிறந்த நாளன்று ஐம்பதாயிரத்தை அந்தப் பிள்ளையின் பெயரில் வங்கியில் வைப்பிலிட்டால்...

ஐந்து பவுணில் ஒரு நகை செய்து போட்டால் இப்படியெல்லாம் ஏன் சிந்திக்கிறோமில்லை என்று நான் புலம்ப, இன்னுமொருவர் வந்து "காணி ஒரு ஏக்கர் குடுக்கப்போறன் ஆருங் கேட்டாச் சொல்லுங்கோ" என்றார்.

"ஏன்ராப்பா வயல் செய்யிற காணியக் குடுக்கிறாய்" என்றேன்.

"இல்ல பிள்ளையின்ர பிறந்த நாள் வருது ஏதோ 'கீபேத்டேயாம்' வீடியோ எடுக்கோணுமெண்டு நிக்கிறாள். காணியக் குடுத்தாத்தான் செய்யலாம்"

எங்கே போகிறோம்.. நாகரிகங்களையும் ஆடம்பரங்களையும் மட்டுமே கற்றுக்கொள்கிறோம். ஆக்கபூர்வமாக எதையும் சிந்திக்கிறோமா நாங்கள் இங்கே;

புதன்கிழமை வரும் பிறந்த நாளை சனிக்கிழமையில்தான் கொண்டாடுவோம். என்றாள் என் வெளிநாட்டு நண்பி "ஏனென்றால் உழைக்கும் நாட்களை நாம் வீணாக்க முடியாது"

எங்கோ தங்கிவாழும் தேசத்தின் உழைப்பு நாளை, வீணடிக்கமுடியாத மக்கள் உழைத்தனுப்பும் பணத்தில் ஒரு விழா, மூன்றுநாள் கொண்டாட்டமாக இங்கே நடந்தேறுகிறது. விழாவில் சம்பந்துப்பட்டவர்கள் உறவினர்கள், உற்றார் எனப் பங்கேற்போர் உட்பட பலருக்குப் பலநாள் வேலையில்லை.. இந்த பலருடைய உழைப்பு எங்கள் தேசத்தின் அபிவிருத்திக்கானதுதானே. எனவே அவர்களுடைய உழைப்பின் இழப்பைத் தேசமே ஏற்கிறது. தனிநபர்களால் ஆனதுதானே தேசம்.

ஆக, எவ்வளவோ அபிவிருத்திக்கு உதவவேண்டிய, வெளிநாட்டிலிருந்து வரும் பணம் தனிப்பட்டவர்களின் ஆடம்பரத்தேவைகளை நிரப்புவதோடு, நில்லாமல் தேசத்தின் உழைப்போர் வலுவையும் அல்லது உழைப்பின் அளவையும் குறைத்துவிடுகிறது. சொந்த மண்ணின் அபிவிருத்திகளை மறந்து வெறுமனே சுற்றித்திரியும் ஒரு மக்கள் கூட்டத்தையும் இன்று காண்கின்றோம்.

ஆலைகள் செய்வோம், கல்விச் சாலைகள் செய்வோம், ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம் என்று கனவுகண்ட பாரதியும். செல்வத்தின் மிகையால் என்னென்னவெல்லாம் செய்யலாம் என்று சொல்லிவிட்டுத்தான் போனான. தமிழர்கள் பிறந்த நாள் கொண்டாடும் மரபைப் பெற்றிருந்ததில்லை. இதேபோல் இறந்து போனவர்கட்கு திவசம் செய்யும் வழமையையும் கொண்டிருந்ததில்லை. "முப்பத்தொன்று" இப்படி ஒரு விழா இப்போது புதிதாக முளைத்துள்ளது. குடிமக்கள் என ஒரு சாரார் தொண்டு செய்த காலத்தில் அவர்களுக்கான கூலியையும் வழங்கி உணவளித்து மகிழ்ந்த அந்தத்தினம், இன்று கோலாகலமாக நடைபெறுகிறது. ஒரு மாதக்குழந்தையின் பிஞ்சுக்காது செவிடுபடும்படி ஒலி பெருக்கிகள் வைத்து பாடல் முழங்க, பச்சைக் குழந்தைக்குக் கடினமான 'கோட்', 'சூட்', 'பார்ட்டி புறொக்' எனப்படும் வெப்பம் கக்கும் உடை அணிந்து தொட்டிலிலிட்டு அன்று முழுதும் வரும் அனைவரும் அதைக்கிள்ளி நுள்ளிக் கொஞ்சித் தமது அன்பையுமாதரவையும் தெரிவித்து அல்லது தெரிவிப்பது போல நடித்து எப்படியும் மறுநாளோ, இரவோ குழந்தையை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் நிலையை உண்டாக்கிவிடுவர். குழந்தையைப் பிரசவித்த தாய் முழு ஒப்பனையுடன் புத்தம் புதுக் குமரி போல வளையவரும் நாளிது. குழந்தைகள் கேட்டதா எங்களைக் கொண்டாடுங்கள் என்று?

இந்தக் "கலோ"வில பேசிக் "கிலோ"வில எடுக்கிற காசு 'சிலோ' வில்லாம உடன கிடைக்கிது. இவர்களுடைய நடவடிக்கையைக் கண்டு கானமயிலாடக் கண்டிருந்த வான் கோழி போல காணி விற்று, சீட்டுப் பிடித்து, கடன்பட்டு விழாப்பண்ணுவோரை என்னென்பது.

-மாயா-



## விசுக்விசுக் விசாலாச்சி

'அழுவாரும் அழுவாருந் தன் கரைச்சல் திருவன் பெண்டிலுக்கு கட்டியழ ஆளில்லயாம்' பொதுக்கட்டமைப்பு, புத்தர் சிலையெண்டு நாடு அமந்தறைப்படுது. இதுக்க, அடுத்த சனாதிபதி நீயோ, நானோ எண்டொரு போட்டி உள்ளால நடக்குது. இந்த உள்ளால நடக்கிற விசயந்தான் பொடியா சுடுதண்ணிகுடிச்ச நாயளப்போல அங்காலுமிஞ்சாலும் அத்தடியாவாற கதையள். வரவர கட்டமைப்பு வருதோ வரயில்லயோ அரசியல் அமைப்ப மாத்தவேண்டிய அவசரந்தான் இப்ப இருக்கு. நீ எங்கயிருந்து சொல்லுறனெண்டுபார். உவன் ராசபக்சாவும், அநுராவும் குடுமிப்பிடி சண்டையில நிக்கிறாங்கள், இன்னுங் குடுமியில்லை. அது கிடக்க புது அரசியல்யாப்பு தயாரிச்சும் வச்சிருக்காமெண்டு ஒரு கசமுசப்புக் கிடக்குதடா. இன்னுஞ்சரியா வெளிவரயில்ல எல்லாம் அதிரடியா நடக்கப்போகுது. அதோட காதுங்காதும் வச்சமாரி கொஞ்ச எதிர்க்கட்சி எம்.பிமாரையும் வளைச்சுப் போட்டாச்சாம்.

நான் சொல்லயில்லயே உச்சத்துப் பல்லிக்கு அச்சமில்லை. இப்ப முக்கியமான இடத்தில பதுங்கிக் கிடக்குதெல்லே... உந்த சமாச்சாரமெல்லாம் பாரன் வாற வரியம் திடீரெண்டு வந்து குதிக்காட்டி. அது மறைவில கிடக்குறத்த தெரிஞ்சு கொண்டும் பச்சைக்காறர், எப்பிடியும் உந்தக் குதிரையில ஏறிப்போட அங்கலாய்ச்சுக் கொண்டு கொஞ்ச அலுவல் பாக்கினம். ஆனாத் தம்பி நான் சொல்லுறனெண்டு குறை நினையாதையுங்கோ... இது அந்த "எல்லாரும் ஏறி விழுந்த குதிரையில சக்கடத்தார் ஏறிச் சறுக்கி விழுந்தாராம்" எண்ட மாரித்தான் முடியப்போகுது. அதோட உந்த பிக்கு ஒருத்தர் உண்ணாவிரதமிருந்தவரெல்லே, அவற்ர உண்ணா விரதத்த மூண்டு பிக்குமாரோட அம்மா வச்ச சந்திப்பு பேச்சுவார்த்தை எல்லாமாச் சேந்து அலட்டிப் போட்டுதடா பிறகென்ன இனி கூட்டமைப்பு எம்பிமாற்ற சந்திப் போட மிச்சமும் சரிவரும் போல. ஒருக்கா ஒரு கதை சொன்னவா அம்மா நினைவிருக்கோ தெரியா... இந்த நாட்டுக்கு அமைதியைக் கொண்டுவர எந்த பசாசுகளோடயும் கூடிக்கதைக்க நான் தயாரெண்டு, பிறகு பசாசுகளோட கூட்டு வைச்சு ஆட்சியப் பிடிச்சா. பிறகு இப்ப அந்தப் பசாசுகளைக் கலைக்க வேப்பிலையும் கைப்பிடித்தோ சந்திரிகா அம்மா- இப்ப நாடு வலம் வாறாவாம் சந்திரிகா அம்மா. வாசமுள்ள பூப்பறிச்சோ சந்திரிகா அம்மா நல்ல வாசலுக்கு தெண்டனிட்டா சந்திரிகா அம்மா. பிக்குமாரைச் சமாளிக்காம கூட்டமைப்போட என்ன கதை.

உந்த சிறிலங்காப் (பத்திரிகையள்) பரிகலங்கள் மடைபரவிச் சண்டைக்கு அடுக்குப்பண்ணுறது வேற, நாடு உயரவேணுமெண்ட கருத்து ஆரெட்ட இருக்கு. பின்னப் பாரனடா. இந்தியாவுக்க ஓடியோடி இவை வர்த்தக உடன்பாடு, பாதுகாப்பு உடன்பாடு எண்டு பல விதத்திலும், அவையளையும் இதுக்க செருகி வைச்சுக்கொண்டு உந்த அரசியல் யாப்பை மாத்திறதுக்கு முயலுறாபோல, ஏனெண்டா சமட்டி சமட்டி யெண்டு நீங்கள் சுவிசையும் அமெரிக்காவையும் அண்ணார்ந்து பார்த்துக்கொண்டு நிக்க, இவை அடி வளவுக்கால அடுத்த நாட்டில போய் ஆலோசனை கேக்கினமெண்டா... கொஞ்சம் யோசி.

முழுசா முழு மாநிலங்களையும் ஒடுக்கி வைச்சிருக்கிற ஒரு தேசமே! யாப்பு, இந்தியாவின்ரதான். ஒட்டுமொத்தமா இராணுவம், ஒட்டுமொத்தமா வெளியுறவு, ஒட்டுமொத்தமா அறிவியலெண்டு எல்லாத்தையும் மத்தியில குவிச்சு வைச்சுக் கொண்டிருக்கினம். இவையெல்லா மாநில அரசையும் விரும்பினாத் தூக்கியெறியலாம். இப்பிடி ஒரு யாப்பை இலங்கைக்க திணிச்சுப்போடத்தான் அந்த நாளயில ராசீவையா மாகாணசபைத் திட்டத்தைக் கொண்டு வந்தவர். பிறகென்ன பட்டுவேட்டிக்கு ஆசைப்பட்டு வந்து கோவணத்தையும் பறிகுடுத்திட்டும் போனவர். இப்ப பொதுக்கட்டமைப்புக்கும், சமாதானத்தைக் கொண்டரவும் சந்திரிகா அம்மாவுக்கு இருக்கிற யாப்புப்பவர் காணும். ஏனெண்டா உப்பிடியொரு சக்தியுள்ள சனாதிபதி பதவியில்லாட்டி இனப்பிரச்சினைத் தீர்வைக் காணவே ஏலாதெண்டுதானே உந்த யாப்பை எழுதினவர் ஜேயார். பிறகு பழைய குருடி கதவைத் திறவடி எண்டு மாறிற்றார்தானே. ம்... பாவம்... உவள பலத்தோட இருந்த அதி உத்தம சனாதிபதி பிறகு அநாதையாச் செத்தத நினைக்கத்தான் மனசு பக்கெண்ணிறது.

அப்பேர்க்கொத்த பதவி அதிகாரத்தை வைச்சிருந்தும் பலனில்ல. நாய்க்கு நடுக்கடலுக்க போனாலும் நக்குத் தண்ணியே நக்குத்தண்ணி எண்டமாரி எந்த அதிகாரம் இருந்தும் செய்யேலாமப் போனவிசயத்தை அதிகாரமில்லாமலுஞ் செய்யலாந்தானே. எண்ட நல்ல எண்ணத்தில இதோ அரசியல் யாப்பு சீர்திருத்தத்துக்கான... ஏற்பாடுதான் இப்ப இடைக்கால வரைவு எலக்சனால குழம்ப, பேச்சுவார்த்தை சுனாமியால குழம்ப சுனாமிப் பொதுக்கட்டமைப்பு புத்தர் சிலையால குழம்ப, புத்தர் சிலை பொதுக்கட்டமைப்பு எல்லாத்தையும் அரசியலமைப்ப மாற்றம் பிரட்டிப் போடப் போகுது.



# மருத்துவம்




## அப்பாடா..!

புகைப்பழக்கத்தை நிறுத்தப்போவதாய் அடிக்கடி சத்தியம் செய்பவர்களைக் க்ண்டிருக்கிறோம். அடுத்தநாளே கையில் சிகரெட்டுடன் அவர்கள் வலம் வருவார்கள். ஆனால் அப்படி எல்லாம் இனி யாரையும் ஏமாற்றமுடியாது.

புகைப்பழக்கத்தை நிறுத்த உதவும் தடுப்பு ஊசி இன்னும் ஐந்து வருடங்களில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. புகையிலைக்கு அடிமையான வர்களை அப்பழக்கத்திலிருந்து மீட்க உதவும் இந்த மருந்தினை அவுஸ்திரேலியா கண்டுபிடித்துள்ளது.

அதை தற்போது அதிகமான புகைப்பழக்கம் உடையவர்களிடம் செலுத்தி ஆய்வு செய்து வருகின்றது. புகைப்பிடிக்கும் பழக்கம் கொண்ட 300 பேரிடம் இச்சோதனை முயற்சிகள் மேற்கொண்டதாகவும், அச்சோதனை பலனைத் தந்ததாகவும் அம்மருத்துவக்குழு தெரிவிக்கிறது.

ஊசியின் வழி உடம்பில் செலுத்தப்படும் இம்மருந்து இரத்தத்தில் கலந்து அப்பழக்கத்தை நிறுத்தும் என அவுஸ்திரேலிய சுகாதாரத்துறை அதிகாரி **Anne Jones** தெரிவிக்கிறார். இம்மருந்து பயன்பாட்டுக்கு வந்தால் உலகில் புகையிலைப் பழக்கத்தால் லட்சக்கணக்கில் இறப்போரின் எண்ணிக்கை குறையுமெனக் கூறப்படுகிறது.

இக்கண்டுபிடிப்பால் பலரின் பாடு கொண்டாட்டம், ஆனால் சிலரின் பாடு திண்டாட்டம்தான்.




# இரத்தக்கட்டு

DVT (Deep Vein Thrombosis) என்று அழைக்கப்படும் இந்த ஆழ் குருதி நாள இரத்தக்கட்டு என்பது தொடை அல்லது கெண்டைத் தசைப்பகுதியில் உள்ள இரத்த நாளத்தில் ஏற்படும் இரத்தக் கட்டையே குறிக்கும். இந்த இரத்தக்கட்டு அந்த நாளத்தில் இரத்த ஓட்டத்தை முழுதுமோ அல்லது பகுதியாகவோ அடைந்துவிடும்.

இது கால் கீழ் பகுதி மற்றும் தொடை பகுதியிலேயே ஏற்படுகிறது. அப் பகுதியில் உள்ள பெரிய குருதி நாளங் களிலும் இரத்தக் கட்டு ஏற்படுவதில் இது பங்களிக்கிறது. இரத்த ஓட்டத்தை இடையூறு செய்து அல்லது இரத்தக்கட்டு இரத்த ஓட்டத்துடனேயே சென்று இரத்தக் குழாய் அடைப்பை ஏற்படுத்தும் அபாயம் மிக்கது.

நீண்டநேரம் அசையாமல் உட்காருவது, கை, கால்களை அசைக்காமல் நீண்ட நேர படுக்கை ஓய்வு, விமானம், கார்களில் நீண்டதூரம் செல்வது, சமீப அறுவை சிகிச்சை அல்லது காயம் (குறிப்பாக இடுப்பு, முழங்கால், அல்லது மகப்பேறு அறுவை சிகிச்சை) எலும்பு முறிவு, ஈஸ்ட்ரோஜென் மற்றும் கருத்தடை மாத்திரைகள் ஆகியவை ஆழ் குருதி நாள இரத்தக்கட்டு ஏற்படுவதற்குக் காரணமாகின்றன. வயதானவர்களுக்கும், அதிக எடை உள்ளவர்களுக்கும் இது பொதுவான நோயாக இருப்பினும் நவீன யுகத்தில் உட்கார்ந்தபடியே நீண்டநேரம் வேலை செய்வதால் இளைஞர்களையும், இது பாதிக்கக் கூடிய வாய்ப்புகள் பெருகிவருகின்றன.

*நோய் அறிகுறிகள்:*

கால்வலி அல்லது ஒருகால் நொய்மையாக இருத்தல்.

ஒருகாலில் வீக்கம் (Oedema) ஏற்படுதல்.

உஷ்ணம் அதிகரிப்பு.

சருமம நிறம் மாறுதல், சிவப்புத் தன்மை போன்ற அறிகுறிகளாக அமைகின்றன. DVT யால் ஏற்படும் நுரையீரல் குருதிக்குழாய் அடைப்பு மிகவும் அபாயகரமானது. குருதி நாளச் சுவற்றிலிருந்து இரத்தக்கட்டு வெளியேறி நுரையீரலுக்குச் சென்று அதன் நாளத்தை அடைக்கும். இந்த நுரையீரல் இரத்தக்குழாய் அடைப்பு உயிருக்கு ஆபத்து விளைவிப்பது, உடனடியாக மருத்துவ சிகிச்சை தேவைப்படுவது. இந்த இரத்தக்கட்டு பிளசன்டாவிலுள்ள இரத்தக் குழாயில் தங்கினால் கருப்பையில் உள்ள பிண்டத்திற்கு பிராணவாயு குறைவாகச் செல்லும். இதனால் குழந்தை பிறப்பு மிகுந்த பிரச்சினைக்குள்ளாகும்.

குருதி நாள இரத்தக்கட்டு இருக்கிறது என்று ஒரு மருத்துவர் சந்தேகப்பட்டால் முதலில் முழு உடல் பரிசோதனை மேற்கொள்வார். நோயாளியின் மருத்துவ வரலாற்றை கேட்டறிவார். காலை மேலே தூக்கும்போது வலி ஏற்பட்டால் அந்தப் பகுதியில் இரத்தக்கட்டு இருப்பதற்கான அறிகுறி உள்ளது. மேலும் இதனை கண்டறிய அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், கால் குருதி நாளத்தில் 'டை' ஊசிமருந்து மூலம் செலுத்தப்பட்டு காலை எக்ஸ்ரே எடுக்கப்படுவதும் உண்டு. மற்றும் உடலின் இரத்தக்கட்டு அமைப்புகளை அறியும் பொதுவான சில பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும்.

**சிகிச்சை:**

DVTஇற்கு பொதுவாக நுரையீரல் இரத்தக்குழாய் அடைப்பைத் தடுக்க சிகிச்சை அளிக்கப்படும். மேலும் அடிக்கடி இது ஏற்படாமல் இருக்கவும் மருத்துவம் செய்துகொள்வது அவசியம்.

இதற்குப் பொதுவாக அலோபதியில் ஹெபாரின் என்ற ஊசி மருந்து பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது நரம்பு வழியாக ஏற்றப்படுகிறது. இது இரத்தக்கட்டு ஏற்படாமல் தடுக்கிறது. இதனுடன் வாய்வழி மருந்தான வார்.ஃபாரின் அளிக்கப்படுகிறது. வார்.ஃபாரின் 6 மாதங்களுக்கு கொடுக்கப்படும். ஹெபாரின் சிகிச்சை தொடங்காமல் வார்.ஃபாரின் மட்டும் கொடுக்கக்கூடாது.

ஆழ் குருதி நாள இரத்தக்கட்டை முன்னதாகவே இனங்கண்டு முறையாக சிகிச்சையளித்தால் ஒன்றுமில்லை. கவனக்குறைவாக சிகிச்சை எதுவும் எடுக்காமல் இருந்தோமானால் இதனால் ஏற்படும் ஆபத்துக்கள் உயிருக்கு சேதம் விளைவிக்கும் அளவுக்கு அபாயமானது என்பதை நினைவில் கொள்வது நல்லது.

***இதிலிருந்து தற்காத்துக்கொள்ள சில வழிகள்:***

1. காலின் வழியாக செல்லும் இரத்த ஓட்டத்தைத் தடைசெய்யும் விதத்தில் சொக்ஸ் போன்றவற்றை இறுக்கமாக அணிவதைத் தவிர்க்கவும்.
2. உட்கார்ந்திருக்கும்போது அல்லது படுத்திருக்கும்போது கால்மேல் கால்போடுவதை தவிர்க்கவும்.
3. ஒரே நிலையில் நீண்டநேரம் உட்காருவது, நிற்பது ஆகியவற்றைத் தவிர்க்கவேண்டும்.
4. ஓய்வு நிலையிலும் கால்களை அசைத்துக்கொண்டிருங்கள். கால் விரல் மற்றும் முழங்கால்களை மடக்கி நீட்டியபடி இருங்கள்.
5. விமானத்தில் செல்கையில், நிறைய தண்ணீர் குடியுங்கள். உடல் நீர் வற்றாமல் பாதுகாப்பது அவசியம். வெள்ளம் வருமுன் அணைகட்டுவது புத்திசாலித்தனமல்லவா...!




## பாதுகாப்பான தொலைபேசி



உங்கள் வீட்டில் தேவையற்ற தொலைபேசி அழைப்புக்கள் வருகின்றனவா..? இப்பொழுது அதை நிவர்த்தி செய்ய வெளி வந்துள்ளது ஒருபாதுகாப்பான தொலைபேசி. இதில்இருந்து தேவைற்ற வெளிஅழைப்புக்களை தவிர்த்துக் கொள்ளலாம். இதில் விசேடம் என்னவென்றால் உள் அழைப்புக் களை குரல்களை மாற்றி கதைக் கலாம். 2.4 ஜிகாகேற்ஸ் கொண்ட இந்த தொலைபேசி உங்கள் வீட்டில் இருந்தால் பயம் இல்லைத் தானே..!

## ஆறிய தேநீர்..!



நீங்கள் படித்துக்கொண்டிருக்கும் போது உங்கள் அம்மா கொண்டு வந்து வைத்த தேநீர்சூடு ஆறிவிட்டதா.. கவலைவேண்டாம். இப்பொழுது கணனியில் ஆறின தேநீரை உடனே சூடேற்ற USB CAFE PAD என்றகருவி புழக்கத்திற்கு வந்துவிட்டது. CAFE PADஐ கணனியில் பொருத்தி உடனே சூடேற்றிக் கொள்ளலாம். யப்பானின் thankoஎன்ற நிறுவனம் இதை வெளியிட்டிருக்கிறது. விலை என்ன தெரியுமா..? 1980 யென் ஆகும்.

## வீட்டில்படுக்கத் தேவையில்லை

உலகின் தலைசிறந்த சொகுசு வாகனங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் Toyota முதன்மையானது. அந்தவகையில் அண்மையில் அந்நிறுவனத்தினா் படுத்துக்கொண்டே பயணம் செய்யும் புதிய வகை கார் ஒன்றை கண்டுபிடித்துள்ளனர். வித்தியாசமான முறையில் புதிய வகை கார்களை அறிமுகப்படுத்தும் முயற்சியில் Toyato நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இந்த வாகனங்களின் அறிமுகவிழா அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்றது. அதில் படுத்துக்கொண்டே பயணம் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்த கார் அனைவரின் கவனத்தினையும் ஈர்த்துள்ளது. இது விரைவில் சந்தைக்கு வர இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



## விந்தையான பேனா..!



நீங்கள் படித்துக் கொண்டிருக்கும்போதோ அல்லது வகுப்பில் ஆசிரியர் படிப்பித்துக்கொண்டிருக்கும் போதோ அவர் படிப்பித்த பகுதியை பதிவு செய்ய நீங்கள் பெரிய கசெட்டுக்களை இனி பாவிக்கத்தேவையில்லை. பேனாவுடன் கூடிய குரல் பதிவு செய்யக்கூடிய பேனா இப்பொழுது விற்பனைக்கு வந்துவிட்டது.128MB ,256 MBஎன பல மெகாவைட்டுக்களில் வெளிவந்து விட்டது. நீங்கள் இந்தப் பேனா மூலம் குரலைப் பதிவு செய்துவிட்டு உங்கள் கணனியில் இதை USB மூலம் இதை இணைத்து மீடியாப் பிளேயர் மூலமும் கேட்டுக்கொள்ளலாம். இந்தப்பேனாவை புளொப்பி டிஸ்க்களுக்குப்பதிலாகவும் பைல்களைச் சேமிக்கப் பயன்படுத்தலாம்.




# அம்மாவின் பிரச்சினை...



நிலாமகளிற்கு அம்மாவில் கோபம் கோபமாக வந்தது. ஏன்தான் அம்மா இவ்வளவு பிடிவாதமாக நிக்கிறாவோ? என்ன சொல்லி எப்பிடி விளங்கவைப்பதென்றே தெரியவில்லை. வெம்பி வெம்பி அழுகின்ற தாயின் அழுகையை துயரத்தின் பெரும் வடிவாய் தாயின் கண்களிலிருந்து பொங்கிப் பொங்கி வருகின்ற கண்ணீரை நிலாமகளால் தடுக்கவே முடியவில்லை. எவ்வளவு நேரம் தான் அழமுடியும். தானே அழுதழுது ஒரு இடத்தில் நிறுத்தட்டும் என்று மகளால் இருக்கமுடியவில்லை. மகளைக்கண்டதிலிருந்து தொடங்கினாவென்றால் அவள் போகும்வரை ஓயாமல் அழுகையும் புலம்பலும்தான்.

நிலாமகள் இப்போதெல்லாம் வீட்டிற்கு வந்துபோகவே விரும்பவில்லை. எல்லாமே இந்த அம்மாவின் அழுகைதான் காரணம்.

"இப்படியும் ஒருதாய் நடந்துகொள்வதா? பிள்ளைகளுக்கு காலநேரம் வரேக்க கட்டிக்கொடுக்காமல் இவளுக்காகவே அவையின்ரை வாழ்க்கையை போட்டு இழுத்தடிக்கிறாவே..." நிலாமகளின் இதயப்பாரம் கண்களில் கண்ணீராய் எட்டிப்பார்த்தது.

வாசலில் கேட்ட சத்தம் யாரோ வருவதை உணர்ந்து மேசையிற் கிடந்த அல்பத்தை அவசரமாக விரித்துவைத்துக்கொண்டாள். தமயன் வந்து அருகில் நின்றான். "என்னண்ணா" குரலை நிதானப்படுத்தி நிமிராமலேயே கேட்டாள் நிலாமகள்...

"எப்ப லீவு முடியுது?!"

"ஏன்"

"கதைக்கோணும்... ஆறுதலாய்..."

"ம்..."

இனியும் படத்தப்பார்த்து அழுதுகொண்டே இருக்காம ஏதும் முடிவெடு, நான் பிரச்சினையில்ல... தங்கச்சியாக்களுக்கும் வயசு வந்திட்டுது...

சொன்னவன் வேகமாய் வெளியே போய்விட்டான். அப்போதுதான் நிலாமகள் புகைப்படத்தைப் பார்த்தாள். அவளும் மச்சான் தீபனும் ஆண்டு ஒன்றில் படித்தபோது எடுத்துக்கொண்ட படம்.

"அட அண்ணா நினைச்சிட்டான் நான் தீபன நினைச்சு அழுறன் எண்டு"

அவளுக்கு சிரிப்பும் அழுகையும் ஒன்றாக எழுந்தது. அந்தப் புகைப்படத்தை வெளியே எடுத்துவிட்டு அந்த "அல்பத்தை" மேசையில் மூடி வைத்துவிட்டு படத்தை நன்றாகப் பார்த்தாள். தீபனும் தானும் மிகவும் அருகருகாக நின்று ஒருவர் முதுகில் ஒருவர் கைபோட்டு அணைத்தபடி... ஆறுதலாகவே

கிழித்து துண்டுதுண்டாக்கி மீண்டும் மீண்டும் கிழித்து கடதாசித் தூசாக்கினாள்.

சின்னவயதிலிருந்தே பெரியவர்கள் சொல்லிச் சொல்லி வளர்த்ததாலோ என்னவோ தீபனுக்குத் தாரணி-அதுதான் நிலாமகள் என்று பசுமரத்தாணிபோல் பதிந்துவிட்டது. இருவரும் அதே எண்ணங்களுடன் வளர்ந்தார்கள், படித்தார்கள், சிரித்தார்கள், கதைத்தார்கள், விளையாடினார்கள்.

அவர்களின் கதை, சிரிப்பு, விளையாட்டு,படிப்பு எல்லாவற்றிற்குமே பின்னாளில் வயது தடைகளைப் போட்டபோது, நாட்டுப்பிரச்சினையும் பெரிய தடைகளை ஏற்படுத்திவிட்டது. இடப்பெயர்வு, குடும்பங்கள் பிரிவு, உறவுகள் திக்கொன்றாய் பிரிந்து...

அந்த நாட்களுக்குள்தான் தாரணி தன் கடமையை உணர்ந்து நிலாமகள் ஆனாள். தீபனுடன் கடிதம் வாயிலாக இது பற்றித் தெரியப்படுத்திப் பேசிக்கொண்டுதான் போராளியானாள்.

நிலாமகள் நம்பினாள்தான் தீபனும் போராளியாய் ஆகிவிடுவான் என்று. ஆனால் ஏனோ அவனால் போராட்டத்தின் அவசியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கமுடியாமல் போய்விட்டது... அவன் பொதுமகனாகவே போராட்டத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் வாழப்பழகிவிட்டான். மாமா கூட அவளில் எவ்வளவோ ஆசையாக இருந்தவர். அவர்தான் அந்த ஆறுவயது சோடிப்படம் எடுத்தார். தீபன் வீட்டிலும் அதே படம் இருக்கிறது. இப்போது தாரணிவீட்டில் இல்லை. கிழித்துத் துகளாக்கிவிட்டாள். ஆனாலும் அவன் பற்றி தனக்குள் வளர்த்துவைத்திருந்த கனவுகளை அவளால் புகைப்படத்தைக் கிழித்ததுபோல கிழித்துப்போட முடியவில்லை. நிலாமகள் மிகவும் தெளிவானவள்தான். நினைவுகளை விரட்டியடித்துவிட்டு நிதானமாக அவளால் கடமைகளைச் செய்யமுடிகிறது. ஆனால் இன்னொரு இளைஞனை துணையாய் கற்பனைபண்ண முடியவில்லை. அது பற்றியே சிந்திப்பதில்லை. தான் தன்பாட்டில் கடமைக்காகவே வாழ்ந்துவிடுவது என்று நிலாமகள் தன்னளவில் முடிவெடுத்துவிட்டாள்.

ஏன்! அவளுடைய ஆசை மாமாகூட தன்னுடைய மருமகளாய் அவளை எண்ணி எண்ணி மகிழ்ந்து கதைத்த மாமாகூட இனி அவள் தீபனுடைய வாழ்க்கைத்துணையாக லாயக்கற்றவள் என்று தீர்மானித்துவிட்டாரே! இல்லாவிட்டால் அன்று அப்பிடிச் சொல்லியிருப்பார்ரா?

எவ்வளவு நாசூக்காக அதைச்சொன்னார். தாரணியம்மாச்சி மாமாவக் குறைநினைக்காத... இனிநான் என்னெண்டம்மா தீபனக்கட்டித்தாறது. கையும் உனக்கு இல்லாமல் போட்டுது. அதோட வேறயும் காயங்கள் பட்டுட்டாய். கழுத்திலையும் பெரிய பெரிய தழும்புகள்... ம்... மாமா என்னம்மாச்சி செய்ய, எனக்குத்

**தர்மேந்தினி**

தெரியும் இயக்கத்துக்கெண்டு போகேக்கயே திருமணம், வாழ்க்கை, குடும்பம் என்று எல்லாத்தையும் வெறுத்துத்தானே போனனீ... இப்ப என்ன ஓமெண்டப்போறியே! தாரணி ஒருக்கா அம்மாட்டச் சொல்லிவிடு அம்மாச்சி. அவா என்னத்தான் பிழையாய் பாக்கிறா!

மாமாவை நினைக்க அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் இருந்தது நிலாமகளிற்கு. மாமா தன்னைப்பற்றி என்ன நினைக்கிறார் என்று புரிந்தது அவளுக்கு. ஒன்றும் பேசாமல் எழுந்து வந்துவிட்டாள். தீபனும் அப்படித்தான் நினைக்கிறானா என்பதை அவள் அறிந்துகொள்ள விரும்பினாள்.

அவன் பந்து விளையாடவென மைதானத்துக்கு வந்தபோது தங்கையிடம் சொல்லி வரப்பண்ணினாள். நேரடியாகவே கேட்டாள். "திருமணப்பேச்செல்லாம் தொடங்கியாச்சே எப்பிடிப்போகுது?"

அவன் ஏதும் சங்கடப்பட்டதாய் வெளியே தெரியவில்லை. தலையைக் கவிழ்ந்து கொண்டே சொன்னான் "ஓ. அப்பாதான்" மேலும் சொல்ல முடியாமல் அவனுக்குள் தடுமாற்றம்...

"பாக்கிற பிள்ளயப் பிடிச்சிருக்கா" சிரித்தபடியே கேட்டவளிற்கு குனிந்தபடியே பதில் சொன்னான்.

"ஓம் அவாக்கு ஒரு குறையும் இல்ல...."

"நல்லது, சந்தோசம்.... வாழ்த்துக்கள்..." அவள் உண்மையாகவே பாராட்டினாள். அவன் சொல்லிக்கொள்ளாமலே எழுந்து வெளியே போனான். அம்மா இவர்களின் கதையை கேட்டுக் கொண்டுதான் நின்றிருக்க வேணும். குசினிக்குள் இருந்து விம்மி விம்மி அழுவது கேட்டது.

"அழாதேங்கம்மா" என்று ஆறுதல் சொன்ன தங்கையிடம் புலம்பத்தொடங்கினாள்.

"இவளுக்கென்ன கல்லுமனமாய் போச்சா... சிரிச்சுக் கொண்டு வாழ்த்தி அனுப்புறாள். அழுது கிழுது கேட்டிருந்தால் அவன் மனந்திரும்பமாட்டானா?"

தங்கைக்கு எரிச்சல் வந்திருக்க வேணும்.... அவள் தாயிடம் சொன்னாள்.

"ஏனம்மா! அக்காவுக்கு கையில்ல எண்டுதானே மச்சான் வேண்டாம் என்றார். அக்கா என்ன சும்மாவே... நாட்டுக்காகத்தானே கையைக் குடுத்தவ. அவர் தன்ர வீட்டில இப்ப நிம்மதியா இருக்கிறதுக்கு அக்காவும் சேந்து நிண்டு சண்டை பிடிச்சு ஊரைப்பிடிச்சுத் தந்ததுதான் காரணம். அவற்ர ஊரையும் ஆமியிட்ட இருந்து மீட்ட சண்டையிலதான் அக்கா கைய இழக்கவேண்டி வந்தது. இந்தச் சுயநலவாதியக் கட்டுறதவிட அக்கா வேற யாரையும் கட்டலாம்... அல்லாட்டி கட்டாமலுக்கே இருக்கலாம்.

தங்கை பொரிந்து தள்ளினாள். அம்மா சற்றே அமைதியானாள். நிலாமகள் இதனை நல்ல சந்தர்ப்பமாகவே பயன்படுத்த எண்ணி குசினிக்குள் சென்று துருவலைப் பலகையில், அம்மாவுக்கெதிரேயே அமர்ந்தாள்.

அம்மா திரும்பவும் குலுங்கி அழுதாள். கண்கள் சிவக்க தங்கை சுவரில் சாய்ந்து கொண்டு நின்றாள். தொண்டையைச் செருமியபடி மெல்லப் பேசினாள் நிலாமகள்....

"அம்மா! உங்கட பழைய பிடிவாதங்களை விட்டிட்டு அண்ணா விரும்பி இருக்கிற பிள்ளய கெதியா கலியாணம் செய்து குடுங்கோ... தங்கச்சியாக்களுக்கும் பேசி வாறத தட்டிக்கழிக்காமல் ஏற்றமாதிரி வாறத"

"என்ன நீ! கடசிவந்தாலும் மாட்டன். உனக்கொரு கலியாணம் நடக்காமல் இந்த வீட்டில் ஒரு கலியாணமும் நடவாது உண்மையாத்தான் சொல்லுறன். அண்ணாவும் தங்கைமாரும் வாழவேணுமெண்டா நீ முதல்ல செய்" அம்மா உறுதியாகச் சொன்னாள்.

"அம்மா! நான் கலியாணஞ் செய்யப் போறதில்ல. நான் இப்பிடியேதான் இருக்கப்போறன்.

அவளை இடைமறித்து அம்மா கத்தினாள். "ஏன் தாரணி! உனக்கு தீபன் இல்லாட்டி வேற ஆம்பிளையா இல்லை நாட்டிலை? இயக்கத்தில எத்தின பெடியள் இருக்கிறாங்கள். அவங்கள்தான் உனக்குச் சரி... உன்னைப்பற்றி விளங்கிக் கொள்ளுங்கள். காயமெண்டா என்ன... கையில்லாட்டா என்ன... நாட்டுக்காக வாழுறவங்கள்..... உனக்காவும் வாழமாட்டினமா? அவர்களுக்கெண்டாலும் ஓமெண்டு சொல்லு"

நிலாமகள் அம்மாவிற்கு எதையுமே சொல்ல விரும்பவில்லை. எழுந்து உள்ளே போனாள். உடமைப்பையைத் தூக்கிக்கொண்டு வந்தாள். கதிரையில வைத்துவிட்டு கிணற்றடிக்குப் போய் முகம் கழுவிக்கொண்டு திரும்பினாள். முகத்தைத்துடைத்துப் பவுடரைப் பூசி தலையை மேலால் சீவிக்கொண்டு பாதணிகளைக் காலில் கொளுவினாள்.

"போகப்போறிங்களா அக்கா?" என்று கண்ணீருடன் கேட்ட தங்கையை இருந்த ஒரு கையால் அணைத்து நெற்றியில் கொஞ்சினாள். முன்னால் நின்ற அம்மாவிடம் சொன்னாள்.

"அம்மா, நான் திரும்பவும் இந்த வீட்டவாறதெண்டால் அண்ணான்ர அல்லது தங்கச்சியின்ர கலியாணவீட்டுக்கு வருவன். கட்டாயம் சொல்லிவிடுங்கோ. போயிட்டுவாறன்"

படலையைத்திறந்து கொண்டு பேருந்து நிலையம் நோக்கி விரைவாக நடந்தாள்.

# மண்-பற்று-மனிதர்கள்

## அவன் எப்பிடியும் வருவான்...

யாழ்மண்ணைப் புலிகளிடமிருந்து மீட்டுவிட்டதாகச் சிறிலங்காப் படையினர் இறுமாப்புடன் வலம் வந்துகொண்டிருந்த காலம். யாழிலிருந்து விடுதலைப்புலிகளின் தந்திரோபாயப் பின்வாங்கலின் ஆழத்தைப் புரியாத சிறிலங்கா அரசாங்கம் பரப்புரைகளில் மிகவேகமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தது.

பின்வாங்கிய விடுதலைப்புலிகளில் யாழ் மண்ணில் இராணுவ நடவடிக்கைக்கென ஓர் விசேட அணி உருவாக்கப்படுகின்றது. அவ்வணி யாழிலே தீவிரமாகச் செயற்படத் தொடங்கியிருந்தது.

இவ் அணி ஊடுருவிப் பல தாக்குதல்களை வெற்றிகரமாகச் செய்கின்றது. இவ்வாறு குறித்த இலக்கு ஒன்றின் மீதான தாக்குதலிற்காய் நிலவன் என்ற போராளியும் ஓர் வீட்டில் தங்கி நிற்கின்றான்.

அவன் தங்கி நின்ற வீட்டில் அம்மா ஒருவரும் அக்கா ஒருவருமே இருந்தனர். அவர்கள் குடும்பத்தில் ஒருவனாகவே நிலவனும் இருந்தான். வருடப்பிறப்பு, தீபாவளிப் பண்டிகை என்று எது வந்தாலும் முதலில் நிலவனுக்குத்தான் உடுப்பு எடுப்பார்கள். இரவில் நிலவன் தூங்கும்போது அந்தத் தாய் அவன் கேசத்தை வருடியவாறு அமர்ந்திருப்பாள்.

திட்டமிட்டபடி அதிகாலை வீட்டில் அம்மாவிற்குச் சொல்லாமலேயே புறப்பட்டுவிட்டான். இது இவனது வழமையான செயற்பாடு என்பதால் அன்றும் அம்மா அவன் வருவான் தானே என இருந்துவிட்டாள். நிலவன் ஒவ்வொரு ஒழுங்கையாகக்கடந்து ஓர் வீட்டிற்குள் நுழைந்தான். அவன் நுழைவதை இருவிழிகள் விழுங்கிவிடுகின்றன.

"சேர்... சேர்... அந்த வீட்ட சின்னப்புலி துவக்கோட வந்து நிற்கு" என்று அவன் சொன்னதைக்கேட்ட ஒரு ஆமிக்காரன்

"தென்னக் துவள யண்ட" (ரெண்டு பேரு வேகமாப்போ) என்றது தான் தாமதம் இருவர் தோளில் துப்பாக்கியை மாட்டியவாறு வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினார்கள்.

தண்ணீர் குடித்துவிட்டு நிமிர்ந்த நிலவனுக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி. ஏனெனில் அவன் நின்ற வீட்டைத் தாண்டி இரண்டு இராணுவத்தினர் பொழுதைக்கழிக்கச்செல்லும் காதலர்கள் போல கதைத்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தார்கள்.

சிறியவனாக இருந்தாலும் அவனது மூளையின் செயற்பாடு வேகமாக இருந்தது. வீட்டின் பின் பனைமட்டை வேலியைப்பிரித்து அங்கிருந்தவர்களை வேகமாக வெளியேற்றிவிட்டு வாசல் கதவின் ஓரத்தால் எட்டிப்பார்த்தபோது வீட்டின் 'கேற்றில்' இரண்டு ஆமிக்காரர்கள் பதுங்கிப் பதுங்கி உள்ளே வந்துகொண்டிருந்தார்கள்.

அவனது கையிலிருந்த T56-2 துப்பாக்கியின் 'சேப்ரியை' தொடர் இங்கு நிலைக்குத் தட்டிவிட்டவனுக்கு இனி தாமதிக்காதே என மனம் சொல்லியது. அவ்வளவுதான் கதவின் ஓரத்தால் "பட... பட... பட..." என முழங்கி நிறுத்தினான். வந்த இரண்டு ஆமிக்காரனும் அதிலேயே 'பொத்தென' விழுந்து மூச்சை விட்டிருந்தார்கள். சுற்றி வளைத்த இராணுவத்தினரின் சரமாரியான தாக்குதலுக்குள்ளால் தப்பிவிட எண்ணிய நிலவன் மீண்டும் ஒருமுறை பாதுகாப்புச் சூட்டினைச் வழங்க வாசலிற்குள்ளால் துப்பாக்கி முனையை நுழைத்துத் துழாவ இராணுவத்தினரின் ரவையொன்று அவன் முழங்கால் சிரட்டையை சிதைத்தவாறு உள்ளேயே பாய்ந்து நின்றது. அவன் கையிலிருந்த துப்பாக்கி அவனை அறியாமலேயே கீழே நழுவி விழுந்துவிட்டது. கதவின் ஓரமாய் அவன் விழுந்து கிடந்தான்.

மீளவும் அவன் கைகள் துப்பாககியைப் பற்றுகின்றன. பின்வாசலால் வெளியேறி மணல் ஒழுங்கையால் இயன்றவரைவேகமாக 'இழுத்து இழுத்து' ஓடுகிறான். முடியவில்லை. இரத்தம் கட்டுப்பாடின்றி வெளியேறிக் கொண்டிருந்தது. கண்கள் சொருகுகின்றன. கால்கள் தடுமாறுகின்றன. பனைவேலி ஒன்றைப்பிரித்து நுழைகிறான். அவ்வளவு தான்.

உள்ளே புகுந்த இராணுவத்திற்கு இருவரை இழந்த ஆத்திரம்.



கோபத்தில் ஒருவன்,

"கெதற கௌர்த்நா" (வீட்டில ஒருத்தரும் இல்ல) எனப் பல்லை நெருமினான். அதற்கு மற்றவன் "பொடிக்கொட்டி வேறுனா" (குட்டிப் புலி தப்பீட்டுது) என்றவாறு இரு சடலங்களையும் சுமந்தவாறு வெளியேறினார்கள்.

"அம்மா...! அம்மா...!!" என முற்றத்தைக் கூட்டிக்கொண்டிருந்த நிலவன் வழமையாகத் தங்கும் வீட்டின் அக்கா விளக்குமாறையும் போட்டுவிட்டுப் பலமாகக் கத்தினாள். சற்று நேரத்துக்கு முன்பு கேட்ட வெடி ஓசையின் அர்த்தம் ஏன் என்பது புரிந்திருந்தது. வேலிக்குள் மயங்கிக்கிடந்த நிலவனை ஓடிவந்த அம்மா தூக்கி அறையில் கிடத்தி காயத்திற்குக் கட்டுப்போட அக்கா அவன் நடந்துவந்த வழியில் கிடந்த இரத்தக்கறைகளை அழித்துவிட்டு நிம்மதியாகத் திரும்பி வந்தாள்.

வி.தேவபாணு

## அடையாள அட்டையா...?

யாழ்மண்ணை இராணுவம் பிடித்து பல மாதங்கள் கடந்துவிட்டன. அவர்களது அட்டகாசங்கள், கெடுபிடிகள் தலைதூக்கியிருந்தன. ஆனால் இவர்களின் அட்டூழியங்களுக்கெல்லாம் முடிவுவராதா...? என யாழ் தமிழ் மக்கள் ஏங்கிக் கொண்டிருந்தனர்.

குமரனும் சுதனும் யாழ் வந்து கிட்டத்தட்ட மூன்றுமாதங்கள் கடந்திருந்தன. இன்னும் எந்தத் தாக்குதலும் செய்யவில்லை, என்ற மன உறுத்தல் அவர்களைத் தினமும் வாட்டத் தொடங்கிவிட்டது.

காலையே ஆரவாரமாக இருவரும் புறப்படுவார்கள். இன்று எப்படியாவது ஏதாவது செய்யவேண்டும் என்ற ஆர்வம். ஆனால் முடியாது போக சோர்ந்த முகத்துடன் வீடு திரும்புவார்கள். இரவிரவாக இருவரும் கலந்தாலோசித்துக்கொண்டிருப்பார்கள். புதிய புதிய திட்டங்களை வகுப்பார்கள். முடிவெடுப்பார்கள். பின் உறங்கிப்போவார்கள்.

வழமையாக இருவரும் அந்த 'சைக்கிள்' கடையொன்றில் கதைத்துக்கொண்டிருப்பார்கள். அதே நேரம் இவர்களைத் தாண்டி தினமும் 'பீல்ட்பைக்' அணி ஒன்று ரோந்துப் பணியில் ஈடுபட்டுத்திரும்பிக் கடந்து போகும். குமரனையும் சுதனையும் அவதானிக்கும் 'பீல்ட்பைக்' அணி 'கொமாண்டர்' இவர்களை அழைத்து தினமும் நலம் விசாரித்துக் கடந்துபோவான். இதனால் இவர்கள் இருவரும் அந்த ஆமிக்காரனின் நண்பர்களாகியிருந்தனர்.

ஒருநாள் அதேநேரம் 'சைக்கிளை' உருட்டிக்கொண்டு இருவரும் மெதுவாக ஓர் படபடப்புடன் திட்டமிட்டபடி ஓர் இடையூறும் இன்றி வந்துகொண்டிருந்தார்கள். அப்போது 'பீல்ட்பைக்' அணி ரோந்து



முடித்து இவர்களைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தது. அந்த அணியின் பின்னால் ஆடிப்பாடி வந்த அந்த 'கொமாண்டர்' இவர்கள் இருவரையும் கண்டுவிட்டு 'பீல்ட்பைக்கை' வீதியின் ஓரமாக நிறுத்தி விட்டு இறங்கிக் கொண்டான். இறங்கியவன்,

"க்கலோ... குமரேன்... சுதேன் என்னா நடந்தது"

"சேர் காத்துப்போட்டுது... அதுதான்" என குமரன் இழுக்க,

"ஆஆ.." எனத்தலையாட்ட குமரன் 'கொமாண்டரைத் தாண்டி வந்து சைக்கிளை நிறுத்தினான்.

"அது சரி ஐசிய எடுங்கோ... என்றதும் ஒரே குரலில் இருவரும்

"என்ன சேர்...!!!?"

"உங்கட ஐசிய எடுங்கோடா" என அதிகாரமாக" உறுமினான்.

"பொறுங்கோசேர் என ஜீன்ஸ் பொக்கற்றுக்குள் கையைவிட்ட குமரன் திடீரென இடுப்பிலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்துப் "படீர்... படீர்... படீர்" எனக் கொமாண்டரின் நெற்றிப்பொட்டில் குறிவைக்க பகலில் வெள்ளி பார்ப்பவன் போல் வானத்தை அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருந்த மற்றச் சிப்பாயை சுதனது கைத்துப்பாக்கி ரவைகள் சல்லடை போட்டன. இரு ஆமிக்காரரும் அந்த இடத்திலேயே சரிந்துவிழ இருவரும் மிகவேகமாக இலக்கை அழித்துத் தப்பிக்கும் முயற்சியில் ஓடியவர்கள் குறிப்பிட்ட தூரம் கடந்திருப்பார்கள். குமரனிற்கு அப்போதுதான் அந்தக் 'கொமாண்டரின்' இடுப்பில் கைத்துப்பாக்கி இருப்பது நினைவுக்குவர திரும்பவும் வேகமா விழுந்து கிடந்த அந்த இராணுவத்தினரை நோக்கி ஓடுகிறான். மிக வேகமாக அந்தக் கொமாண்டரின் இடுப்பிலிருந்த அந்த கைத்துப்பாக்கியை எடுத்துக்கொண்டு வந்து சுதனுடன் சேர்ந்து கொள்கிறான்.

இந்த இடைவெளியில் 'பீல்ட்பைக்கின்' ஓசை திரும்பவும் கிட்டக்கேட்பதை உணர்ந்தவர்கள் அவர்களது மறைவிடத்திற்குள் வேகமாய்ச் சென்று மறைந்து கொண்டார்கள்.

## காதல் தேசத்தில்

அவளின் - நினைவு
அடிக்கடி
வந்து-போகும்
முற்றத்து
மல்லிகை வாசம்
போல
என் மனதில்.

நினைவுத் தூண்டிலில்
தினமும்-நான்
மீனானேன்
கண்ணீரில்
நனைந்தபோது
முகம் துடைக்கும்
விரலாய்
என் மடியில் துயில்
கொள்ளும்
நிலவாய்
துவண்டு விழ மாட்டாளா
தவிப்பு
இமைத் துடிப்பில்
மணித்துளிகள்
கண்ணாமூச்சி
விளையாடி
மகிழ்ந்தன.
காலத்தின் கால்களுக்கு
போலியோ
மௌனமாய்-நான்
கரைந்து-காணாமல் போனேன்
காதல் தேசத்தில்.

ரமணன்

## இது புரியாதவர்களுக்காய்

என் தேசம் எரிகின்ற பொழுது
வேடிக்கை பார்ப்போராய்,
என், தேகங்கள் எரிகின்றபொழுது
உயிர்இருக்கிறதா-இல்லையா என ஆராய்ச்சி,
நான் வாழ்வதற்காய்
போராட புறப்பட்டபொழுது
என் உணர்வுகளை கூர்மையான
வார்த்தைகளால் காயப்படுத்தியவர்கள்,
நான் ஒரு போராளியாய் மாறியபொழுது
இவனுக்கு நிற்பதற்கு வழியில்லை-என்ற குரல்
மௌனமான எனது பயணத்தில்
புதைந்து கிடக்கும் உண்மைகள்
ஆம்-நான் விழுப்புண் அடைந்து
விழி இழந்து வருகின்றபொழுது
முற்பிறவியில் செய்த பாவம் என
முணுமுணுத்த குரல்களைக் கேட்கிறேன்.
காலை, கரத்தை இழந்து நான்
ஊன்று கோல் உதவியுடன் நடந்தபொழுது
செய்த பாவத்திற்காய்
அனுபவிக்கின்றேன் என்றவர்கள்
கண்ணீருடன் களமாடி-நான்
விழுப்புண் தாங்கி வீரமரணத்தை
தழுவியபொழுது
அந்த மரண வீட்டின் முதல் வரிசையில்
அவர்களும் இருப்பார்கள்
அவர்களும் அழுவார்கள்
அவர்களே சொல்வார்கள்
எவ்வளவு நல்ல பையன்-இவன் என்று.

ம.ஆன்சிலின்




# சங்குகள்

மெல்லுடலிகளில் வயிற்றுக்காலி வகுப்பில் பெரிய உருவம் கொண்ட கடல் வாழ்நத்தை, சங்கு. இதில் 80 இனங்கள் உள்ளன. இது பல வடிவங்கள் கொண்டது. ஊதுசங்கு, கீற்றுச்சங்கு, போர்ச்சங்கு, பாற்சங்கு, இளஞ்சிவப்புச்சங்கு, செவ்வாயன் எனப்படும் இரத்தம்போல் சிவந்த வாய் கொண்ட சங்கு, சிலந்திச் சங்கு, கூனல்சங்கு, வெள்ளிச்சங்கு, சிறுதவளைச்சங்கு, எருதுச்சங்கு என்று பல வகைகள் உள்ளன. இவை அனைத்துமே இந்துமா கடலிலும், பசுபிக் கடலிலும் பரவலாகக் காணப்படுகின்றன.

வெள்ளை நிறத்திலிருந்து சிவப்பு நிறம்வரை பல்வேறு வண்ணச்சாயல்களில் சங்குகள் உள்ளன. மேற்கிந்தியக் கடற் பகுதிகளில் உள்ளவை மிக அழகாக இருக்கும். கதவு கைப்பிடி, பாறைத் தோட்டங்களில் அலங்காரம் செய்ய, புடைப்புருவச்செதுக்கு மணி மற்றும் பல கைவினைப்பொருட்கள் செய்ய இது பயன்படுத்தப்படுகிறது. இதைத் துகளாக்கி பீங்கான் செய்யப்பயன்படுத்துகிறார்கள்.

சதைப்பிடிப்பான உடலமைப்பைக் கொண்டது சங்கு. நீண்ட உணர்க்கைகளின் அடிப்பகுதியில் இரண்டு சிறிய கண்கள் உள்ளன. அகலமான பாதங்களின் உதவியால் நகர்ந்து செல்கிறது. கூரிய கண்பார்வையும் மோப்ப உணர்வும் உடையது. இறந்த கடல்வாழ் உயிரினங்களே இதன் உணவு. இதில் மிகப்பெரியது ராணிச்சங்கு என்பது 30 செ.மீ. நீளம்வரை வளரக்கூடிய இதன் எடை இரண்டு கிலோ. உண்ணத்தகுந்த சங்குகளில் இதுவும் ஒன்று. இதை ஊதா நிறச்சங்கு என்றும் கூறுவார்கள். இளம் சிவப்பு முத்து இந்தச் சங்கிலிருந்து கிடைக்கிறது. ஊதுசங்காகப் பயன்படுத்தப்படுவதுடன் இதிலிருந்து ஆபரணங்களும் செய்யப்படுகின்றன. சில



சங்கினங்கள் தோல் பை போன்ற உறையில் முட்டைகளிடும். இந்தப் பை ஒரு மென்மையான இழைமூலம் இணைக்கப்பட்டிருக்கும்.

சங்குகளில் மிகப்பெரியது மிக அபூர்வமாகவும் காணப்படுவது கோலியாத் சங்கு. இதன் நீளம் 38செ.மீ. இதேபோல் மிக அபூர்வமான இனங்கள் 15 செ.மீ. நீளமுடைய பெருவியன் சங்கும் எருது சங்கும்.

சிலந்திச்சங்குகளில் 10செ.மீ. நீளத்திலிருந்து 30செ.மீ. நீளமுள்ளதுவரை உள்ளன. இவை அனைத்துமே தாவர உண்ணிகள். இதன் முட்டைகள் கூழ்க்கட்டி போல் இருக்கும்.

## உங்களுக்குத் தெரியுமா?

★தண்ணீருக்கு அடியில் சென்று ஆராய்ச்சி செய்ய உதவும் மூச்சுக் கருவியின் பெயர் ஸ்கியூபா.

★முதன் முதல் 1893ஆம் ஆண்டு நினைவுத் தபால் தலையை வெளியிட்ட நாடு அமெரிக்கா.

★பிளாஸ்டிக்குகளை எரிக்கும்பொழுது டையாக்சின் என்ற நச்சுப்புகை வெளியாகிறது.

★பாம்பு நாக்கின் மூலம் வாசனையை உணருகிறது.

★காண்டாமிருகத்தின் கொம்புகள் உண்மையில் எலும்புகள் அல்ல. அவை மிகக்கடின மயிரிழைகளால் உருவானவை.

## சொற்சிலம்பம் - 91

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கை | ப் | வ | ம் | ன் | னை | ம் |
| டு | கு | நீ | பா | ந் | மி | பு |
| று | லா | தி | கோ | னி | ணி | ள் |
| ம் | அ | பி | ரி | டோ | சீ | லி |
| செ | ட் | தா | ஷ் | ர் | ரி | னை |
| றா | ப | யா | சா | ஸ் | ரு | ளி |
| ளு | ல் | மோ | ன் | கி | த் | ம |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -89 இன் விடைகள்

01. புலி.

02. செம்பியன் செல்வன்.

### சொற்சிலம்பம் - 89 இன் பரிசுக்குரியவர்

தி.டிலக்ஸ்சிகா,
தட்டயமலை முன்பள்ளி,
வலதுகரை,
முத்துஐயன்கட்டு.

### சொற்சிலம்பம் - 89 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. வே.சுபிதா,
கலவெட்டித்திடல்,
நாகேஸ்வரா வித்தியாலயம்.

02. அ.தேனுயன்,
ஸ்ரீசுப்பிரமணியவித்தியாசாலை,
புதுக்குடியிருப்பு.

03. இ.ராஜீவன்,
புதிய செங்குந்தாவீதி,
திருநெல்வேலி கிழக்கு.

04. ஆ.தயாவதி,
வேம்படி,
வல்வெட்டித்துறை.

05. ம.நிறோஜினி,
யா/தாளையடி,
றோ.க.த.க.வித்தியாலயம்.

06. கா.அபிநயன்
இல:42,
உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

07. K.நிலாநீதி,
புதுக்குடியிருப்பு.

08. ம.கிஷாலினி,
ஒட்டுசுட்டான்வீதி,
புதுக்குடியிருப்பு.

01. பறவை இனங்களின் பெயர் ஒன்று?

01) ........................................

02. பூ வினங்களில் ஒன்று?

01) ........................................

பெயர் :- ........................................

முகவரி :-........................................

........................................

........................................

சொற்சிலம்பம்-91
ஈழநாதம்.
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## ஓட்டப்பந்தயம்...

பகுதி-09






# சிந்தித்துச் செயற்படுத்துங்கள்

இன்றைய சமூகத்தில் வாழும் ஆண்கள், பெண்கள் இரண்டு தரப்புமே இரண்டும் தம்வாய்களினால் கதைத்து தீர்க்கும் பிரச்சினைகளை பெரிதுபடுத்தி அடிதடிஎன்று தொடங்கி இறுதியில்கொலை செய்யும் அளவுக்கு நிலைமை போய் விடுகிறது.

இச்செயற்பாடானது மிகவும் நுட்பமானமுறையில் அணுகி அதனை சுலபமாக தீர்க்க முயற்சிக்க வேண்டும். எவ்வளவுதான் நாம் நல்லவர்களாய் இருந்த போதும் இப்படியான செயற்பாடுகளில் ஈடுபடும் போது இச் சமூகத்தில் எமக்கு மதிப்புக் கிடைப்பதில்லை.



ஒரு குடும்பத்தில் வாழும் நாம் எமக்கு மூத்தவர்களாக இருக்கும் உறவுகளின் நல்ல அறிவுரைகளைக் கேட்டு நடக்கவேண்டும். நல்லவை யாக இருந்தால் எமக்கு இளையோர் சொன்னாலும் அதைக் கேட்டு நடக்க வேண்டும். ஒரு சிலர் இப்படி நடந்தால் தமக்கு மதிப்புக் குறைவென எண்ணுகின்றனர். இவ்வெண்ணம் தம்மை கீழ் நிலைக்கு இட்டுச்செல்லும் என்பதை உணர மறுக்கின்றனர்.

நாம் வாழும் குடும்பம் என்பது பலபேருக்கு உதாரணமாக விளங்கவேண்டுமே தவிர பலபேர் ஒதுக்கி வைக்க அல்ல என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

என்னதான் பிரச்சினைகள் வந்தபோதும் அதற்கான தீர்வுகளை சுலபமாக காணப்பழக வேண்டும். சின்னவிடயங்களையும் பெரிசுபடுத்தி பெரிய போரே நடக்கின்றது இன்றைய வீடுகளில். இன்றைய வீடுகளில் வாழும் ஆண்கள், பெண்கள் தாம் அடிபடுவதை வைத்து தம்மை பெரிய சண்டியர்கள் என எண்ணுகின்றனர். இது மிகவும் தவறாகும். நாம் எம்முடைய மனதை மூர்க்க நிலைக்கு இட்டுச் சென்றே சண்டை சச்சரவுகளில் ஈடுபடுகின்றோம் என்பது தெரியாமல் வீறுநடை போடுகின்றனர். இதனால் என்ன நடக்கிறது எம்முடைய வாழ்வில் விரோதிகளே எமக்கு நிறைய இருப்பார்கள். நாம் நண்பர்களை சேர்க்காவிடினும் விரோதிகளை வரவழைக்காமல் இருக்கவேண்டும.

எம்மோடு சண்டைக்கு வருபவருக்கு பிரச்சினைகளின் தாற்பரியத்தை விளங்கவைக்கவேண்டும். அவரோடு சேர்ந்து நாமும் சண்டைக்கு போகக்கூடாது. அப்படி நாம் போனால் அவருக்கும் எமக்கும் என்ன வித்தியாசம்.

இன்று வாழும் இளம் வாலிபர்கள் எதற்கெடுத்தாலும் கத்தி, வாள் என எடுத்துச் சண்டை போடுகின்றனர். ஒவ்வொரு குழுக்களாயும் இவற்றை மேற்கொள்கின்றனர். நாளாந்தம் வரும் பத்திரிகைகளைப் பார்த்தால் கோஷ்டி மோதல் கத்திக்குத்து பலர் காயம் என்ற செய்திகள்தான். ஏன் இந்த நிலை, எம்முடைய பெயர்கள் பத்திரிகையில் வரவேண்டுமென்றால் ஒரு பிரபல்யமான சாதனையாளராக இருந்து வர வேண்டும். இப்படி ரவுடி என்ற பெயர் பத்திரிகைகளில் வருவதைக் கண்டு இன்றைய இளம் வாலிபர்கள் வெட்கப்படவேண்டும். எம்முடைய நாட்டில் எவ்வளவோ பணிகள் காத்துக் கிடக்கும் இந்நாட்களில், தம்முடைய இழிவான செயல்களால் எம்முடைய நாட்டுக்குக் கெட்ட பெயர் வாங்கிக்கொடுக்கும் இளசுகள் கொஞ்சமாவது யோசிக்கவேண்டும். நம்மால் நன்மைகள் செய்ய இயலாது என்றால் தீமை செய்யாமல் இருக்கலாம் அல்லவா.

இன்றைய காலத்தில் வாழும் எம் தமிழ் மக்கள் எவ்வளவோ சொல்லொணா துன்பங்களுக்கு ஆளாகி வாழுகின்றனர். இவர்களின் நல்வாழ்வுக்காக நீங்கள் கோஷ்டி மோதல்களில் ஈடுபடும் பொன்னான நேரங்களை பொறுப்போடு உணர்ந்து நல்லமுறையில் செயற்படுத்துங்கள். இளம் வாலிபர்கள் உங்களால் எத்தனையோ வீடுகளில் விடிவிளக்குகள் ஏற்றிவைக்க உதவும் உங்கள் பொற்கரங்கள் அநாகரிகமான செயல்களில் ஈடுபடுவது எவ்வளவு மோசமான செயல்.

**சு.சிவாஜினி**

---

ஒருவர் மீது ஒருவர் பொறாமை கொள்வதன்மூலம் என்ன பயன பெறமுடியும். பொறாமையென்பது ஓர் ஆட்கொல்லி நோய்தான். இதற்கு மருத்துவமும் எம் மனங்களில்தான் உள்ளது. எம் மனங்களில் அஸ்தமிக்கும் இந்த கொடியமிருகம் எம்மையே கொன்றுவிடும்போலுமிருக்கும். உதாரணமாகப் பார்த்தோமானால் நாம் ஒருவரோடு அன்பாய்ப் பழகிவிட்டோம் என்றால் அடுத்தவருக்கு ஓர் பொறாமையுணர்வு. ஏன் இவர் இவரோடு மட்டும் இவ்வாறு பழகிக் கொள்கின்றார் என்று பலதரப்பட்ட கதைகளை புனைவார்கள். மற்றயது ஒருவன் தான் கஷ்டப்பட்டு அதன் பயனாக அவன் நல்லதொரு அந்தஸ்தை அடையும் போது அவன் மீது ஓர் பொறாமையுணர்வு. இன்னும் பார்த்தோமானால் ஒருவன் தன் குடும்பத்தோடு ஒன்றித்து ஒற்றுமையாய் வாழ்கின்ற போது அதில்கூட ஓர் பொறாமையுணர்வு இப்படிப்பட்ட பலதரப்பட்ட பக்கங்களிலும் காணப்படுவதோடு எல்லோர் மனங்களிலும் பொறாமை ஓர் சின்னமாயுள்ளது.

பொறாமையுணர்ச்சியிலிருந்து நாம் என்ன மாற்றீடு செய்யமுடியும்? தனிப்பட நினைத்து விட்டால் போதுமா? முதலில் எம் மனங் களை மாற்றிக் கொள்ளவேண்டும். மற்றவர் மீது நாம் பொறாமை கொள்வதனால் என்ன பயனை அனுபவிக்கின்றோம்.. இதனால் நாம் வீண் விரயமா கின்றோமே. தவிர எந்தவொரு பயன் பாட்டையும் அனுபவிக்கவில்லை. இதனைப் பற்றி ஓர் துளியேனும் சிந்தித்தும் பார்ப்பதில்லை. சிந்திப்போமானால் திடமாய் இதனை மாற்றமுடியும்.

பொறாமையுணர்வு பற்றி படித்துச் சுவைத்த விடயமிது. அதாவது ஓர் குடும்பத்தில் தாய்க்கோ அல்லது தந்தைக்கோ அல்லது இருவருக்குமோ பொறாமை கொள்ளும் குணம் இருக்குமாயின் அக்குடும்பத்தில் பிறக்கின்ற பிள்ளைகளிற்கும் அக் குணம் இருக்குமாம். இது இடையில் வந்த வியாதியோ பரம்பரை வியாதியோ அல்ல இது பிராயம் முதல் அப்படியான சூழ்நிலைக்குள் வளர்ந்து விடுகின்றார்கள் என்பதுதான் உண்மையாம் எனக் கூறியிருந்தார்கள். ஆனால் ஐந்து விரல்களும் ஒரே மாதிரி இல்லைத்தானே? இதன் மூலம் இவர்கள் மனங்கள் ஒவ்வொன்றும் ஒன்றாய் இருக்குமென ஒப்பீடு செய்யலாமா?

பொறாமை உணர்வினை யாரும் யாருக்கும் கற்றுக்கொடுப்பதில்லை. மிகப் பயங்கரமான விஷக்கிருமி போன்றதுதான் இந்தப் பொறாமை. சிலர் அல்லர் பலர் சொல்வார்கள் என்னில் மற்றவர் மீது பொறாமை கொள்ளும் குணம் கிடையாது எனச் சொல்வார்கள். ஆனால் காரணமில்லாமல் கூட அவர்கள் பொறாமை கொள்ளும் குணமுடையவர்களாய் இருப்பார்கள். மற்றவர் மீது பொறாமை கொள்வதன் பலன் என்ன? எதற்காய் அவர்கள் மீது கோபம் கொள்ளவேண்டும்? சற்று இதனைச் சிந்தித்து மாற்றிக்கொள்ள வேண்டும். யார் மீதும் யாராயினும் பொறாமை கொள்வதனால் அர்த்தம் ஏதுமில்லை. இதனால் எந்தவொரு பயனுமில்லை. எனவே பொறாமை கொள்வதினால் உங்கள் மனதில்தான் ஓர் நிம்மதியின்மை தோன்றும். இதற்கு என்ன செய்யலாம் என பார்த்து நம்மை நாமே ஆராய்ந்து நம்மை மாற்றிக்கொள்ளவேண்டும் இதன் பயனாக சுகங்கள் எம்மில் என்றும் பரிணமிக்கும்.

*சி.மதீஸ்*



# பொறாமை ஆட்கொல்லி நோய்

---

# தவறுகளிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள்

மனிதனின் பரிணாம வரலாற்றில் தோல்வி என்ற பதம் எங்கேயும் முதல் இடத்தைப் பிடித்தே விடுகிறது. இது ஒரு முறையோ அல்லது பல முறையோ ஏற்பட வாய்ப்புக்கள் எங்கேனும் இருந்தே செய்கிறது. இன்றைய உலகம் வளர்ச்சியடைந்து கொண்டும், நாகரிகங்களும் அடிக்கடி மாறிக்கொண்டே இருப்பதும் நாம் அறிந்ததே. இதற்கு நாம் பல காரணங்களைச் சொல்லலாம்.

அதாவது நாம் ஒன்றைச் செய்யும் போது முதன் முறையாக ஏதாவது ஒரு சிறு தவறு நடந்துவிடுகிறது. நாம் அதனைச் செய்யும்போது சிலவேளைகளில் திருப்தி ஏற்படுவதும் அல்லது ஏற்படாமல் விடுவது என்பது வழமையே.

இங்கேதான் எமது தவறுகள் இனங்காணப்படுகின்றன. அதன் பின் பூர்த்தியாக்கப்படுகின்றன. எமது தவறுகள் எமது வாழ்க்கையில் நாம் கற்றுக்கொண்டு பெற்றுக்கொண்ட வெற்றிகள், சாதனைகளுக்கெல்லாம் மிக முக்கியமான ஒன்றாக இருப்பது தோல்வியே.

ஆம் தோல்வி இன்றி எங்கேனும் வரலாறு உண்டா? நம்முடைய தவறுகளிலிருந்து நாம் கற்றுக் கொள்வதண்டி மூலமாக நாம் எதையெல்லாம் நல்லமுறையில் செய்து முடிக்க விரும்புகிறோமோ அவற்றையெல்லாம் வெற்றிகரமாகச் செய்கின்றோம். எமது சவால்களின் எதிர்நீச்சல் தவறுகளை திருத்துவது. அது எதுவானாலும் இருக்கட்டும். முதலில் தவறுகள் எங்கிருந்து எம்மை நோக்கி சுட்டிக்காட்டப்படுகிறதோ அங்கே உங்களின் வெற்றிக்கும், வளர்ச்சிக்கும் ஒரு படி காத்திருக்கும்.

"என்னுடைய எதிர்காலம் என்னுடைய கைகளில்தான் இருக்கிறது. நானே அதற்குப் பொறுப்பாளி" என்ற சவாலை நிறைவேற்ற எமது நாளாந்த சுற்றுச் சூழலில் ஏற்படும் ஒவ்வொரு சம்பவத்தாலும் புலப்படும் தவறுகள் பாடமாக அமையவேண்டும். அது ஓர் அனுபவமாக அமைய வேண்டும்.

தவறு நடந்துவிட்டதே என்று தத்தளித்து குழப்பமடையாதீர்கள். இது எனக்கு ஒரு பாடமாக இருக்கட்டும். இனி இத்தவறை விடக் கூடாது என்று எண்ணுங்கள். இன்னொருவர் உங்கள் தவறை எடுத்துச் சொல்லும்போது தட்டிக்கழிக்காதீர்கள். நல்ல மனதோடு ஏற்றுக்கொள்ளுங்கள். இதைவிட்டு இவர் யார் என் நில பிழை பிடிக்க என்று சினம் கொண்டு கோபப்படாதீர்கள். இந்த நிமிடம் முதல் இதுவரை உங்களுடைய வாழ்க்கையில் உங்களுக்கு ஏற்பட்ட எல்லா நிகழ்வுகளிலும் கிடைத்த நன்மையும், தீமையும், வெற்றியும், தோல்வியும் ஏதேனும் ஒரு காரணத்தால் ஏற்பட்டிருக்கலாம். அவை எதிர்காலத்தில் உங்களுக்கு ஏதேனும் ஒருவகையில் பயன்தரும் என்று நம்புங்கள். நடந்தவற்றை நன்மனதோடு ஏற்றுக்கொண்டு கடந்த கால தவறுகளிலிருந்து கற்றுக் கொண்ட அனுபவங்களால் தொடர்ந்து முன்னேறுங்கள். "எப்போதெல்லாம் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டுச் சரி செய்யப்படுகிறதோ அதுதான் சரியானது. தவறுகளிலிருந்து கற்றுக் கொண்டு நடக்கும் பாதை சத்தியத்தின் பாதை"

**ஈழவிழி**

---

## மைசூர்ப் பாகு




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| கடலைமா | -அளவாக |
| சீனி | -சிறிதளவு |
| நெய் | -150 கிராம் |
| தண்ணீர் | -1/2 கப் |

செய்முறை:-

* சீனியை மெல்லிய கம்பிப் பாகாகக் காய்ச்சவும்.
* இதில் கடலைமாவைச் சிறிது சிறிதாகத் தூவிக் கட்டிபடாமல் கிளறவும்.
* முழுவதும் நன்கு கலந்த பின் நெய்யை இடையிடையே சேர்த்துக் கிளறவும்.
* சட்டியில் ஒட்டாமல் திரளும் பருவத்தில் இறக்கி நெய் பூசிய தட்டில் கொட்டி அழுத்திப் பரவவும்.
* சூடாக இருக்கும்போதே துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும்.

---

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




குமரகுரு புடவை,
அழகுப்பொருள் வாணிபத்தின்
பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்—52**

பெயர்:........................................................

முகவரி:........................................................

........................................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# அறிவுசார் கருத்துகளும் மனித விசாரணைகளும்

மாதங்கி

(சென்ற வாரத் தொடர்ச்சி....)

எண்ணங்கள் சிறந்தவையாக அமைய வேண்டும் என்பது அறிவு வளர்ச்சியின் உன்னத நோக்காகும். மனித வாழ்வில் களங்கங்களைக் கற்பிப்பதும், அர்த்தமற்ற கருத்துகளுக்கு நியாயங்களைக் கோரி நிற்பதும் அறிவியல் ஆகாது. ஒவ்வொருவரது ஆற்றலும் மனத்தின் வெளிப்பாடு. தனிமனித உரிமையை சிறுமைப் படுத்தி, சின்னத்தனமாக்குவது அறிவென்று கருத்துக்கூறின் அறிவு என்பதற்கு மேம்பட்ட கருத்துகளை கூறுவோரிடையே நாம் எத்தரம்?

எல்லாப் பொருளிலும் பலதரப்பட்ட ஆற்றல் அல்லது சக்தி அமைந்திருக்கும். அறிய முடியாத சக்தியின் வெளிப்படையான தோற்றங்கள் அவை. மனிதர்களின் அறிவானது, அறிய முடியாததின் வெளிப்பாடே ஆகும். அறிவியல் என்பது, அத்தகைய அடிப்படையில் அமைந்தது. அறிவியலின் நோக்கமே பல தீர்வுகளுக்கு ஆதாரமானவைகளைச் சேர்த்து, அதன் அடிப்படையில் பொதுவிதிகளைக் கண்டு பிடித்து, பிறகு ஒவ்வொரு தனிப்பட்ட துறைக்கும் அவற்றைச் செயல்படுத்துவதாகும்.

அறிவு எனும் பெயரால் காழ்ப்புணர்ச்சிகளும், வாழ்வு மோசடிகளும், மனித உரிமை மீறல்களும் சாதாரணமாகிவிட, துணை போய் விடுகிறார்களே. மனித மனத்தை சிதைத்து குரூரமான எண்ணங்கள் வழி நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துவதா? அறிவுசார் தேடல்.



கடந்த காலங்களில், கொள்கைகள் கூட, புலன் கடந்த நுண்பொருள் ஆராய்ச்சியாக அமைந்ததால் அவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால் இஸ்பென்சர், டார்வின் ஆகியோரின் கோட்பாடு உண்மையான தத்துவக் கொள்கைக்கு மையமாக அமைகிறது. பரிணாமக் கோட்பாடு முதல் தத்துவக் கருத்தாகும். அதில் அறிவியல் கருத்தும் தொகுப்பளவையும் அடங்கி இருக்கும்.

பரிணாமம் என்பது கருப் பொருளின் ஒருமைப்பாடும், உடன் நிகழ்கிற அசைவின் (Motion)சிதறச் செய்கையுமாம். அதேசமயத்தில் வரையறையில்லாத ஒழுங்கில்லாத தன்மையிலிருந்து, வரையறையுள்ள ஒழுங்கான மாற்றம் ஏற்படும்.

அறிவு ஒழுக்கத்தைப் பேணவில்லையா? நீதி சாஸ்திரங்கள், நீதிக்கதைகள் யாவும் சமூக ஒழுங்கை நிறுத்துவதாகவே காண்கிறோம். தத்தம் தவறுகளை பிறர் மீது ஏவும் கணைகளாக்கி, 'வல்லவன் வாழ்வான்' என்பதாக நீதிக்கு பிறிதொரு அர்த்தம் காணும் நம்மவர் தாம் வாழும் காலங்களை பொற்காலங்களாக நியாயப் படுத்திக் கொள்கிறார்களே. இழி கோலங்கள் இவர்களிடும் கை வண்ணங்களில் பலரின் தலைவிதியை மாற்றி எழுதுகின்ற மனப்பாங்கைப் பெற்றுவிடுகின்றார்கள் போலும்.

ஓர் உயிரினம் ஒரு கடினமான சூழ்நிலையில் எதிர்த்துச் செயற்பட்டு நல்ல முறையில், தன்னை அமைத்துக்கொள்வது தான் அறிவுக் கூர்மை எனப்படும். மிருகங்கள் சூழ்நிலையிலிருந்து ஏற்படுகின்ற உணர்வுகளைப் புலன்கள் வாயிலாக அறிகின்றன. அவை மெய், வாய், கண், மூக்கு, செவி முதலிய நுழைவாயில்கள் வழியாக வருகின்ற அறிவைப் பெறுகின்றன. பின்பு அந்தப் புலன்களுக்கு எட்டாத பொருட்களை அறிய முயற்சி செய்கின்றன. ஆனால் மனிதன் நிகழ்வுகளுக்கு முகம் கொடுக்கின்றான். பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றான். அடிமைத்தனத்தால் ஆட்டிப் படைக்கும் சக மனிதர்களுடன் முரண்படவேண்டிய சூழ்நிலைகளும் உருவாகின்றன.

ஐம்பூதங்களின் ஆட்சியும் இயற்கையின் அளப்பரிய ஆற்றலை அறிவு ரீதியாகப் புலப்படுத்துவன. எமக்கேற்படும் இயற்கை அனர்த்தங்களுக்கு பலதரப்பட்ட அறிவுசார்ந்த, தழுவிய நிலையில் பல்வேறு கருத்துக்களைக் கொடுக்கின்றோம். 'சுனாமி அலை' தந்த பேரதிர்ச்சி பெரிதும் பாதித்தவேளையில் ஒவ்வொருவரும் தாம் தாம் விளங்கிய கருத்துக்களை வெளிப்படுத்த, கடல்தாயை, ஒரு பெண்ணின் மேல் உள்ள விகாரமான எண்ணங்களாலே? என்னவோ கவி பாடியவர்களின் பேதமை தான் என்னே?

அறிவு ஒவ்வொருவரையும் புரிந்து கொள்ளும் தன்மையைக் கொடுக்கின்றது. அன்பைக் கொடுத்து அன்பைப் பெறலாம். நட்பு, அன்பு, பாசம் போன்ற பதங்கள் அறிவியலூடாகவன்றி பாரம்பரியமாக வளர்ந்துவிட்டாலும், நவநாகரிக நோக்கில் கொச்சையாய் தினிப்பதற்கும், வாங்குவதற்குமாய் தோற்றம்பெற்றவையல்ல. உணராத உரிமையாய் உறவாடாத அன்புக்கு அணிகலன் ஏது?

ஒழுக்கத்தைப் பற்றிய தன்னறிவு (Moral Consciousness) என்பது தனக்கும் சமுதாயத்திற்குமுள்ள பலனைக் கருதிச் செயற்படுவது. கடமை என்பது எதிர்காலத்தில் உள்ள கவர்ச்சிகளுக்கு இடம் தராதிருத்தலாகும். தான் என்ற எண்ணத்திற்கும் (Ego-ism) பிறர்நலத்திற்கும் (Altruism) உள்ள வேறுபாட்டைத் தவிர்த்தலாகும். தன்னலமும், பொதுநலமும் ஒன்றிற்கொன்று முரண்பட்டவையாகும்.

இஸ்பென்சர் எனும் அறிஞர் மனித சமூகத்தை ஒரு முழுப் பொருளாகவும் (or-ganic) மனிதர்களை அதன் உறுப்புகளாகவும் கொண்டார். உறுப்புகள் அனைத்தும் அந்த முழுப் பொருளின் நலனுக்காக அமைந்திருப்பதைப் போலத் தனி மனிதர்களும் சமூகத்தின் நலனுக்காக இருக்கவேண்டும். சமூகமும் தனி மனிதனுடைய நலனுக்கு அமைந்திருக்க வேண்டுமென்று கருத்துக் கூறியுள்ளார். இவர் சமூக ஒற்றுமையையே வலியுறுத்தியுள்ளார்.

பார்சன் எனும் அறிஞரின் குறிப்பிடத்தக்க சொல்லழுத்தமாக "பங்குகொள் விழுமியங்களின்" சமூக ஒட்டும் தன்மையும் கோட்பாட்டின் மீள் செயற்பாடாக, முன் கூட்டியே அபிவிருத்தி என்பது சமூக இணைப்பாக இவருடைய எழுத்துகளில் காணப்படுகிறது. இதனாலேயே அகவயமான கருத்தியலாகவும், அனைத்துப் புறவயமான கருத்தியலுக்கு ஒரு மாறுபட்டவகையில் உருவாக்கப்பட்ட கோட்பாடாக பார்சனின் கோட்பாடு விமர்சிக்கப்படுகின்றது. ஆயினும் இது விழுமியங்களின் செயற்பாட்டைத் திருப்தி செய்வதாகவும், தகவல் ஒழுங்குபடுத்தல்களை (Information regu-lators) புலனறிவு மூலம் முக்கியத்துவமான உரிமையைக் கோருவதாக இக் கோட்பாடு அமைகிறது. சமூகப் படிமலர்ச்சி வெவ்வேறு திசைகளில் அமையுமென்கிறார். ஒரே நேர் கோட்டில் தொடர்ச்சியான செயற்பாடாக அமைவதில்லையென்கிறார். இவரின் கருத்துக்களை முரண்பாட்டு வாதிகள் மறுதலிக்கின்றனர்.

சமூக ஒப்பந்தக் கோட்பாடுகள் (So-cial Contract Theories) மனிதனுக்கும், சமூகத்திற்குமுள்ள உறவினை எவ்வாறு வெளிப்படுத்துகின்றன எனின், ரூஸோவின் கருத்துப்படி மனிதன் சாத்வீகமானவன். அமைதி விரும்பியான அவனிடம் வசதியோ, வளமோ இல்லை. ஆனால் மனிதர்களின் எண்ணிக்கை அதிகரித்தபோது அவர்களுக்குள் சண்டைகளும் முரண்பாடுகளும் தவிர்க்க முடியாதவையாயின. இந்த நிலை ஏற்படுத்திய நிர்ப்பந்தம் காரணமாக ஒரு பொதுக்கருத்து உருவாகி அது இறையாண்மையும் பெற்றது.



சமூகத்தைப் பற்றி மனிதன் கற்றுக் கொள்வதில் படிப்படியாக, உளவியல் காரணிகள், உடற் கூற்றியல் காரணிகள், இயற்பியல் காரணிகள், சமூகக் காரணிகள் எனப்பல காரணிகள் செயற்பட்டாலும் சமூகக் காரணிகளே தனிமனித வாழ்வில் முக்கியத்துவம் பெறுகின்றன. எடுத்துக் காட்டாக, பிறரைப் போல நடந்து கொள்ளுதல், ஆலோசனைகள், இரக்கம், பாராட்டு, குற்றம் சுமத்துதல், போட்டி, கூட்டுறவு போன்றனவாகும். இந்த நிலைமைகள் மனித வாழ்வில் துண்புறுத்தலாக அமையின் ஏற்புடையதாகாது.

சித்தர் சிந்தனைகளில் பகுத்தறிவுக் கொள்கையும், மதச்சார்பின்மை தொடர்பான கருத்தியல்களும் ஆங்காங்கே பரவி இருப்பதைக் காணலாம். பகுத்தறிவுவாதமானது கடவுள், உலகம், மனம் மற்றும் அடிப்படை உண்மைகளை அறிவு முறையில் ஆராய்கிறது. இதனையே சித்தர்களும் யோகம் பயின்று சித்தி பெற்றோர் எனும் நிலையில் நோக்கும்போது, இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனும் எண்வகை உறுப்புகளைக் கொண்ட யோகத்தைப் பயின்றுவருகின்றனர்.

சமயச் சார்பின்மையில் 'அனைவருடனும் நேயம்' எனும் சமயக்கோட்பாடு முக்கியம் பெறுகிறது. இதுபோன்ற சிந்தனையாக சித்தர்களின் எண்வகை உறுப்புகளில் ஒன்றான இயமம், கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, பிறர்மனை நோக்காமை, இரக்கம், வஞ்சனையின்மை, பொறையுடைமை, மணங்கலங் காமை போன்ற பல்வேறு ஒழுக்க நெறிகளைப் போதிக்கின்றது. அறிவு எனும் பதமானது சித்தர் மரபிலும் வேரூன்றக் காணலாம்.

மாக்ஸ் சமயத்தைக் கடுமையாகக் கண்டிக்கின்றார். அது மனிதகுலத்தின் போதைப்பொருள் (Opium of Mankind) ஆகும் என வர்ணிக்கின்றார். அதே வேளைஅதை முதலாளித்துவச் சுரண்டலோடு தொடர்புபடுத்துகின்றார். தமது சுரண்டல் முறைகளை மறைப்பதற்காக முதலாளித்துவச் சுரண்டல் வாதிகள் சமயத்தை ஒரு போர்வையாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர். சமூக அநீதி, சமத்துவமின்மை ஆகியவற்றின் அடிப்படைக் காரணம் சமயமேயாகும். மனிதன் அரசியல் பொருளாதாரத் துறைகளில் முன்னேற வேண்டுமாயின் அவன் சமயத்தின் இரும்புப் பிடியிலிருந்து முதலில் விடுதலை பெற்றாகவேண்டுமென மாக்ஸ் கூறுகின்றார். ஆனால் அவர் நாஸ்திகத்தை அல்லது ஒழுக்கமின்மையை வலியுறுத்துவதாகக் கொள்ளமுடியாது; சமூகத்தில் சமயம் அதன் உண்மையான பங்கையும், இடத்தையும் தெளிவாக அறிந்து செயற்பட வேண்டுமென வலியுறுத்துகின்றார்.

தனியே அறிவுசார் ஆதிக்கம் மட்டுமன்றி, அதனோடிணைந்து பொருளாதார, பண்பாட்டு ஆதிக்கங்களும் அறிவுப் போர்வையில் ஊடுருவக் காணலாம். மேம்பாடு (De-velopment) நவீன மயமாக்கம் (Moderniza-tion) என்கிற பதங்கள் சமூக மாற்றம் தொடர்பான இன்றைய எழுத்துக்களில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன. குறைவிருத்தி நாடுகள், பின்தங்கிய நாடுகள், வளர்ந்துவரும் நாடுகள், புதியதாய் மேலெழும் நாடுகள், புதிய சனநாயகங்கள் என்றெல்லாம் சுட்டப்படும் மேம்பாடு தொடர் பான விவரணங்களும் தர்க்கரீதியான உண்மை நிலைமைகளை பிரதிபலிப்பனவா? எனும் கேள்வியும் எழுப்பப்படும்.

சமூக ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்துவதுடன், அநியாயமான வழிகளில் அவற்றினைத் தீர்ப்பதற்கான மார்க்கங்களும் அறிவின் பெயரால் முன்வைக்கப்படுவதுண்டு. போட்டியும், பேராசையும் மனித வாழ்வில் உள்ளவை என்பதானது கூட அடம்சிமித் போன்ற அறிஞர்களால் நியாயப் படுத்தப்பட்டுள்ளது.

தென்னாசிய ஆய்வுகள், மேம்பாடு தொடர்பான ஆய்வுகள், சமூக, பொருளாதார, அரசியல் தொடர்பான ஆய்வுகள் யாவும் அறிவினடியாக ஆய்விற்குட்படுத்தப்படுபவை. உனக்கல்ல- ஊருக்கடி என்ற விதமான அறிவுகளும் தம் சக்திகளின் உச்சத்தை வாழ்வியலின் தடைகளாக நிறுவும் நியாயங்களையும் ஏற்றவிதமாக அறிக்கை எழுதுதல் போன்ற கௌரவத்திற்குமப்பால் அறிவுலக நேர்மையே காக்கப்படவேண்டும். மெய்ப் பொருள் காண்பதே அறிவாக வளர்க்கப்படவேண்டும்.

உலகமயமாக்கல் செயற்பாட்டினால் விளைந்தவை பல்தேசியங்கள், முகம் தெரியாத பணிக்குழுவினர், அபிவிருத்தி தொழில் நுட்பமாதிரிகள், புவிசார் அரசியல் தேசங்கள் என்பனவாகும். உள்ளங்கைக்குள் கொண்டு வந்துவிட்ட அறிவானது பல்வேறு இன்னல்களையும் எதிர்கொண்டுதானிருக்கிறது.

ரொஸாக் எனும் அறிஞர் கூறுவது போல "சாதாரண மனிதன் எல்லைப்படுத்தப்பட்டுவிட்டான்" அறியாமையை அடிப்படையாகக் கொண்ட அறிவினை சிறப்புத் தேர்ச்சியில் உருவாக்கிவிட்டனர் நிபுணர்கள். தங்கி வாழும் நிலையையும் வலிந்து உருவாக்கிவிடுகின்றனர். சில நிபுணர்கள் தம் அறிவை பெரிதாக நினைத்து அலட்டி, அலட்சியம் செய்யும் போக்கில், சாதாரண மனிதர்கள் அறிந்து வைத்திருக்கும் விடயங்களை மறுத்தும் விடுகின்றனர்.

எதிர்பாராமல் பிறந்த இணையம் என்கிற மகத்தான தகவல் புரட்சியின் விளைவுகள் கூட யாரும் எதிர்பாராததாகவே இருக்கிறது. இணையம் ஒரு வல்லரசின் இராணுவத் தேவைக்காகப் பிறந்தது. அது உலக மயமாகும் சந்தையைப் பின்தொடர்ந்து உலகத்தில் பரவியது. அது தகவல் தொழில் நுட்பம், தொலைத் தொடர்பு என்கின்ற இரு ராட்சசத் தொழில் நுட்பத் தொழில் துறைகளும் கைகோர்த்துக் கொண்டதால் எழுந்தது. இணையம் பல புதுமைகளைப் பெற்றிருக்கிறது. எடுத்துக் காட்டாக மனித இனத்தின் முதல் பன்மொழி ஊடகம் என்று அது அழைக்கப்படுகிறது. நாம் ஒரு பன்னாட்டுத் தமிழ் உறவை வேறு ஊடகங்கள் மூலம் சாத்தியப் படுத்த முடிந்ததில்லை. மகத்தான வியூகங்களை அமைக்காமலேயே இணையம் அதைச் சாதிக்கிறது. அது ஒரு வித்தியாசமான ஊடகம். புத்தகங்கள் ஒரே சமயத்தில் பன்மொழித் தன்மையுடையனவாக இருப் பதில்லை. ஒரு குறிப்பிட்ட அலைவரிசை ஒரே சமயத்தில் பல மொழிகள் பேசுவதில்லை. ஆனால் குறிப்பிட்ட ஒரு வலையகம் பலமொழிகளைப் பேச முடியும். பல்துறை சார்ந்த அறிவை எமக்குத் தரமுடியும்.

அறிவு சார் நடவடிக்கைகளில் வெகுசனத் தொடர்புச் சாதனங்களின் பங்கு இன்றியமையாதது. பல்துறை சார் அறிவுப் பரப்பை அதீத அறிவாய் புலப்படுத்துவன.

மனித வாழ்வைப் பந்தாடும் நோக்கில் தம் தடயங்களுக்கு கறைபடிவித்து உரம் சேர்ப்பவர்களும் அறிவு எனும் போர்வையில் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் வழி மனித விசாரணையை வில்லங்கப்படுத்தி விடுகின்றார்கள்.

விழுமியமற்ற ஒழுங்கில் உணர்வுகள் நோகடிக்கப் படுகின்ற, துன்பியலுக்குள்ளாக்கப் படுகின்ற, 'நடந்தது இல்லாமல் போகுமா?' என்பதாகப் பரிகசிக்கின்ற, ஒவ்வொரு செயற்பாங்கிற்கும் தன் வசதிகளுக்கமைய மனித விசாரணையை ஏற்படுத்திவிடுகின்ற கைங்கரியங்கள் அறிவாய் உணர்த்தப்படுவதை விட அபாயச் சங்காய் மனித மனங்களில் நெருக்கடியை ஏற்படுத்திவிடுகிறது.




சின்னக் கருவேலம் (PRESOPIS JULIFORA) என்ற மரம் மிகப் பிரசித்தமானது. மிக நீண்ட காலமாக அமெரிக்கா போன்ற நாடுகளில் எரிபொருள் அதாவது விறகுத் தேவைக்காகவும் கால் நடைத் தீவனமாகவும் பயன்பாட்டில் இருந்து வருவதாக அறியப்படுகிறது.

இதன் முக்கிய சிறப்பு வளமற்ற மண்ணில் கூட மிகச் சாதாரணமாக வளரும். இதன் காரணமாகவே

# எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

இந்தியா- தமிழகத்தில் வளமற்ற மண் நிறைந்த பல பகுதிகளில் சின்னக் கருவேலம் விதைகள் தூவப்பட்டன.

உலங்குவானூர்தி மூலம் தூவப்பட்ட விதைகள் மூலம் தமிழகத்தின் பல பகுதிகளில் சின்னக் கருவேலம் மரம் அறிமுகப்படுத்தப் பட்டது.

இப்போது பெரும் காடாக வியாபித்துள்ள இம் மரங்களில் இருந்து பெறப்படும் விறகானது தமிழக மக்களின் விறகுத் தேவையை கணிசமான அளவு பூர்த்தி செய்கின்றது.

இந்தப் பின்னணியிலேயே தமிழகத்தில் விடுதலைப் புலிகள் தங்கியிருந்தபோது சின்னக் கருவேலம் மரத்தின் சிறப்பினை உணர்ந்து அதனை அங்கிருந்து எமது மண்ணுக்குக் கொண்டுவந்தனர்.

1986 ஆம் ஆண்டு அவ்வாறு கொண்டு வரப்பட்ட விதைகள் முதற்கட்டமாக மன்னார் மாவட்டத்தின் பாப்பா மோட்டைப் பகுதியில் தூவப்பட்டன. அதன் காரணமாக சுமார் 50 ஏக்கர் வரை சின்னக் கருவேலம் மரங்கள் பரவி வளர்ந்தன.

இம் மரங்களின் வளர்ச்சியின் பின்னர் இது வளர்ந்த மண்ணில் பல மாற்றங்களை அவதானித்தனர். அத்துடன் "உடர்வேரம், கெமட்டனாம்" போன்ற மரங்களும் வளர்ந்தன.

"சின்னக் கருவேலம்" வளர்ந்த மண்ணின் உவர்த்தன்மை கூட குறைவடைவதை அவதானிக்கப்பட்டது.

அதனால் 1992 ஆம் ஆண்டில் இதனை யாழ்மாவட்டத்திற்குக் கொண்டு வர முயற்சி எடுக்கப்பட்டது.

சுமார் 68 கிலோ சின்னக் கருவேலம் விதை யாழ் மாவட்டத்தின் சகல வெளிகளிலும் தூவப்பட்டன. இதன் தற்போதைய நிலைமை தொடர்பாக அறிய முடியவில்லை.

எனினும் பெறுமதி மிக்க இந்த மரத்தின் பயன்பாட்டை உணர்ந்து கொண்டு பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்க நாம் முன்வர வேண்டும்.

# வத்தாளைச் செய்கை

வத்தாளை போசனப் பெறுமானம் கூடியது. அத்துடன் விற்றமின் சத்துக்களும் அதிக அளவில் காணப்படுகின்றன. வத்தாளையின் இளம் இலைகளை வறுவல் செய்தும், வத்தாளம் கிழங்கை அவித்தும் உணவாக உட்கொள்ளலாம். இது மரவள்ளிக் கிழங்கை விட சுவையானது.

விவசாயத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட இனங்களை பெற்று உங்கள் தோட்டங்களில் நாட்டலாம். வத்தாளங் கிழங்கை விவசாயிகள் தோட்டங்களில் நாட்டுவது குறைவாக உள்ளது. சுய தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக சிலர் தங்கள் தோட்டங்களில் சிறிய துண்டங்களில் நாட்டுவதை அவதானிக்கலாம். பெருமளவில் இதைப் பயிரிடுவதில்லை. சிபார்சு செய்யப்பட்ட இனங்களில் வாரியப் பொல இனம் சிவப்பு நிறமுடையது. இதன் அறுவடை வயது 3-31/2 மாதமாகும்.

கிழங்குகளின் தோல் சிவப்பு, ஊதா நிறமாக இருக்கும். இதே போல் ரணபிமஹோடி B-2, 3-1/2-4 மாதமாகும். சாந்தி BW-8, 31/2 - 4 மாதமாகும். சித்திரா BW-2-3 மாதமும் உடைய பல இனங்கள் இருக்கின்றன.

**நடுகை:-**

வத்தாளை நடுகைக்கு முன் நிலத்தை உழுது பண்படுத்திய பின் மேடையாகவோ அல்லது பாத்தி முறையிலோ வத்தாளைத் துண்டங்களை நாட்டலாம். வத்தாளையை கிழங்கு மூலமும் நாட்டலாம். துண்டங்கள் மூலமும் நாட்டலாம். கிழங்கு மூலம் நாட்டுவதால் கூடுதலான விளைவைப் பெற முடியாது. துண்டங்கள் மூலம் நாட்டுவதே சிறந்தது. இதனால் மண்ணில் தோன்றும் நோய் அற்றவையாக தண்டுகளைப் பெறலாம்.

தண்டுகளைப் பயன்படுத்துவதால் சீரான பருமனுடைய அதிக விளைவு கிடைக்கும்.

தண்டுகள் போதியளவு கிடைக்கும்.

தண்டின் நுனிப் பகுதியை நடுகைக்குப் பாவிப்பது அதி சிறந்தது.

பயிர் செய்யப்படாத காலங்களில் அதாவது மாரிகாலங்களில் நாற்று மேடை அமைத்து தேவையான போது தண்டுத் துண்டங்கள் நாற்று மேடையில் இருந்து பெறப்படுகின்றன. பொதுவாக இம் மேடைகள் வரட்சிக் காலங்களில் நீரோடைக் கரைகளில் பள்ளமான இடங்களில் அமைக்கப் படும். துண்டங்களின் நீளம் 25-30 செ.மீ நீளமான தண்டுத் துண்டங்களாக இருத்தல் வேண்டும்.

நடுகைக்கு 25 செ.மீ இடைவெளியில் செங்குத்தாக அவற்றின் 11/2 பகுதி மண்ணினுள் புதையுமாறு நடல் வேண்டும். பசளை இடுவதாயின் நட்ட 6 கிழமைகளின் பின் தாவரத்தில் இருந்து 10-15 செ.மீ தூரத்தில் வளமாக்கியை இடுவதால் தண்டு இலைகள் எரிவதைத் தடுக்கலாம்.

**களைகளைக்கட்டுப்படுத்தல்:-**

பயிரின் வளர்ச்சிக் காலத்தில் இரு மாதங்களிற்கு களைப் பிரச்சினை காணப்படும் பின் கொடி விரைவில் நிலத்தை மூடிப் படர்ந்து விடும். பயிர் நட்டு 4 கிழமையின் பின் கைகளால் களை களைக்கட்டுப் படுத்தலாம்.

**மண்அணைத்தல்:-**

பயிர் நட்டு 45 நாள் களை அகற்றி பத்திரைக் கலவையிட்டு மண் அணைக்கப்படல் வேண்டும். இது புதிய வளர்ச்சியைக் கூட்டும். நீர் மூஞ்சி வண்டின் தாக்கத்தையும் குறைக்கும்.

**நீர்ப்பாசனம்:-**

வத்தாளைச் செய்கை அநேகமாக மழையை நம்பியே பயிரிடப்படுகிறது. நீர் குறைவாகக் காணப்படின் விளைவு குறைவடையும். எனவே வரண்ட காலத்தில் நீர்ப்பாசனம் செய்தல் அவசியம். கூடியளவு நைதரசனும் மண்ணீரலிப்பும் காணப்படின் புதிய வளர்ச்சி கூடி வேர் தடித்து கிழங்குகள் வெடிக்கும். ஒரே நிலத்தில் வத்தாளையைத் தொடர்ந்து பயிரிடின் மண்ணில் நஞ்சுச் சேர்வை சேர்ந்து கிழங்கின் விளைவைக் குறைக்கும்.

**அறுவடை:-**

பயிர் நட்டு 80-85 நாட்களில் இலைகள் மஞ்சளாக மாறி உதிரத் தொடங்கும் போது கலச்சாறு இன்றி கபில நிறமாக மாறும்போது அறுவடையை மேற்கொள்ளலாம். பயிரை அதிக காலம் மண்ணில் விடும்போது உண்ணக்கூடிய தன்மை குறைவதுடன் வண்டு, எலி சேதம் ஏற்படும். சரியான நேரத்தில் அறுவடை அவசியம். அறுவடை செய்ய முதல் நாள் பாத்திகளுக்கு நீர் தெளிப்பதன் மூலம் கிழங்குகளை சேதம் ஏதும் ஏற்படாமல் பெற்றுக் கொள்ளலாம்.

**சேமிப்பு:-**

வத்தாளங் கிழங்கை உலர்த்திச் சேமிக்கலாம். உலர்த்துவதால் நோய் பீடைத் தொற்றல் குறைக்கப்படும். சேமிப்பின் போது இழப்பைத் தடுக்க ஈரமான இடத்தில் வைக்காது உலர் நிலத்தில் வைப்பதன் மூலம் பங்கஸு"த் தாக்கத்தை தவிர்க்கலாம்.

**விளைவு:-**

சராசரி விளைவு 20 தொன்/கெக்(8 தொன் ஏக்கருக்கு) இவ் விளைவு இடத்துக்கிடம் வேறுபடலாம்.

# நெற்பயிரைத் தாக்கும் பட்டாளப் புழு அல்லது இராணுவப்புழு




a. நிறையுடலி(தாய்ப்பூச்சி)
b. முட்டைக் கூட்டம்
c. குடம்பி (புழுப்பருவம்)
d. கூட்டுப்புழு

*தாக்கத்தை அடையாளம் காணல்-*

1. இலைகள் இழக்கப்பட்ட மொட்டையான பயிர்கள் காணப்படுதல்.
2. அடிக்கட்டைகள் மட்டும் எஞ்சியிருத்தல்.

நிறையுடலிகள் (தாய்ப்பூச்சிகள்)

சாம்பல் கலந்த மண்ணிற உடல் கொண்ட அந்துப்பூச்சிகள் ஆகும். 15mm -20mm நீளம் உடையவை. சிறகுகள் இணைக்கப்பட்டவை. முதலாம் சோடிச் சிறகுகள் ஒவ்வொன்றிலும் ஒரு பெரிய மிகத் துலக்கமான கறுப்பு நிறப் பொட்டும் ஏராளமான கறுப்பு நிற அலைவடிவ அடையாளங்களும் காணப்படுபவை. இரண்டாம் சோடிச்சிறகுகள் வெளிர்மண்ணிறம் உடையவை. சிறகுகளின் விளிம்புகள் கறுப்பு நிறம் உடையவை. உடலின் பின்முனையில் அடர்த்தியான மண்ணிற மயிர்கள் போன்ற அமைப்புக்கள் காணப்படும். இவை பகலில் மறைந்திருந்து இரவில் சுறுசுறுப்பாகச் செயப்படுகின்றன.

*முட்டை:-*

நிறையுடலி பெண் அந்துப் பூச்சிகள் ஒவ்வொன்றும் ஒரு தடவையில் 200-300 வரையான முட்டைகளை இடுகின்றன. நிமிர்ந்து காணப்படும் நெல் இலைகளின் கீழ்ப்புற நுனிப்பகுதியில் முட்டைகள் கூட்டமாக இடப்படுகின்றன. இடப்பட்ட முட்டைகள் பெண் அந்தின் பின் முனைக்குரிய மண்ணிற மயிர்கள் போன்ற அமைப்புக்களினால் முடப்படுகின்றன.முட்டைகளிலிருந்து 3-9 நாட்களில் இளம் குடம்பிகள் வெளியேறுகின்றன.

*குடம்பி (புழுப்பருவம்):-*

முட்டைகளில் இருந்து வெளியேறும் இளம் குடம்பிகள் பச்சை நிறமானவை. 2 மில்லிமீற்றர் நீளம் உடையவை. இவற்றை நெற்பயிரின் இலைகளில் வேறுபிரித்தறிவது கடினமானதாகும். இவை தோல் கழற்றி வளர்ச்சியடையும் போது கரும்பச்சை நிறம் உடையவையாக மாறுகின்றன. 15-24 நாட்களில் குடம்பிகள் முழுவளர்ச்சியடைந்து விடுகின்றன. முழு வளர்ச்சி அடைந்த குடம்பிகள் 30-40 மில்லி மீற்றர் நீளம் உடையவை. இவற்றின் உடலின் ஒவ்வொரு பக்கங்களிலும் மூன்று சமாந்தரக் கோடுகள் முன்முனையில் இருந்து பின்முனைவரை நீண்டு காணப்படுகின்றன. இக்கோடுகளுக்கு மேலதிகமாக துண்டுபட்ட கறுப்புநிற அடையாளங்களும் காணப்படுகின்றன. மூன்று சமாந்தரக் கோடுகள் காணப்படுவது இராணுவப் புழுவின் குடம்பிகளை அடையாளம் காண உதவும் இயல்பாகும். நன்கு வளர்ச்சியடைந்த குடம்பிகள் மண்ணை அடைந்து தோல் கழற்றி கூட்டுப்புழுக்களாக மாறுகின்றன.

*கூட்டுப்புழுக்கள்:-*

இவை மண்ணில் காணப்படுகின்றன. கடும் மண்ணிறம் உடையவை. முன்முனையில் ஒடுங்கிய இரண்டு முட்களை இவை கொண்டிருக்கும். கூட்டுப் புழுக்காலம் 07-14 நாட்கள் நீடிக்கும். இவை ஒருதடவை தோல்கழற்றி நிறையுடலிகளாக மாறுகின்றன. இராணுவப் புழுக்களின் வாழ்க்கைவட்டம் நிறைவடைய 04-06 வாரங்கள் தேவைப்படுகின்றன.

*கட்டுப்படுத்தல்.*

I இரசாயனக் கட்டுப்பாட்டு முறை:-

பின்வரும் பூச்சி நாசினிகளில் ஒன்றை சிபார்சின் படி விசிறவும்.

1. குளோர்பைரி பொஸ் 200கி/லீ செ.கு.
2. குளோர்பைரி பொஸ் 400கி/லீ செ.கு.
3. பென்தியோன் 500கி/லீ செ.கு.

II இரசாயனமற்ற முறை:-

1. வேப்பம் இலைகளை வயலில் அங்கும் இங்குமாக குவியலாகப் போட வேண்டும். ஒரு ஏக்கருக்கு 10 இடங்களில் இவ்வாறு போட வேண்டும்.
2. அடுப்புச்சாம்பல் ஒரு ஏக்கருக்கு 10-12 கிலோ தேவை. இதை மணலுடன் கலந்து காலை வேளையில் வயலில் தூவ வேண்டும்.
3. 05கிலோ ஆமணக்கு விதையை வறுத்து பின் இதைப் பொடி செய்து தண்ணீருடன் சேர்த்து உருண்டையாக்க வேண்டும். இவ் உருண்டைகளை ஒரு ஏக்கரில் 10 இடங்களில் வைக்க வேண்டும்.
4. வயலில் தண்ணீரை நிரப்பி பின் வெளியேற்றுவதன் மூலம் புழுக்கள், கூட்டுப்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.

**விவசாயப் போதனாசிரியர் ஒட்டுசுட்டான்**



# இலக்கியப்பகிர்வு

# ஆருக்குச்சொல்லி அழ..?



இது ஒரு வித்தியாசமான தலைப்பு. சமூகப் பொறுப்பும் மக்கள் நேசிப்பும் மிக்கவர்கள் சிறுமை கண்டு பொங்கும்போது இவ்வாறு தான் சொல்வார்கள். அவர்களில் ஒருவர்தான் கப்டன் கஜன் என்று அறியப்பட்ட கந்தையா கஜேந்திரன்.

பாரீஸ் ஈழமுரசு ஆசிரியராக பணிபுரிந்த அவர் 26.10.1996இல் வீரச்சாவு அடைந்தவர். இந்த வீரச்சாவு சொந்த மண்ணில் நடக்கவில்லை. அவருடைய வீரச்சாவு தொடர்பாக போராளி அருணா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"பிரான்சில் உள்ள எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் ஒருங்கிணைத்து மண்ணை நோக்கிய அவர்களின் செயற்பாடுகள் அமைய அவன் கனவுகண்டான். சந்திரிகா அம்மையாரின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பமானது. "சூரியக் கதிர்" அதனால் எம்மக்களின் வாழ்வியலில் ஏற்பட்ட அவலநிலை, அந்த பாரச் சிலுவை சுமந்த எமது மக்களின் உணர்வுகளை உலகிற்கு வெளிப்படுத்தும் முகமாக இடப்பெயர்வின் ஓராண்டுப் பூர்த்தியை அனைத்துலகக் கவன ஈர்ப்புவாரமாக, அனைத்துலகத் தமிழர் சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்தது. இக்கவன ஈர்ப்பு வாரத்தில் சிறிலங்கா அரசு, தமிழர்கள் மீது புரிந்த கொலை வெறியைப் பதிவாக்கிய ஒரு சிறப்பிதழை வெளியிடுவதற்கான வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையிலே சாவு அவனை அணைத்துக் கொண்டது.

சிறிலங்காப் பேரினவாதத்தின் கோரக்கரம் கள்ளப்"பாஸ்போட்" எடுத்து கடல் தாண்டிவந்து அவன் உயிர்குடித்தது. சிறிலங்காப் பேரினவாதத்தின் கோர முகத்தை உலகுக்கு அம்பலப்படுத்தத்தன் உயிரையே கொடுத்து அனைத்து உலகத்தின் கவனத்தையும் ஈர்த்துக் கொண்டான். மனித உரிமைக்கு மகத்துவம் கொடுத்த பிரெஞ்சு மண்ணுக்கு கஜன் ஒரு கேள்விக் குறியினை வரைந்துசென்றான்"

பாரீஸ் நகரில் ஈழமுரசு பத்திரிகையை ஆரம்பித்து அதன் வளர்ச்சிக்காக கஜன் பெரும்பாடுபட்டார். ஒரு பத்திரிகையினை ஆரம்பிப்பதும்- அதனை சகல மட்டங்களிலும் வளர்த்தெடுப்பது என்பதும் எவ்வளவு சிக்கலானது என்பதை பத்திரிகைத் துறையோடு சம்பந்தப்பட்டவர்கள் நன்கு உணர்வர்.

விதை நட்டு பலன்பெறுவது போன்ற செயற்பாடு அது. அதுவும் தமிழீழ விடுதலைப்போராட்டம் பக்கம் நின்று போராட்டப்பக்க நியாயங்களைப் பேசும் ஒரு பத்திரிகையை புலம்பெயர் நாட்டில் நடத்துவது கல்லில் நார் உரிக்கும் செயற்பாடு ஆகும். எனினும் கஜன் அதனை செய்தார். கல்லில் நார் உரித்தார்.

அவர் அப்படி உரித்த படியால் தான் இன்று தமிழ்த் தேசியத்தின் குரலாக ஈழமுரசு செயற்படுகின்றது. தமிழ் மக்களின் விடுதலைக்குரலை உலகெங்கும் பரப்பும் ஊடகமாக இயங்குகின்றது.

இனி மீண்டும் தலைப்புக்கு வருவோம். பாரீஸ் ஈழமுரசில் அதன் ஆசிரியராகக் கஜன் கடமைபுரிந்த காலப்பகுதியில் அவர் எழுதிய பந்திதான் "ஆருக்குச் சொல்லிஅழ" அதுவே இப்போது நூலாக வெளிவந்துள்ளது.

1995ஆம் ஆண்டு சனவரிமாதம் பொங்கல் தினம்தான் ஈழமுரசு பத்திரிகையின் பிறப்பு. அவ்வாறு பத்திரிகை பிறப்பெடுத்தபோது தொடரப் பட்டதுதான் "ஆருக்குச் சொல்லி அழ" என்னும் தலைப் பிலான பத்தி.

அது தொடங்கப்பட்ட விதத்தினை பின்வருமாறு "நண்டார்" அவர்கள் சொல்கிறார்.

"பத்திரிகை வெளிவரும் சமயத்தில் எமது சமூகத்தில் இடம்பெறும் சமூக அவலங்களைக் கிண்டலும் விமர்சனமும் கலந்த ஆரோக்கியமான முறையில் அலசும் ஒரு பத்தியினை பத்திரிகையில் உள்ளடக்கவேண்டும் என்ற கருத்து கஜனிடம் இருந்து வெளிப்பட்டது. பத்திரிகையினை உருவாக்குவதற்காகக் கஜனுடன் இணைந்து உழைத்துக்கொண்டிருந்தவர்களையும் கஜனின் இக்கருத்து மிகவும் கவர்ந்து கொண்டது. இப்பத்தியினை எழுதும் பொறுப்பினையும் கஜனே ஏற்றுக் கொண்டான்.




இப்படித்தான் "ஆருக்குச் சொல்லிஅழ" என்ற பத்தி "ஈழமுரசு" வில் ஆரம்பிக்கப்பட்டது. எந்தப் பெயரில் இப்பத்தியினை எழுதுவது என்பதுவும் கலந்துரையாடலுக்கு உட்பட்ட போது "ஆசைத் தம்பி" என்ற பெயரை முன் மொழிந்தார் பத் திரிகையாளர் சிவநாயகம் ஐயா. இப்பெயர் கஜனுக்கு மிகவும் பிடித் துப் போய்விட்டது. ஆசைத்தம்பி என்ற பெயரில் கஜன் தனது "ஆருக்குச் சொல்லி அழ" என்ற பத்தியினை "ஈழமுரசுவில்" எழுத ஆரம்பித் தான்.

"ஆருக்குச் சொல்லி அழ" என்னும் பத்தியினை,

1. பொதுவாகப் பேசப்படுவதற்குப் பலரும் தயங்கும் எமது சமூக அழுக்குகள் பலவற்றைப் பற்றி "ஆருக்குச் சொல்லி அழ" பேசியது.

2. சமூக அக்கறை கலந்த விமர்சனமாகவும் தமிழ்த் தேசிய உணர்வுடன் இணைந்து நின்று சமூகம் பற்றிய சமூகத்தில் உள்ள பிற்போக்கு அம்சங்களைப் பதிவு செய்த காலத்தின் கண்ணாடியாக "ஆருக்குச் சொல்லி அழ" விளங்கியது.

என இரண்டு விடயங்களை முதன்மைப்படுத்தியது என்று நண்டார் மேலும் சொன்னார்.

"ஆருக்குச் சொல்லி அழ" பத்தி எழுத்துகளை ஒன்று சேரப் படிக்கும்போது மேற்குறித்த இரண்டு பிரிவுகளும் முதன்மை பெறுவதை நன்கு உணரலாம்.

கவிஞர் கி.பி.அரவிந்தன் அவர்கள் இந்நூல் தொடர்பாக குறிப்பிடும் கருத்துக்கள் சிறப்பானவை.

முன்னுரை எழுதிய க.வே. பாலகுமாரன் அவர்கள் சுட்டிக்காட்டும் பின்வரும் பகுதி கஜனின் மேன்மையினை எமக்கு உணர்த்துகின்றன.

"ஒரு புதிய இலக்கியப் பாய்ச்சலை நிகழ்த்துவதற்கு ஈழத்தமிழ் இலக்கியப் பரப்பில் ஆயத்தங்கள் நடைபெறுவதாக நாம் பலமாக நம்புகின்றோம். அந் நம்பிக்கையின் ஒளிக்கீற்றுக்களாக அண்மையில் வெளிவந்த பல வெளியீடுகள் உள்ளன. அவற்றில் கஜனின் இவ்வாக்கமும் ஒன்று. தான் சார்ந்த சமூகம் தொடர்பான அவரது கவலை சரியும் தமிழ் மனித விழுமியத்தினை தடுத்திடும் அவரது முயற்சி அவர் ஏன் கொலையுண்டார் என்பதனை புரியவைக்கின்றது. தமிழர் உள்ளத்தில் அவருக்கு ஓரிடமுள்ளது. அதனையென்றும் நினைவுபடுத்த இவ்வாக்கம் பயன்படும்.

இறுதியாக ஒன்றினை பதிவு செய்ய விரும்புகின்றோம். எத்தனை பாடுகள், ஓடாகத் தேய்ந்த உழைப்பின் பெறுமதி, கண்டங்கள் தாண்டிய கஷ்டப்பயணங்கள், பனி நாடுகளில் அலையும் மனித மனங்களின் அவலங்கள், பிரிவுகள், சிதையும் குடும்ப உறவுகள் இத்தனையும் ஏன் என்கிற வலிமிக்க கேள்வியை கஜன் எழுப்பி விட்டுள்ளார். சிரித்துக்கொண்டே அவர் அழுவது எமக்குக் கேட்கிறது. இதனை வாசிக்கும் எம்மவர் ஒரு கணமாயினும் இந்நிலை பற்றி சிந்தித்தாலே கஜனின் ஆக்கம் அதன் இலக்கை அடையும் ஒரு மேன்மையின் பணிக்காக எழுத்தை பயன் படுத்தியது மட்டுமன்றி உயிரையும் ஈந்த அவர் இவ்வாக்கத்தின் வழி என்றும் உயிர்வாழ்வார்"

"ஆருக்குச் சொல்லி அழ" நூலினுள் புகுந்தால் எம்மைக் கவருவது அவருடைய ஈர்ப்புமிக்க எழுத்து நடைதான். வாசிப்பவர்களை லாவகமாக வளைத்துச் செல்லும் ஆற்றல்தான் இந்தப் பத்தியை அவர் வெற்றிகரமாகக் கொண்டு செல்ல பயன்பட்டுள்ளது என்பதைக் கவனிக்கவேண்டும்.

அதாவது மிக எளிமையான வார்த்தைகளை சாதாரணமாக நாங்கள் பயன்படுத்தும் சொற்களைக் கொண்டு அவர் செய்யும் சித்தரிப்பு சிறப்பானது. உண்மையில் எதையும் சிக்கலாகச் சொல்வதைவிட எளிமையாகச் சொல்வதுதான் மிகமிக கஷ்டமான செயற்பாடு என்பார்கள். ஆனால் கஜன் அதில் தனித்தன்மை பெற்றவர்.

"ஆனால் இஞ்சை வந்தபிறகு கிட்டத்தட்ட எல்லாம் மறந்துபோச்சு நாசங்கட்டின குளிருக்கை உடம்பு விறைக்கிறமாதிரி ஞாபகம் விறைச்சுப்போட்டுது போல" "நஷனாலிட்டி கிடைச்சிட்டதால சாப்பாட்டையும் நடை உடை பாவனையையும் மாத்தலாம். வேணுமெண்டால் மொழியையும் மறந்துபோகலாம். ஆனால் புதுச் சட்டியில பிடிச்ச கரி மாதிரி உந்தத் தோலை என்ன செய்யப்போறார்"

"யாழ்ப்பாணத்தில ஆமி அடிக்கிற ஷெல்லைவிட சிலர் ரெலிபோனில அடிக்கிற ஷெல்தான் பெரிசுங்கோ"

என்றமாதிரி கஜனின் எழுத்து கேலியும் கிண்டலுமாக மாத்திரம் செல்லவில்லை. அவர் எடுத்தாளும் ஒவ்வொரு விடயமும் மிக அழுத்தமான விடயங்களாகும். அவர் சுட்டும் ஒவ்வொன்றும் புலம்பெயர் நாடுகளில் வாழும் எம்மக்கள் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்களாகும்.

"சைவக் கோயிலுக்குள்ள போனால் பித்தாபிறை சூடி எண்ட அருமையான தேவாரத்தை பிள்ளையளுக்கு இங்கிலீசில எழுதிக் குடுத்திருக்கினம். அதுகள் அதைப் பார்த்து பிற்ராபிறைசூரி" எண்டு தேவாரத்தையும் தமிழையும் கொலை செய்யுதுகள்"

என்னும்போதோ "தமிழீழ வைபகம் எண்டது காலத்தின்ரை தேவை அதை வெளிநாட்டில இருக் கிற எங்கட சனம் சரிவரப்பயன் படுத்தினால் எங்களுக்கும் நல்லது நாட்டுக்கும் நல்லது" என எழுதும் போதோ "தெருவில போற நாய்க்கு கல்லெறிஞ்சா குலைக்கும் இல்லாட்டிக் கடிக்கும். அதுக்காக வேண்டி நாயும் கண்ட கண்ட இடமெல்லாம் காலைத் தூக்கினால் விட லாமோ" எனக் கோப மாகச்சொல் லும் போதோ,

"அதுக்காகத்தான் ஊரில அந்தச் சின்ன வயதிலையும் தலைமையைத் தாங்கி போராட்டம் நடத்துதுகள். விடுதலை எண்ணுறது வெறுமனே மண்ணில மட்டுமில்லை எங்கட மனங்களிலயும் வரவேண்டும்"

எனச் சாதிப்பாகுபாடு தொடர்பாக ஆத்திரம் கொள்ளும்போதோ கஜனின் அடிமனஉணர்வுகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

சிறந்த வடிவமைப்புடன் வெளியான இந்தப் புத்தகம் ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய ஒரு புத்தகமாகும் உங்களுக்கு அண்மையில் உள்ள அறிவு அமுது புத்தக சாலைகளில் இதனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன

# காான்ஸ் சர்வதேச திரைப்பட விழாவில்

# பாவலர் அறிவுமதியின் ஆழிப்பேரலை குறும்படம்

ஞா. கதிர்வேலன்

பாடலாசிரியர் அறிவுமதி இயக்குநராக உருவெடுத்திருக்கிறார். பத்து நிமிடத்தில் மனதைப் பதற வைக்கக்கூடிய குறும்படம்தான் 'நீலம்' பாரீசில் நடை பெற்ற கேன்ஸ் உலகத் திரைப்படவிழாவில் மூன்று முறை திரையிடப்பட்டு பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. சுனாமியின் சீரழிவை இதைவிட மென்மையாக சித்திரிக்க முடியாது என்கிறார்கள்.

சினிமாவில் நல்ல பாடல்கள் எழுதுவதற்கான சூழல் இல்லை என்பதால் இனி பாடல்கள் எழுதுவதில்லை என்ற முடிவுக்கு வந்தேன். அப்படியிருந்தாலும் முற்றாக சினிமாவிலிருந்து ஒதுங்க முடியவில்லை. சமீபத்தில் நடந்த ஆழிப்பேரலையின் பாதிப்பு மனதைத் தொட்டது. நான் என் நண்பனோடு சோணங்குப்பம் அருகிலேயே வசித்தவன். உப்புக் கலந்த காற்று என் சுவாசத்தில் கலந்திருக்கிறது. மீனவர்களின் மகிழ்ச்சியையும் துக்கத்தையும் அருகிலிருந்து பகிர்ந்து கொண்டவன். அத்தகையவர்களின் வாழ்க்கை ஆழிப்பேரலையால் துடைத்துச் செல்லப்பட்டபோது அந்த உணர்வுகளை ஏதாவது ஒரு வடிவத்தில் சொல்ல வேண்டிய தகிப்பு கூடியது. எனக்கு கவிதை தெரியும்.

கடல் மர்மங்கள் கொண்டது. ஆச்சரியம் நிரம்பியது. வினோதங்களின் இருப்பிடமானது. இருந்தாலும் கடல்தாயை ஆழிப்பேரலைக்கு பிறகு ரசிக்க முடியவில்லை. தாயை இழந்த குழந்தைகளின் கதறல், கண்ணீர்ப் பெருக்கு இவையெல்லாம் தூங்க முடியாத இரவுகளை எனக்குத்தந்தன.

கடலும் சிறுவனும் மட்டும் படத்தின் பாத்திரங்கள் என்று சொல்லிக் கொண்டே அறிவுமதி 'நீலம்' படச் சுருளை இயக்குகிறார்.

அவரது வார்த்தைகள் அப்படியே திரைக்கு வந்திறங்கிய ஆச்சரியத்தை பார்க்கிறோம். கடலுக்குள்ளேயிருந்து வந்த நண்டைப் பிடித்துக் கொண்டு "எங்க அம்மாவை பார்த்தியா, தினம் கடலுக்குள்ளே போயி போயித்தானே வர்றாய், நீ எங்க அம்மாவைப் பார்த்திருப்பாய் சொல்லு. எங்க அம்மா உள்ளே தானே இருக்காங்க? அவங்களை உடனே வரச்சொல்லு. அது வரைக்கும் நான் இங்கேதான் இருப்பேன்!" அம்மா, அம்மா, அம்மா, என்ற அலறல் ஒரு புள்ளியில் முடிவடைகிறது. கடலின் பேரிரைச்சல் சத்தியமாக கடலை வியக்க முடியவில்லை. கடல் நமக்கு முதல் தடவையாக பயம் காட்டுகிறது. ஆனால் சாய்ந்து கதறும் சிறுவனுக்கோ நம்பிக்கை ஊட்டுகிறது.... ஆச்சரியம்தான்.






பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு புதிய பயிற்சியாளரை அவுஸ்திரேலியாவில் தேடிவருகின்றனர்.

எப்போதுமே இந்தியாவுடன் போட்டி போடுகிற பாகிஸ்தான் கிரிக்கெட் பயிற்சியாளரை தேர்வு செய்வதிலும் இந்தியாவுடன் போட்டி போடுகிறது. ஏற்கனவே இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த கிரேக் சப்பல் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். இந்த நிலையில் பாகிஸ்தான் அணிக்கு களத்தடுப்பு பயிற்சியாளர் ஒருவரை தேடிக்கொண்டிருக் கிறார்கள். பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இதற்காக வெளிநாட்டு வீரர்களை கணக்கில் எடுத்து பரிசீலனை செய்தது. கடைசியாக

## அவுஸ்திரேலிய பயிற்சியாளரை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தேடுகிறது

இந்தியா ஒரு அவுஸ்திரேலியரை பயிற்சியாளராக போட்டிருப்பதால் பாகிஸ்தானும் களத்தடுப்புப்பயிற்சியாளராக ஒரு அவுஸ்திரேலியரை போட முடிவு செய்துள்ளது. அவர்போப் உல்மராக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இந்த தகவலை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் சகார்யார்கான் தெரிவித்துள்ளார்.

இதுவிஷயமாக ஏற்கனவே நான் பாகிஸ்தான் அணி பயிற்சியாளர் போப் உல்மருடன் ஆலோசனை செய்துள்ளேன் அவர் சிறந்த பயிற்சியாளர். அவருடன் பேச்சு தொடக்க நிலையில் நடந்து உள்ளது என்றும் அவர் கூறினார்.

பாகிஸ்தான் வீரர்களுக்கு பந்துவீச்சில் பயிற்சி அளிக்க வசிம் அக்ரம், வக்கர் யூனிஸ் முன்வந்தால் வரவேற்போம் என்றும் சபை தலைவர் கருத்துத்தெரிவித்தார்.

இதற்கிடையில் சென்னையில் உள்ள எம்.ஆர்.எப்.பேஸ் பவுண் டேசனுக்கு வந்து வேகப்பந்து வீச்சில் பயிற்சி அளிக்க பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் இம்ரான்கான், வசிம் அக்ரம், வக்கர் யூனிஸ் ஆகியோரை அனுப்பி வைக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சம்மதித்து இருப்பதாக எம்.ஆர்.எப்.பவுண்டேசன் தலைமை அதிகாரி டி.எ.சேகர் தெரிவித்தார்.



ஆஜன்ரீனாவைச் சேர்ந்த பிரபலமான உதைபந்தாட்ட வீரர் மரடோனாவின் கால்பந்து வாழ்க்கையை செய்திப்படமாகத் தயாரிக்கிறார் சரஜீவோவைச்சேர் ந்த சினிமா இயக்குநர் எமிர்குஸ்துரிகா. அதற்காக பெல்கிரேடில்(செர்பியா) உள்ள ராட் ஸ்ரார் மைதானத்தில் நடைபெற்ற படப்பிடிப்பில் பந்தை உதைத்து திறனை வெளிப்படுத்துகிறார் மரடோனா.

## கால்பந்து தரவரிசையில் 135ஆவது இடத்தில் இந்தியா

சர்வதே கால்பந்து சம்மேளனம் வெளியிட்டுள்ள தரவரி சைப் பட்டியலில் அன்டோராவுடன் இணைந்து 135ஆவது இடத்தைப் பிடித்துள்ளது இந்தியா. பாகிஸ்தானுக்கு எதிராக குவெட்டாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் 1-1 என சமன் செய்ததன் மூலம் மூன்று இடங்கள் உயர்வுபெற்றுள்ளது இந்தியா.

அதேசமயம் உலகின் இரண்டாம் அணியாகத் திகழும் செக்குடியரசுடன் உலகக்கோப்பைக்கான தகுதிப்போட்டியில் விளையாடியதால் 135ஆவது இடத்திற்கு உயர்ந்துள்ளது அன்டோரா. ஐரோப்பாவில் மிகச்சிறிய நாடு அன்டோரா. 64ஆயிரம் மக்களே வசிக்கின்றனர்.

கங்குலி மீதான தடையை ஐ.சி.சி நீக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. என்று இந்திய கிரிக்கெட் சபை தலைவர் ரன்பீர்சிங் மகேந்திரா தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணி மெதுவாக பந்து வீசியதற்கு கப்டன் கங்குலிக்கு 6 ஒருநாள் போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டு இருப்பது மிகவும் கடுமையான தண்டனையாகும்.

கடந்த 2 ஒருநாள் போட்டியில் ஆடாதது போதுமான தண்டனையாகும்.

## கங்குலி மீதான தடையை கிரிக்கெட் சபை நீக்கும்

### ரன்பீர்சிங் மகேந்திரா நம்பிக்கை



கங்குலி மீதான தடையை ஐ.சி.சி முடிவுக்கு கொண்டு வரும் என்று நம்புகிறேன். இந்த விவகாரத்தை ஐ.சி.சி கவனத்துக்கு மீண்டும் கொண்டு செல்ல கங்குலிக்கு சபை ஆதரவு அளிக்கும் அத்தோடு இந்திய கிரிக்கெட் அணிக்கு பந்து வீச்சு பயிற்சியாளர் நியமிக்கும் திட்டம் எதுவும் இல்லை. இது பற்றி புதிய பயிற்சியாளர் கிரேக் சப்பல் தான் முடிவு செய்ய வேண்டும். இவ்வாறு ரன்பீர்சிங் மகேந்திரா கூறினார்.

## காயம் காரணமாக அகாசி விலகினார்



லண்டன் டென்னிஸ் ரசிகர்களுக்கு இது சோகமான செய்தி. முன்னணி வீரரான ஆந்த்ரே அகாசி காயம் காரண மாக விம்பிள்டன் தொடரி லிருந்து விலகியுள்ளார்.

நான்கு கிராண்ட்ஸ்லாம் தொடர்களிலும் சாம்பியன் பட்டம் வென்றவர் அகாசி. 35 வயதான இவர் 1992 இல் விம்பிள்டனில் கோப்பையை கைப்பற்றியுள்ளார். ஆனால் தற்போது இவருக்கு இது ராசியில்லாத தொடராக இருந்து வருகிறது. கடந்த ஆண்டு இடுப்பில் ஏற்பட்ட காயம் காரணமாக விலகி இவர் இம்முறையும் போட்டியில் பங்கேற்கப் போவதில்லை என அறிவித்துள்ளார்.

இது குறித்து போட்டி அமைப்பாளர்கள் கூறுகையில், "அகாசி விம்பிள்டனில் கலந்து கொள்ளப் போவதில்லை என கூறியுள்ளார். இந்த வருத்தமான செய்தியை அவர் தொலைநகல் மூலம் எங்களுக்கு அனுப்பியுள்ளார். இதில் இவரது காயம் குறித்து முழுமையாக தெரிவிக்கப்படவில்லை," என்றார்.

சமீபத்தில் பாரீசில் நடந்த பிரெஞ்ச் ஓபன் தொடரின் முதல் சுற்றில் அகாசி தோல்வி அடைந்தார். அப்போது ஏற்பட்ட முதுகுவலியே இவர் விலகுவதற்கு காரணமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



9ஆவது சூடிமன் கோப்பைக் கான உலக பூப்பந்து கலப்பு குழுப் போட்டி மே திங்கள் 10 ஆம் நாள் பெய்சிங் மாநகரில் தொடங்கின். உலகின் 41 நாடுகள் மற்றும் பிர தேசங்களின் அணிகள் கலந்துகொண்டன. போட்டி 5 நிலைகளில் நடைபெற்றது. சீனா உள்ளிட்ட முதலா வது நிலையில் இடம் பெறும் 8 அணிகள் இப்போட்டியின் சாம்பியன் பட்டத்துக்காக போட்டியிட்டன.



சர்வதேச தடகள சம்மேளனம் ஏற்பாடு செய்த போட்டியின் ஜப்பானிய சுற்று மே 7 ஆம் நாள் நடைபெற்றது. எதென்ஸ் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்ற சீன வீரர் லியூசியாங் ஆடவருக்கான 110 மீற்றர் தடை ஓட்டப் போட்டியில் 13.12 விநாடியில் தூரத்தை ஓடி முடித்து சாம்பியன் பட்டம் பெற்றார். அத்துடன் இந்த போட்டிப் பருவத்தில், இந்த நிகழ்ச்சியின் உலகில் சிறந்த சாதனையை உருவாக்கினார். மகளிருக் கான இரும்பு கம்பிக் குண்டு வீசுதல் போட்டி யில் வீராங்கனை சாங்வென் சியூ 72.34 மீற்றர் என்ற சாதனையுடன் சாம்பியன் பட்டம் பெற்றார்.

## ஜெயசூரியா சதம் அடித்தார்



அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. ஏற்கனவே 20 ஓவர் போட்டியில் இங்கிலாந்து அணியுடன் மோதிய அவுஸ்தி ரேலியா நூறு ஓட்ட வித்தியா சத்தில் தோல்வியடைந்தது.

அடுத்ததாக நேற்று கவுண்டி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்றது. கவுண்டி அணியில் இடம்பெற்றிருந்த சோமர்செற் அணியும் அவுஸ்திரேலிய அணியும் மோதின.

சோமர்செற் அணியில் இலங்கை வீரர் ஜெயசூரியா இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பாட் டத்தை எடுத்தது. அனைத்து வீரர்களுமே அதிரடி யாக ஓட்டங் களைக்குவித்தனர். பொண்டிங் 80 ஓட்டங்களும், ஹைடன் 76ஓட்டங்களும், கிளார்க் 63ஓட்டங்களும், ஹீசே 51ஓட்டங்களும் எடுத்தனர். அவுஸ்திரேலிய அணி மொத்தம் 50 ஓவர் களில் 5விக்கெட் இழப்பிற்கு 342 ஓட்டங்களைப் பெற்றது.

அவுஸ்திரேலிய அணி 342ஓட்டங்களைக் குவித்திருந்ததால் சோமர்செற் அணியால் வெற்றிபெற முடியுமா என்று கேள்வி எழுந் தது. ஆனால் முதலில் கள மிறங்கிய சுமீத், ஜெயசூரியா ஆகியோர் அதிரடியாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தனர்.

சுமீத் 74 பந்துகளில் 108 ஓட்டங்களைக் குவித்தார். இதில் 17 பவுண்றிகளும், 1சிக்சரும் அடங்கும். அதே போல ஜெயசூரியா 101ஓட்டங் களை எடுத்தார். 79பந்து களைச் சந்தித்த இவர் 9 பவுண்றிகள் 3சிக்சர்களையும் பெற்றார்.

அடுத்துவந்த வீரர்கள் கொஞ்சம் தடுமாறினாலும் கூட முதல் இரு வீரர்களும் ஏராளமாக ஓட்டங்களைப் பெற்றதனால் சோமர் செட் அணி எளிதாக வெற்றி பெற்றது. 46.5 ஓவர்களில் 6விக்கெட் இழப்பிற்கு 345ஓட்டங்களைப்பெற்று வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது.



# பெண்களும் சிந்தனை வளர்ச்சியும்...

"தாரத ரென்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த
நாட்டிலே"

என்று பாடிய பாரதி ஆண்களுக்குச் சமமாகப் பெண்களும் வாழவேண்டுமென்ற தைரியத்தை ஊட்டினார். ஆயினும் இன்றைய நிலைமைகளில் பெண்கள் பல்துறைகளிலும் தமக்கென ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டதுடன் அறிவுசார் நிலைமைகளில் குரல் கொடுத்தும் மரபின் வேர்களால் சம அந்தஸ்தைப்பெற்றுக்கொள்ள முடியாதவர்களாகவும் வாழ்வின் கோலங்களில் அகப்பட்டு அந்தரிக்கின்றார்கள்.

பண்பாடு, மரபு, பழக்க வழக்கம் கிராமியச் சூழல்களில் குறிப்பிட்ட எல்லைகளில் வெளிப்படையாக நிலைபெற்றிருக்க, அதற்குள் மறைந்துகொண்டு தம்மைப் பெருந்தன்மை படைத்தவர்களாக உருவகித்துப் போலி நியாயங்களைக் கைக்கொள்பவர்களும் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள்.

இன்றைய காலகட்டத்திலே பெண்களின் வாழ்வு ஒளி மிகுந்ததாக வளம் பெற்றதாக இருப்பினும் முழுமையாக சமுதாயத்தில் அனைத்துப் பெண்களும் நன்றே வாழ்கிறார்களா? பெண்களைத் தரம் குறைக்கும் நடவடிக்கைகள் சமூகப் புலங்களில் எவ் விதங்களிளெல்லாம் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன.

சமூக ஒழுங்கமை வின்மையிடையே, ஒழுங்கமைக்கப்பட்ட தவறிழைக்கும் குழுக்கள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள், உயர்மட்டத்தினர் இழைக்கும் குற்றச் செயல்கள் என்பதாகப் பெண்கள் வாழ்விலே பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதனை எதிர்த்து முரண்பாட்டைத் தோற்றுவித்து குரல் கொடுக்கும் பெண்கள் மென்மேலும் கீழ் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இவ்வாறான பெண்களே சமூகத்திலிருந்து கீழ் நிலைப்பட்டங்களைச் சான்றிதழாகப் பெற்றுக்கொள்கின்றனர்.

பெண்களுக்கெதிரான குற்றவியல் நடத்தைகளை உடையவர்கள், உயர்நிலையில் வாழ்பவர்கள் தம்மை வெளிக்காட்டிக் கொள்வதில்லை. தாங்கள் மீறுகின்ற சமுதாய நடவடிக்கைகளில் சட்ட பூர்வத் தன்மைகளில் நின்று நிலைப்பது போல் நடித்தும்விடு கின்றார்கள். சுயநலப்போர்வையில் வழிவகைகள், தீர்வுகள் தமக்காகவே தாம் வகுத்தும் கொள்கிறார்கள். மாறாக கல்வி அந்தஸ்து போன்ற காரணிகளில் கீழ்நிலையில் உள்ளவர்கள் சமுதாயக்குற்றங்களில் பெண்களுக்கெதிரான விலகல் நடத்தைகளில் ஈடுபடும்போது சமூகத்தின் ஓரங்கட்டலுக்குள்ளாகித் தண்டனையும் பெறுகின்றனர்.

வேறுபட்ட சமூகக் கூறுகளிடையே நமது புலங்களில் வேறுபட்ட நடத்தைப் பாங்குகளை அவதானிக்கின்றோம். பெண்கள் முன்னேற்றம் கண்டு முன்பு ஒரு கதை பின்பு ஒரு கதையாக சந்தர்ப்பத்திற்குத் தகுந்த மாதிரி அவர்களின் உன்னத உழைப்பிற்குக் களங்கம் கற்பிப்பவர்களும் நம்மிடையே இருக்கத்தான் செய்கின்றார்கள்.

அறிஞர் ஒருவரின் கூற்றுப்படி "அணுகுண்டு போட்ட இடத்தில் நாற்பது ஆண்டுகளுக்குப் புல் முளைக்காது. பொறாமைக்காரன் இருந்த இடத்தில் நானூறு ஆண்டுகளுக்கு எதுவும் முளைக்காது" இந்நிலைமையானது அழிவுப் பாதைக்கே இட்டுச்செல்கின்றது.

மாறாக போட்டி நிலைமையானது விடாமுயற்சியை ஏற்படுத்தி ஆக்க பூர்வமான நிலைமைக்கும் வளர்ச்சிப் பாதைக்கும் இட்டுச் செல்கின்றது.

குடும்பங்களிடையே பெண் என்பவள் மனைவி, தாய், மகள், சகோதரி போன்ற இன்னோரன்ன பாத்திரங்களை வகிக்கின்றாள். தங்கி வாழ்தல் என்பது தவிர்க்கப்படுதல் வேண்டும். கிராமங்களில் கல்வி அறிவு குறைந்த பிரதேசங்களில் வாழ்க்கைத்தரம் கீழ் நோக்கும் நிலையிலுள்ள பெண்கள் தம்மைப்பற்றிச் சிந்திக்கின்றார்களா? உழைப்புச்சக்தி கூடத் திட்டமிடலின்றி வீணடிக்கப் படுகிறது. வஞ்சனைகளும் வாழ்க்கைப் போராட்டங்களும் தொடர்கதைகளாகிக்கொண்டிருக்கின்றன. இதற்கு கல்வி அறிவு என்பதே சுயசிந்தனையை, ஆற்றலை வளர்க்கின்றது . ஹம்ப்ரி எனும் அறிஞர் கூறுவார். "அறிவு தெளிவு பெற வைக்கிறது. தெளிவு துணிவைத் தருகிறது. வேறென்ன வேண்டும் மனிதனுக்கு?" என்பார். இது எல்லாப் பெண்களுக்கும் ஏன் முழு மனித இனத்துக்குமே பொருத்தமானதும் கூட.

ஒவ்வொரு பெண்ணின் பாதிப்புக்கும் துன்பத்திற்குமுரிய நிலைமையானது அந்தந்தப் பிரச்சினையின் வடிவத்தில் தாமிருந்தால் தமக்குரிய நிலைமையானது அலட்சியப்படுத்தப்படக்கூடாது. அதே நிலைமையில் மற்றொரு பெண்? முழு மனித இனமுமே சமூக பாரபட்சமின்றி தீர்வுகளை வழங்கவேண்டும். ஆயினும் பெண்களும் தமது சிந்தனாசக்தியைப் பிரயோகித்து ஆற்றலை உறங்கவிடாது கேள்வி கேட்பினும் விடைகள் சரியான முறையில் கிடைப்பதில்லை. பெரும் பாலும் தீர்வு பெண்களில் குறை கண்டு பிடிப்பதாய் முடிகிறது.

பெண்ணின் சுயமேம்பாட்டின் அடிப்படைக்காரணி சமூகத்திலே வாழ்வாதாரங்கள் வழி, பெண்ணின் உழைப்பின் வழி, தோற்றம்பெற, ஆயின் தனிப்பட்ட பெண் பற்றிய புலக்காட்சியை அவள் வீழ்விற்கான சந்தர்ப்பங்களாக சமூகத்தில் விதைப்பவர்களும் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள்.

பெண்களின் ஆற்றல், சிந்தனைவளர்ச்சி ஒருபுறமிருக்க, மீண்டும் மீண்டும் நடைபெறும் மரபு சார்ந்த ஒரு சமூக ஊடாட்டம் அல்லது இடைவினை அதன் காரணமாக உருவாகும் நிர்ப்பந்தங்கள், கீழ் நிலைகள் பெண்களை நிலை குலையச் செய்து விடுகின்றன. அதற்குரிய காரணம் யாதெனில்? "நீ ஒரு பெண்" என்பதே விடையாகவும் கிடைக்கிறது. இந்தச் சமூகத்தின் மனித உறவுகளே இவ்வகையான உணர்வு பூர்வமான காயங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். மனிதன் சகமனிதனை மதிக்க வேண்டியவனாகின்றான். அதே போன்று பெண்களையும் சக மானிடப் பிறவியாக நினைப்பதில் பின் நிற்பதற்குக் காரணம்தான் என்னவோ? மரியாதையைக் கொடுத்து மரியாதை வாங்குவதுதானே சகஜம். இந்நிலையில் பெண்கள் அனைவரும் அறிவு பூர்வமாகத் தம்மை அறிந்திருத்தல்வேண்டும். ஏன்? முழுச் சமூகமுமே தத்தம் நிலைமைகளைப் புரிந்துகொள்வது மானிட வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

"தன்னை அறிவது அறிவு;
தன்னை மறப்பது மடமை"
-ஜேர்மன் பழமொழி-

**இனியவள்**

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓவியங்கள் உதவிடவேண்டும். இதுவே மக்களுக்கும் ஓவியங்களுக்குமான இடைவெளியை குறுக்க ஒரேயொரு அற்புத வழி. இங்கேதான் புகழேந்தி வருகின்றார். அவர் தஞ்சையின் தும்பத்திக் கோட்டையில் பிறந்ததால் தமிழ்நாட்டுத் தமிழனாகவிருப்பதோ, 1983 யூலை இனவழிப்புக் காலத்தின் பின் ஈழத்தமிழர் ஆதரவு நிலைப்பாடெடுத்து ஓவியங்களை வரைந்தார் என்பதோ இங்கு முக்கியமில்லை. அவரது ஓவியமொழி எதுவென்பதே இங்கு கேள்வி. அந்தவகையில் எல்லா வட்டங்களையும் மீறி உடைத்துக்கொண்டு அவரது ("ஈழப்போராட்டத்திற்கு ஆதரவாகவும் தென்னாபிரிக்க நிறவெறிக்கெதிராகவும் பாலஸ்தீன விடுதலைக்கு ஆதரவாகவும் இந்தியாவில் நடைபெற்ற சாதிய மத வன்முறைகள், பெண்ணிய ஒடுக்கு முறைகள், அரச பயங்கரவாத அடக்குமுறைகள் எல்லாவற்றிற்கெதிராகவும்" "ஒரு கவிதை சிறுகதை இலக்கியம் போன்றவை எப்படி சமூக மாற்றத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறதோ அதேபோல ஓவியமும் அதைச் செய்யமுடியும் என்கிற ஆழமான நம்பிக்கை எனக்குண்டு" - "எனக்கு தனித்துவம் மனிதன்தான். மனிதன் பக்கம் நின்று அவனது நெருக்கடிகளைப் புரிந்துகொண்டு அதனை ஓவியமாக மொழியாக்கம் செய்கிறேன்" "சமூக நோக்கில் மானுடச் சிக்கல்களை ஓவியங்களில் அணுகுவதுதான் எனது செயற்பாடு") ஓவியங்கள் வெளிவருகின்றன. எனவே அவர் "ஓவியப் புரட்சியாளனாக" "கலாபூர்வமான கலகக்காரனாக" மாறிவிட்டார்.

இங்கேதான் ஒரு செய்தி பீறிட்டு வெளிக்கிளம்புகின்றது. மனிதர்கள் இலக்குகளை அடைவதற்காக வழிகளை பிறப்பிக்கின்றார்கள். அவ்வழியில் செல்ல பல்வேறு கருவிகளை கையாளெடுக்கின்றார்கள். பொதுவில் மனிதர் விடுதலை இலக்கினை அடைய புரட்சிகர வன்முறைப் பாதையில் ஆயுதங்களை கையாலெடுக்கின்றார்கள். ஏனெனில் அவர்கள் ஆயுதங்களாலும் அது சார்ந்த ஆட்சியாளர் கருத்துக்களாலும் அடக்கப்படுகின்றார்கள். எனவே ஆயுதத்தினை கையாலெடுக்கும் அவர்களுக்கு "தளைகளை அறுத்தல்" "அடக்குமுறைச் சிந்தனையிலிருந்து விடுபடல்" என்பது தொடர்பான கருத்துக் கருவிகளும் அவசியமாகின்றன. எனவே இங்கே அவ்வகையில் ஓவியத்தை ஒரு கருத்தாயுதமாக கோட்பாட்டுக் குறியாக புகழேந்தி கொள்கின்றார். வேறும் பலரும் ஓவியத்தைக் கருவியாகக் கையாலெடுக்கின்றார்கள். **ஆனால் அவர்கள் தமக்காக மட்டும் தம் கருத்து நிலைக்காக மட்டும் தமது வாழ்க்கைக்காக மட்டும் ஓவியங்களை முதன்மைப் படுத்துகின்றார்கள்.** அல்லது ஓவியத்தை நவீன மயப்படுத்துவதாக எண்ணிக்கொள்கின்றார்கள்.

இங்கேதான் புகழேந்தி பொருந்துகின்றார். அவரது போக்கு மிக வித்தியாசமானது. புரிவதற்கும் அறிவதற்கும் புரட்சிகரமானது. இடைவிடாது தொடரும் மனித அவலத்தின் எல்லையற்ற வலிகளின் நோவுக்கு வழிகாணும் மனித முயற்சியின் தொடரிழையவர். எத்தகைய மேன்மைப் பணியிது? அவரது ஓவியங்கள் 'தமிழ் அடையாளம்' கொண்டவை. அவரது **மனிதர்கள் சருவதேச அடையாளம் கொண்டவர்கள்.** அவரது தமிழ்த் துயரம் பேசும் ஓவியங்கள் சருவதேசத் துயரமும் பேசுகின்றன. அவரது பெண் வடிவங்கள் 'மிகவும் தமிழ் அடையாளம்' கொண்டவை. காலம் காலமான தமிழ்ப் பெண்ணின் துயரம் கோடுகளின் வழி குருதி வழிகின்றது. இது எமது சமூக அடையாளம். "சபிக்கப்பட்ட மக்களின் இருண்ட வாழ்வில் ஒளியைப் பிறப்பிக்க எடுக்கப்படும் அனைத்துப் போராட்டங்களிலும் அவர் இருக்கின்றார். அவரது வளையும் கோடுகளும் அழுத்தமான வண்ணங்களும் சீற்றமடையும் மனிதர்களை இனம் காட்டுகின்றன. திலீபனின் கண்ணில் தெரியும் ஏக்கமும் பிரபாகரன் முகத்தின் துயர்தோய்ந்த சாந்தமும் எரிமலையின் கனன்று சிவக்கும் தீ முகங்களாக எமக்குள் மாற்றமடைகின்றன. புகழேந்தி என்னும் மானுடவியல் ஆய்வாளனின் வண்ணக் கலவையின் வேதியல் மாற்றமிது.

எம் மண்ணின் நன்றியையும் மதிப்பையும் அவருக்கு தெரிவிக்க ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியிலேயே புகழேந்தி வெகு உக்கிரமாகவே கூறினார். ஓவியத்தில் புனிதமா - புடலங்காய் கலை நேர்த்தியா கத்தரிக்காய் என்றார். வடிவத்திற்காக மனிதரா? மனிதருக்காக வடிவமா? வண்ணங்களும் கோடுகளும் எனக்கு கருவிகளே என்றார். இங்கேதான் புகழேந்தி கலகக்காரனாக அடையாளம் காணப்படுகின்றார். புரட்சியாளன் என போற்றப்படுகின்றார். ஏன்? தன் வடிவத் தெரிவை வண்ணக் குழைவை கலைநேர்த்தியை அவர் பல தடவைகளில் எல்லாவற்றையும் விட பெரிய இலகிற்காக விட்டுக்கொடுக்கின்றார். உண்மையில் மக்களுக்கு சேவகம் செய்வதற்காக அவருக்கு வண்ணங்களும் கோடுகளும் சேவகம் செய்கின்றன. இதுவொரு இயங்கியல் பரிமாணம்; கலையின் தருக்கம்; ஓவியத்தின் விழுமியம் இங்கே பெர்னாட் சோவின் கூற்றொன்று தொடர்புறுகின்றது. "வாழ்வின் மிகப் பெரிய உண்மையான ஆனந்தம் எது தெரியுமா? உங்களால் தெரிவுசெய்யப்பட்ட உன்னத இலட்சியத்திற்காக **உங்களை பயன்படுத்த அனுமதித்தலாகும்.** சின்னஞ்சிறு கதைகள் பேசி வாழ்வதை விட மாற்றத்திற்கான இயற்கையின் விதியாக இருப்பதே மேல். நான் இறக்கமுன் முழுமையாக பயன்படுத்தப்பட்டவனாக இருத்தல் வேண்டும். வாழ்க்கை ஒரு சிறிய மெழுகுவர்த்தியல்ல எனக்கு அதுவொரு அற்புத ஒளிவிளக்கு. அதனை அடுத்த தலைமுறைக்கு பாரப்படுத்த முன்னர் என்னால் முடிந்தளவு அதனை பிரகாசமாக எரிக்க விரும்புகின்றேன்." எனவே புகழேந்தி அழகியல்ல கலை நேர்த்தியை தூக்கி வீசிவிடுகின்றார். அவ்வாறு வீசுவதன் வழி அவர் ஓவியங்களை இல்லாது செய்துவிடுகின்றார். உண்மையிலேயே பார்வையாளர் ஒருவர் கூறினார். **"ஓவியங்களை காணவந்தேன் ஆனால் அவற்றை காண வில்லை"** இங்கே புகழேந்தி செய்த புரட்சி ஓவியத்திற்கும் வாழ்க்கைக்குமான இடைவெளியை பூச்சியமளவில் சுருக்கி விட்டமைதான். உண்மையில் ஓவியங்கள் வரையாத ஓவியர் அவர். அழகியலிற்கு அவர் அடிமையாகவில்லை. அதனை அவர் அடிமைப்படுத்திவிட்டார்.

ஆனால் புகழேந்தி விரும்பினாலென்ன விரும்பாவிட்டாலென்ன அவரது உக்கிர ஓவியங்களில்கூட கலை நேர்த்தியை வடிவமைதியைக் காண்கின்றோம். பழமையின் வேர்களில் புதுமையின் தளிர்கள்; நவீன ஓவியத்தில் மிகப் பழமையான மனிதத்துயர்; நவீனத்துவ ஓவியத் தாக்கத்திற்கு அவர் உட்பட்டிருந்தாலும் அதிலிருந்து விடுபட்டு அவர் எடுக்கும் முயற்சி, மக்களுக்குப் புரியவேண்டும் என்பதற்காக பரிசோதனைகளை அரூப வடிவங்களைத் தவிர்த்தாலும் அழகியலைத் தவிர்க்காத பண்பு இவையாவும் அவர் ஓவிய மனதின் வெளிப்பாடு. செவ்வியொன்றிலே அவர் சொல்கின்றார், "நமது பாரம்பரியத்தின் வடிவங்களை ஓவியத்தில் வெளிப்படுத்தவேண்டும் என்கிற ஆசை இருக்கின்றது. அந்தவேலை தொடங்கியும் விட்டது. எதிர்காலத்தில் என்ன வரையவேண்டும் என்பதையும் நான் வாழுகின்ற சூழலும காலமும்தான் நிர்ணயிக்க வேண்டும்" புகழேந்தியின் ஓவிய மனிதன் பேசியவை இவை.

எமது விடுதலையின் அரசியலை ஓவியம்வழி பேசும் அவருக்கு நாம் செய்யக் கூடியதென்ன? ஆக்கிரமிப்பாளர் கையில் சிக்கி வதைபடும் மனிதத்தை விடுவித்து அன்பாளர் கையில் கொடுத்தலே. இடைவிடாத இப்போராட்டத்தின் இருளகற்றி, உரமூட்டி, வளமூட்டி அவர் தன் ஓவியம்வழி என்றும் எம்மோடு வாழ்வார். இதுவே தமிழீழ நெஞ்சங்களின் உருகிக் கனிந்த தோழமையுணர்வின் வேண்டுகையும் நம்பிக்கையுமாகும்.

# வெளிநாட்டுக்காரர் மூளையாய் இரண்டு பக்க இலாபம் சம்பாதிக்கினம்

'வணக்கம் வணக்கம் பிள்ளையள் ! என்னமாதிரிப் பாடுகளெல்லாம் போகுது. கிழமை தோறும் இப்பிடிகதைக்க முடிஞ்சாலும் மண்ணை விட்டுப் பிரிஞ்சு எவ்வளவு காலமாகப் போகுது. உங்களுக்கு ஒரு சந்தேகம் வந்திருக்கும், இவர் போனவர் அப்பிடியே தங்கிட்டார் எண்டு. போய்ப்பார்த்த நாடெல்லாம் நல்ல நாடுகள்தான், எனக்கும் பிடிச்சிருக்கு. ஆனாலும் என்ரை சொந்த நாடு இன்னும் கனக்கப் பிடிச்சிருக்கு. இந்த நாடுகளிலை இருக்கிற வசதி வாய்ப்புகள் எல்லாம் என்ன வானத்திலை இருந்தே கொட்டினது!

தமிழர் பொன்.இராமநாதன் தானாகவே வந்து கடல்வழியால லண்டன் போய் சிங்களவருக்கு நியாயம் கிடைக்கச்செய்தார். வெற்றியோட அவர் இலங்கைக்குத் திரும்பிவந்த நேரம் அவரை தங்கட தோளிலையே வைச்சுச் சுமந்துகொண்டு போச்சிது 5 முக்கிய சிங்களத்தலையள். ஆரெண்டு கேட்பியள், கட்டாயம் கேட்கவேண்டிய கேள்வி. டி.எஸ். சேனநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, இடதுசாரியள் தாங்கள் எண்டு சொன்ன ஒலிவர் குணதிலகவும், ஜேம்ஸ் பீரிஸூம். இன்னும் ஒராள்

வாகனங்களையும்விட இப்பிடி தொடருந்தில பயணிக்கிறது வித்தியாசமான அனுபவம் பாருங்கோ. விதம் விதமாய் எத்தினையோ ஆட்களைச் சந்திக்கிற வாய்ப்புகள் கிடைக்கும். எனக்கும் போனகிழமை சிலநாட்களுக்கிள்ளை கன புது ஆட்களைச் சந்திக்கிற வாய்ப்புகள் கிடைச்சிது. அதில முக்கியமான விசயங்களை அறிஞ்சு கொள்ள முடிஞ்சிது. என்னண்டு சொன்னால் இண்டைக்கு எங்கட நாட்டில போராட்ட சூழ்நிலையில சமூகக் கருத்திய[illegible] புரட்சி ஏற்பட்டு வருகிது. பார[illegible] எண்ட பேரிலை

நடக்கிற இடத்துக்குப் போனன். அந்தப்பிள்ளையளின்ரை பேருகளைக் கேட்க சந்தோசமாய் இருந்திச்சிது. வெளிநாடுகளிலை வாய்க்கிளை நுழையாத பேருகளை வைச்சு, பெயர்ப்பாரம்பரியமே சிதையப்போகுதெண்டு பயந்த எனக்குஅதிசயன், திருமகள், சாதுர்யா, தூயவன், இலக்கியா, எழிலி எண்டெல்லாம் பேருகளைக் கேட்க சந்தோசமாய்க் கிடந்திச்சிது. எட தாய் நாட்டிலையே டேமியன், றுலக்ஷா, டக்ஷன் எண்டு டகர, றகர வரிசையளிலையே பெரும்பாலும் பேர்வைப்பினம்,

அளவுக்கு குற்றுயிராய்க்கிடக்கிது. 'அவனவன் றொக்கற், பிளேன், கொம்பியூட்டர் எண்டெல்லாம் கண்டுபிடிச்சு முன்னேறிக் கொண்டிருக்க, எங்களுக்கிள்ளை இருக்கிற சில அரைகுறையள், கால்வாசியள் தாங்களும் தங்கட அறிவுக்கு(?) ஏதாவது கண்டுபிடிப்பம் எண்டு வெளிக்கிட்டது தான் உந்த சாதி. நீயம்மா ஒண்டுக்கும் யோசியாதை. தமிழன்ரை நாடு தமிழன்ரை கையில முழுசாய் வந்து சேரேக்கிள, சாதிக்கு மியூசியத்தில கூட இடமிருக்காது. ஆனால் நீர் எனக்கொரு உறுதிமொழி தரோணும: ஊக்கமாய் இஞ்சை நல்லமாதிரி படிச்சிட்டு, நாளைக்கு நாடு எல்லாம் நல்லமாதிரி கையில வந்தாப்பிறகு வந்து கட்டியெழுப்போணும். செய்வீரோ?'. 'நிச்சயமாய் தாத்தா ! எனக்கு விருப்பம் நாட்டுக்கு வந்து கடற்கரையோரமாய் 10,15 மாம்பழ




மனுசற்றை உழைப்பாலே எல்லே வந்தது. அப்ப அதுகளை நாங்களும் அடைஞ்சு கொள்ளலாமெல்லே. சிங்களவர் எங்களை எங்கை உருப்படவிடப்போறாங்கள் எண்டு உங்களுக்கொரு சலிப்புணர்வு இருக்கலாம். ஆனால், உங்கை இஸ்ரேல், அமெரிக்கா, ஈரான், கியூபா போன்ற நாடுகளைப் பாருங்கோ! எத்தினை நாடுகளின்ரை எதிர்ப்பு இருந்தாலும் சளைக்காமல், சலிக்காமல் தன்ரை பாதையில அதுகள் உறுதியாய் போய்க்கொண்டிருக்கிதுகள்.இமயமலை உச்சியான எவரெஸ்ருக்கு ஏறின வெள்ளைக்காரப்பிள்ளை ஒண்டை பேட்டியாளர்கள் கேட்டிச்சினமாம், 'நீங்கள் உங்கட முயற்சியிலை ஈடுபட்டுக்கொண்டிருக்கேக்கிளை எதிர்கொண்ட மிகப்பெரிய இடையூறு என்ன?' எண்டு. அதுக்கு அவா சொன்னாவாம், 'எங்கை என்னால இதைச் சாதிக்கேலாமல் போயிடுமோ எண்ட, என்னோட மனப்பீதிதான் எனக்குப் பெரிய இடையூறாய் இருந்திச்சிது' எண்டு. அதால நாங்கள் எங்கட ஒட்டுமொத்த வளர்ச்சிக்குத் தடையாய் மனசிலை இருக்கிற பலவீனங்களை வெற்றிகொள்ளப் பார்க்கோணும்.

நாட்டு நிலைமையும் என்ன ஒரேயடியாய் முடிவொண்டும் இல்லாமல் இழுபட்டுக்கொண்டிருக்கிதெண்டு யோசிப்பியள். இனப்பிரச்சினையைத் தீர்க்கவெண்டு வந்த சொல்கையிம் ISGA, சுனாமி. பொதுக் கட்டமைப்பு எண்டெல்லாம் சிங்களத் தரப்புகளால பேய்க்காட்டப்பட்டு கடைசியில புத்தர்சிலை விவகாரத்துக்கான அனுசரணையாளராய் மாறினாலும் ஆச்சரியப்படிறதுக்கில்லை. சிங்கள அரசியலில தமிழருக்குரிய உரிமை வழங்கப்படும் எண்டு நம்பின காலமெல்லாம் கடந்திட்டிது பாருங்கோ. அந்தக்காலத்திலை 1915 இல நீங்கள் இளசுகள் பிறந்தே இருக்கமாட்டியள். சிங்கள-முஸ்லிம் கலவரம் ஒண்டு நடந்தது. கொழும்பில இருந்த பிரிட்டிஷ் அரசு முஸ்லிம் பக்கத்துக்குச் சார்பாய் நடந்து கொண்டிட்டு எண்டு சிங்களவர் குறைப்பட்டுக்கொண்டிருந்த நேரம், லண்டனில போய் மேல்மட்டங்களில கதைச்சு சிங்களவருக்கு நியாயம் கிடைக்கச் செய்யிறதுக்கு வெளிக்கிட்டிச்சினம். 1ஆம் உலகயுத்தம் (1914-1918) நடந்துகொண்டிருந்த காலகட்டத்தில கப்பலில போய்ச்சாக வேண்டி வருமெண்டு சிங்களவர் ஒருத்தரும் முன்வராத நேரத்தில,

அஞ்சாவது ஆரெண்டு நினைக்கிறீயள் ? எங்கட சந்திரிகாவின்ரை தகப்பனார் S.W.R.D.பண்டாரநாயக்காதான். பிற்காலத்திலை உந்த கோஸ்டி என்னமாதிரி இனவாதம் கக்கினதெண்டிற விசயம் நீங்கள் அறிஞ்சதுதானே. நான் சொன்ன உந்த சுமந்துகொண்டு போனதை ஆரும் நம்பாமல் இருந்தால், யாழ்ப்பாணத்திலை பரமேஸ்வரா கல்லூரி அல்லாட்டி ராமநாதன் கல்லூரி இரண்டில ஒரிடத்தில நான் கண்ட ஞாபகம். போய்ப் பாருங்கோ! அப்பிடி நாங்கள் கால்வாருப்பட்ட வரலாறு நீண்டது. ஆனால் இப்ப எங்களுக்குக் கிடைச்சிருக்கிற தலைமையோட உந்த பாச்சாக்கள் எல்லாம் பலிக்காது. நாங்கள் எல்லாரும் உறுதியாய் பலமாய் நிக்கேக்கிளை ஒண்டுக்கும் யோசிக்கத்தேவையில்லை, கண்டியளோ !

என்ரை விசாவும் 3 கிழமையில முடியப்போகுது. அதுக்கிள்ளை மிச்சம் மீதியாய் பார்க்க வேண்டின நாடுகள் சிலதையும் பார்ப்போம் எண்டிட்டு ரெயினில வெளிக்கிட்டிருக்கிறன். எங்கையெண்டு கேட்பியள். அதெல்லாம் சொல்ல மாட்டன். என்ன இருந்தாலும் அந்த மனுசன் எங்கட நாட்டுக்கு எத்தினை தரம் வந்திருக்கும். நான் இவ்வளவு தூரம் வந்திட்டு, அந்தாளின்ரை நாட்டுப்பக்கம் போய்ப்பார்க்காட்டி அது அழகில்லையெல்லோ. அது தான் இந்த ரெயின் பயணம். எல்லா

எங்களிட்டை இருந்த சில கட்டுப்பெட்டித்தனங்கள் இருந்த இடம் தெரியாமல் அழிகின்றன. நம்பிக்கை தரக்கூடிய இந்த மாற்றம் போர்ச்சூழலில இருந்து தள்ளி வெளிநாடுகளில வாழிற எங்கட சனங்கள் மத்தியிலை எந்தளவிலை இருக்கெண்டு அறிஞ்சு கொள்ளிறதிலை எனக்குச் சரியான ஆர்வம் பாருங்கோ ! தலைவர் என்ன சொன்னவர் 'சமூகப்புரட்சி என்பது கலாச்சார மறுமலர்ச்சியை உள்ளடக்கியதாக முன்னெடுக்கப்பட வேண்டும்' எண்டெல்லோ. அப்ப எங்கட இனத்தின்ரை ஒரு கூறான, அந்நியச்சூழலில வாழ்ந்து வாற எங்கட தமிழர்களிட்டை எப்பிடியான மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிதெண்டு அறிஞ்சுகொள்ள ஆசைப்பட்டன்.

யேர்மனியில மகள் இருந்த நகரத்திலை நாட்டுக்காக எண்டு செயற்படிற பொடியங்களோட 2,3 நாள் நல்லாய்த்திரிஞ்சன். ஏதோ பாருங்கோ, முந்தியில நாங்கள் தனிச்சு விடப்பட்ட ஒரு பாவப்பட்ட இனம் எண்ட வேதனை மனசை அழுத்திறது. ஆனால் தமிழன் எண்ட தலைக்கனத்தோட சேர்ந்த ஒரு தலைநிமிர்வு இப்ப மனசில ஏற்பட்டிருக்கிது. கடல் கடந்த நிலையிலையும் எங்கட தலைவர் இஞ்சை வாழிற எங்கட மக்களின்ரை மனசை எவ்வளவு தூரம் ஆகர்சிச்சு நிக்கிறார் எண்டிறதைப் பார்க்கேக்கிளை மனசில ஏற்படிற உணர்வைச் சொல்லி விளங்கப்படுத்தேலாது. ஒருநாள் இஞ்சை தமிழாலயம் (நான் முந்திச் சொன்னனான்) எண்டிற தமிழ்மொழிப்பாடம்

கேட்டால் சாத்திரி சொன்னவராம். அதென்ன சாத்திரி டகர, றகரங்களிலையே நிக்கிறாரெண்டு விளங்கேல்லை. அப்பிடியிருக்க இஞ்சை காதும், நெஞ்சும் குளிரிது. இடைவேளையில ஒரு பிள்ளை தனிய எழும்பி வந்து என்னைக் கேட்டிச்சிது: 'தாத்தா ! சாதி என்னண்டு கண்டுபிடிக்கிறது ?'. எனக்கு தூக்கிவாரிப் போட்டிச்சிது. 'ஏனம்மா ! உப்பிடியொரு கேள்வி உமக்கு வந்தது ?'. 'லீவுக்கு குடும்பமாய் யாழ்ப்பாணம் போனனாங்கள். அம்மாவும், அப்பாவும் விரும்பித்தான் கலியாணம் செஞ்சவை. 15 வருசத்துக்குப் பிறகு யாழ்ப்பாணம் போனனாங்கள். அம்மாவின்ரை சொந்தக்காரப் பாட்டி ஓராள் வந்து அப்பாவைக் குறைவாய் சொன்னவா. நான் விளக்கம் கேட்க அப்பாவும், அம்மாவும் ஒண்டும் சொல்லேல்லை. அம்மா, அப்பா, நாங்கள் எல்லாரும் தமிழ்தானே! அப்பிடியிருக்க என்னண்டு சாதி வித்தியாசம் கண்டுபிடிக்கிறது ?'. நான் சத்தியமாய் அழுதனான், அதுவும் சந்தோசத்தில ! அடிப்படை ஒண்டுமே இல்லாத சாதியெண்டிற சாபக்கேட்டை அழிக்கோணும் எண்டு நினைச்சு மீட்கப்பட்ட பிரதேசங்களில வெற்றிகரமாகக் கைகூடியுள்ள இந்த நேரத்திலை, ராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களிலை வேண்டுமெண்டே உதுகள் ஊக்குவிக்கப்படுது. அப்பிடியிருக்க வெளிநாட்டில அதின்ரை சுவடே அழிஞ்சு போய், என்னண்டு க்ண்டுபிடிக்கிறதெண்டு கேட்கப்படுகிற

மரங்களுக்கு நடுவில வீடுகட்டி இருந்துகொண்டு, ஒவ்வொருநாளும் மாம்பழம் சாப்பிடோணும். இஞ்சை கடையில விக்கிற மாம்பழத்தை வாழைப்பழம் எண்டு சொன்னாலும் நம்பத்தான் வேணும். மணம், ருசி ஒண்டுமே இல்லை. அங்கை இரவில வெளியால படுத்துக்கொண்டு வானத்தில நட்சத்திரங்களைப் பார்க்க எவ்வளவு வடிவாய் இருந்திச்சிது. இஞ்சை நட்சத்திரம் பார்க்கிற எண்டால் நடுராத்திரி மட்டும் முழிச்சிருந்தாலும் முகில் வரும், குளிர் வரும். சே !'. ஒரு மனுசனுக்குச் சந்தோசம் அளிக்கிற விசயங்கள் ஆளுக்காள் வித்தியாசப்படிகிது பார்த்தியளே ! உந்தச் சாதி அமைப்பைப்பற்றிச் சொல்லேக்கிளை இன்னுமொண்டையும் கட்டாயம் சொல்லியே ஆகணும். அதாவது இஞ்சை ஐரோப்பாவிலையும் சாதிக்கட்டமைப்பு இருந்திருக்கு. அரசகுடும்பங்கள், வணிகர்மார், விவசாயியள் எண்ட மூண்டிலையும் நாட்டு மக்களின்ரை உணவுத்தேவையளுக்காக முதுகு முறியிற விவசாயியளைத்தான் அடிமட்ட மக்களாய் இஞ்ச கருதியிருக்கினம். தொழிற் புரட்சியின்ரை உச்சக்கட்டமாய் உலக யுத்தங்கள் மூண்டாப்போல மக்களுக்கிடையில இருந்த வேறுபாடெல்லாம் போய் ஒட்டுமொத்த சுபீட்சத்திற்காக எல்லாரும் உழைக்கத்தொடங்கீட்டினம்.

எங்கட நாட்டிலையும் அபபி டியான மாற்றம் வந்திட்டிது. வன்னியில உதைப்பற்றிக் கதைக்கிறதே விசர்க்கதை எண்டிற அளவுக்கு நிலைமை சுத்தமாய் மாறீட்டிது. ஆனாலும் ராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலை நிலைமை கொஞ்சம் கவலைக்கிடமாய்த்தானிருக்கிது. அதுகும் சில சமூகவிரோத சக்தியளின்ரை தூண்டுதலில உதுகளுக்கு தூபம் போடப்படுகிற மாதிரியும் இருக்கிது.

நான் உங்களுக்கு ஏற்கெனவே சொன்னமாதிரி இஞ்சை போராட்டத்துக்காய் காசு சேர்க்கிற பொடியங்களோட நான் புலுப்பியம் பார்க்கிறதுக்கெண்டு 2,3 நாளாய் திரிஞ்சன். அதிகமான சனம் தங்கட குடும்பக்காரியம் மாதிரி உணர்ந்து பங்களிப்புச்செய்யினம். நீங்கள் நினைக்கப்படாது. வெளிநாட்டில காசு கைநிறைய வந்து குவிஞ்சு கிடக்கேக்கிளை, இப்பனைக்கிள்ளிக் குடுத்தாப் போல என்ன குறைஞ்சிடவே போகுதெண்டு. அங்கை காசு என்னவோ பெறுமதிதான்.

*(22 ஆம் பக்கம் பார்க்க)*



# உளவியல் நவீனம்...

அத்தியாயம்- 11

பகுதி -51

"நான் அந்த மரத்த பார்த்துக் கொண்டு இருக்கிறனான்...." என்று மீண்டும் டிப்ஸ் சொல்லத் தொடங்கினான்.

".... இப்பவும் அதப் பாத்துக்கொண்டு இருக்கிறனான். வசந்த காலத்தில இலைகள் அரும்பும். மெதுமெதுவா விரியும். மழைக்காலம் அதுகளுக்கு பச்சய உயிர்ப்பை மீண்டும் கொண்டு வாறதால அதுகள் பச்சையாக ஆகிப் போகும்.

மறுபடியும் வசந்த காலம் வந்திட்டுது என்ற சந்தோசத்தில அவை நல்லா விரிந்து கொள்ளும். பிறகு கோடை காலம் முழுவதும் சிநேகிதமான நிழலைத்தரும். இலையுதிர் காலம் வந்தா இலையையெல்லாம் காற்று அடித்துக்கொண்டு போயிரும். காற்று வந்து உலகத்தை சுற்றிப்பார்க்க இலையள கூட்டி போய் விடும் எண்டு ஜேக் சொன்னவர். மரத்தில கடசியா மிஞ்சியிருந்த ஒரு இலையைப் பற்றி ஜேக் எனக்குச் சொன்னவர். தன்னை எல்லாரும் மறந்துபோட்டினம்.... எங்கயும் போறதுக்கு தான் சுதந்திரமா இல்லையே எண்டு அந்த இலை துக்கப்பட்டுது எண்டு ஜேக் சொன்னார். ஆனா காற்று அந்த தனிமையான ஒற்றை இலையை தேடி வந்துது. வந்து. எவரும் எப்பவும் போயிருக்காத அற்புதமான பயணம் ஒண்டுக்கு அந்த ஒன்றை இலையை கூட்டிப்போனது. அந்த இலைய காற்று உலகமெங்கும் அடித்துக்கொண்டு போனது. உலகத்தில இருக்கிற அற்புதமான விசயங்கள எல்லாம் இலை பாத்துது உலகமெல்லாம் சுற்றிப்பார்த்த பிறகு அது எங்கட முத்தத்துக்கு திரும்பி வந்தது. என்னக் காணாத ஏக்கத்தில தான் அது வந்ததெண்டு ஜேக் சொன்னார். முன்பனிக் காலத்தில ஒரு நாள் எங்கட மரத்துக்குக் கீழ அது கிடக்கிறத ஜேக் கண்டார். நீண்ட பயணத்தால அது களைச்சு மெலிஞ்சு... தேய்ஞ்சு போயிருந்துது. நான் அத நேசிச்ச மாதிரி நேசிக்கிற வேறு ஒருதரையும் உலகத்தில காணாத படியால்தான் அந்த இலை என்னைத் தேடி திரும்ப வந்திருக்கு எண்டு ஜேக் சொன்னார். அந்த இலையையும் என்னட்ட தந்தார்.

மீண்டும் ஒரு முறை அமைதியிழந்தவனாக அறையை சுற்றி வந்தான். எனக்கு முன்னால் வந்து தரித்துக்கொண்ட அவன், "நான் அந்த இலைய என்னோட வைச்சுக் கொண்டன் நல்லா களைச்சுப் போய்.... பழசாகி.... அந்த இலை இருந்துது ஆனா அத நான் என்னோடயே வைச்சுக்கொண்டன். அத ஒரு மட்டையில ஒட்டி பிறேம் போட்டனான். காற்றோட உலகமெல்லாம் பறந்து போகயிக்க அது பார்த்திருக்கக் கூடிய சில விசயங்கள நான் கற்பனை செய்து பாத்தன். அது பாத்த நாடுகளப் பற்றி என்ர புத்தகங்களில வாசிச்சனான்"

பொம்மை வீட்டை நோக்கி டிப்ஸ் நடந்து சென்றான். "நான் இதப் பூட்டப் போறன். கதவுகள பூட்டி ஜன்னல்கள சாத்தப் போறன்" என்றான்.

"ஏன் டிப்ஸ்?.. கதவப் பூட்டி ஜன்னல்கள சாத்த ஏன் விரும்புறீங்க?" என்று நான் கேட்டேன்.

"எனக்கு தெரியேல்ல" டிப்ஸ் முணுமுணுத்தான். அவன் திரும்பவும் என்னை நோக்கி நடந்து வந்தான். "என்ர சப்பாத்துகள்..." என்று சொன்ன அவன் குரலில் இயலாமையின் தேம்பல் மீண்டும் லேசாகத் தலை காட்டியது. "என்ர சப்பாத்து நூல்களை எனக்கு கட்டி விடுவீங்களா... மிஸ் ஏ"




"சரி டிப்ஸ் நான் கட்டி விடுறன்." என்று சொல்லிவிட்டு அவற்றை கட்டியும் விட்டேன். சூப்பிப் போத்தலை எடுத்து சிறிது உறிஞ்சினான். நீண்ட பெருமூச்சொன்று அவனிடமிருந்து வெளிவந்தது.

"என்ன டிப்ஸ்... ஏதோ துக்கப்படுகிறீங்க போல இருக்குது?"

ஆம் என்பது போல் தலையை அசைத்தான். "துக்கம்தான்" என்றான்.

"ஜேக் இன்னமும் உங்கட தோட்ட வேலைகள் செய்கிறாரா?"

"இல்ல. இப்ப செய்யிறயில்ல" என்ற டிப்ஸ், "அவர் நல்லாக் கிழண்டிப் போனார் என்று அப்பா சொன்னவர். அவருக்கு இருதய நோய் வந்ததில இருந்து அப்பிடி கஷ்டமான வேலை செய்யக் கூடாது எண்டும் சொன்னவர். ஆனா இடைக்கிடை என்னப் பாக்க வருவார். அப்பிடி வந்தா தோட்டத்தில இருந்து கதைக்கிறனாங்க. எப்ப வந்தாலும் எனக்கு ஒரு கதை சொல்லுவார். இப்ப கன காலமா அவரைக் காணயில்ல. அவரைக் காண ஆசையா இருக்குது."

"ஓம் அப்பிடி இருக்குமெண்டுதான் நான் நினைக்கிறன் டிப்ஸ். ஜேக் ஒரு அருமையான ஆளா இருப்பார் எண்டுதான் நினைக்கிறன்."

"ஓம் அவர் அருமையான ஆள்தான். அவரில எனக்கு சரியான விருப்பம்... அவரை ஒரு நண்பன் எண்டு சொல்லலாமா?"

"அவர் ஒரு நண்பன் எண்டுதான் நான் நினைக்கிறன் டிப்ஸ். நல்ல.... மிக நல்ல நண்பன்தான்."

ஜன்னலை நோக்கி நடந்து சென்ற டிப்ஸ் எதுவுமே பேசாமல் நீண்ட நேரம் ஜன்னலுக்கூடாகப் பார்த்துக்கொண்டே இருந்தான். பின் ஆலயத்தை நோக்கிச் சுட்டிக் காட்டிக்கொண்டு,

"ஜேக் ஒவ்வொரு ஞாயிறும் கோயிலுக்குப் போறவர். அவரே எனக்கு அதச் சொன்னவர்." என்றாள்.

"நீங்க எப்பவாவது கோயிலுக்கு போறனீங்களா டிப்ஸ்?" நான் கேட்டேன்.

"இல்லயில்ல. அப்பாவும் அம்மாவும் கோயில்களில நம்பிக்கையில்லாத ஆக்கள். ஆனபடியா நானோ டொறத்தியோ கோயில்களில நம்பிக்கையில்லாமத்தான் இருக்கிறம்."

"அப்பிடியோ..." என்றேன் நான்.

"ஆனா ஜேக் கோயில்ல விசுவாசமான ஆள். அம்மம்மாவும் அப்பிடித்தான்" என்றான் டிப்ஸ். மீண்டும் அமைதி நிலவியது.

"இன்னும் பத்து நிமிசங்களா இருக்குது?" அமைதியை உடைத்துக்கொண்டு டிப்ஸ் கேட்டான்.

"இல்லை" என்றேன் நான்.

"அப்ப... ஒன்பது நிமிசங்களா...?" அவன் கேட்டான்.

"இல்லை" என்றேன் மீண்டும்.

"இன்னும் எட்டு நிமிசங்களா...?"

"ஓம் இன்னும் எட்டு நிமிசங்கள்...?" இருக்கு.



"அப்பிடியெண்டா மிச்ச நேரத்துக்கு பொம்மைக் குடும்பத்தோடயும் வீட்டோடயும் நான் விளையாடப் போறன்" என்று சொன்னான். எழுதும் தாள்கள் வைத்திருந்த பை ஒன்றை எடுத்துக்கொண்டான். "நான் இத என்ர வீட்டுக்குள்ள வைக்கிறன்." என்று கூறிவிட்டு வீட்டின் அறையொன்றுக்குள் அதை வைத்தான். "யாரோ வீட்டின்ர கதவ மறுபடியும் பூட்டி வைச்சிருக்கினம்." என்றான்.

"ஓம்"

அந்தப் பொம்மை வீட்டினுடைய நிலத்தடி அறையைச் சுட்டிக்காட்டிய அவன்,

"இது நிலத்தடி அறை" என்றான்.

"ஓம் அப்பிடியும் இருக்கலாம்" என்று சொன்னேன்.

"வளர்ந்த ஆக்கள படுக்கைக்கு போக ஆயத்தமாக்குங்கோ" என்று சொல்லிக் கொண்டே பொம்மைகளை தெரிந்தெடுத்து படுக்கை அறைகளில் வைத்தான். "இப்ப பிள்ளைகள் வாங்கோ... இது குழந்தை.... சமையலாள் இஞ்ச போங்கோ... உடுப்புத் தோய்க்கிறவ இங்க போங்கோ... தனக்குக் களைப்பா இருக்குதெண்டு அவ சொல்லுறா... ஓய்வெடுக்க அவ விரும்புறா.... ஆ.... கட்டில்கள் இஞ்ச இருக்கு. இது அப்பாட அறை. அதுக்குள்ள நீங்க போகக் கூடாது.... அவரக் குழப்பக்கூடாது... ஆள் கடும் வேலை. இதுதான் அவற்ர கட்டில். இது அம்மாட அறை. இது அவவட கட்டில். ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு கட்டில் இருக்குது. சமையல் பெண்ணுக்கெண்டு ஒரு அறையும் கட்டிலும் இருக்குது.

(தொடரும்)

---

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம்பளமும் நல்லாய்த்தான் கிடைக்கும். அது எல்லாத்துக்குச் சேர்த்துச் செலவும் வரும். அது எல்லாத்துக்கும் ஈடுகொடுத்துக்கொண்டு தாய்நாட்டுக்கான பங்களிப்பை முதன்மைப்படுத்தி சனங்கள் வாழினம். வீட்டு வாடகை, கறண்ட், காஸ், கட்டாயக் காப்புறுதியள் எண்டு மாதாந்தம் பெரீசாய் கட்டோணும். கட்டாட்டி அபராதத்தோட திரும்ப கடிதம் வரும். அப்பையும் கட்டாட்டி 2 கிழமையில துண்டிச்சுப்போடுவாங்கள். குளிருக்கிளை ஹீற்றர் இல்லாமல் மூச்சே விடேலாது. பத்தாக்குறைக்கு வாற தண்ணிக்குக் காசு, நாங்கள் பாவிச்சாப் பிறகு போற அசுத்தத் தண்ணிக்குக் காசு (சுத்திகரிச்சுப் போட்டுத்தான் நிலக்கீழ் நீரோட சேர்க்கிறாங்கள்). போடிற குப்பையை அகற்றிறதுக்குக் காசு, ஒழுங்காய் குப்பையளை கண்ணாடி, பிளாஸ்ரிக், கடதாசி, உணவுக்கழிவு எண்டு பிரிச்சுப்போடாட்டி அதுக்குக் காசு. ஒவ்வொரு பில்லையும் மகள் வீட்டில பார்த்துவிட்டு என்ரை மூளை(?) சும்மா இருக்குமே! நான் அவளிட்டை கேட்டன், 'குப்பையை எடுக்கிறதுக்கு ஏன் அநியாயமாய் காசைக் கொடுப்பான். நான் சும்மாயெல்லே இருக்கிறன். எங்கை போடோணும் எண்டு சொன்னால், சரி அப்பிடி இடம் தெரியாட்டியும் உங்கால எங்கையன் வயல்கரையோரமாய் சைக்கிளிலை கொண்டுபோய் கொட்டீட்டு வரலாமெல்லே. சைக்கிள் ஓடியும் 2 மாசமாய் ஆகப்போகுது'. 'ஐயோ ! நீங்களென்ன கம்பி எண்ணப்போறீங்களே? வெளியால சும்மா சின்னக்குப்பை போட்டாலே பெரிய அபராதம் கட்டோணும். நீங்கள் சைக்கிளிலை கொண்டுபோய் எங்கையாவது மூட்டையோட போட வயல்காரன் வேற நீதிமன்றத்தில வழக்கு வைச்சிடுவான். அவங்களெல்லாம் தங்கட கடமையை ஒழுங்காய் செய்யிறாங்கள். அந்த மினைக்கேட்டுக்கு காசு கட்டவேண்டியது குப்பையை உண்டாக்கிற எங்கட கடமை. நீங்கள் வந்த இடத்தில நல்ல மாதிரி இருந்து நாடுகளைச் சுத்திப்பாருங்கோ! எங்களுக்கு அது போதும். வெளிக்கிடப் போறாராம் அவர் சைக்கிள் எடுத்துக் கொண்டு...' நல்லகாலம் மகள் சொன்னதால தப்பினன். ஆக்கள் வீடுவாசலில இல்லாதநேரத்தில அலுவல் குடுக்க வெளிக்கிட்டிருந்தன் எண்டால் ஆ. . . கடவுளே! 'குப்பை கொட்டிய ஏரம்பருக்கு கடூழியச் சிறை!' எண்டு என்ரை படத்தோட எல்லே பத்திரிகையளில செய்தி வந்திருக்கும்... மானக்கேடு, நினைக்கவே வேர்த்துக்கொட்டிது. அது கிடக்கட்டும் உப்பிடிச்சேரிற குப்பையளைக் கொண்டுபோய் என்ன செய்யிறாங்கள் எண்டு விசாரிச்சன். கண்ணாடியளை மீள் உற்பத்திக்குப் பயன்படுத்திறாங்கள். மற்றதுகளை எரிச்சு அதிலயிருந்து அனல்சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கிறாங்கள். அடடப்பாவியளே! நல்ல மூளையாய் இரண்டு பக்க லாபம் சம்பாதிக்கிறாங்கள் !

உப்பிடித்தான் அங்கையொரு வீட்டை போனாப்போல அந்தக் குடும்பஸ்தர் வரவேற்று, உபசரிச்சுப்போட்டு என்னைக் கூட்டிக்கொண்டு போன தம்பிக்குச் சொன்னார், 'தம்பி! ஓய்வாயிருக்கிற நேரம் இஞ்சால வாரும். ஆனால் மாதக்காசு சேர்க்கிறதுக்காக மினைக்கெட்டு இவ்வளவு தூரம் அந்தரப்பட்டு வராதையும். ரெலிபோண் அடிச்சுப் பார்த்திட்டு நானே உம்மட வீட்டுப்பக்கம் கொண்டுவந்து தாறன். அந்த நேரத்துக்கு நீர் எத்தினை புதுஆக்களிட்டை போகலாம். அப்பு! இண்டைக்கு நீங்கள் வந்ததால தம்பி கொஞ்சநேரம் எண்டாலும் இருந்து கதைக்கிது. இல்லாட்டி சில்லுப்பூட்டின கணக்குக்கு ஓடினவடிதான்.

நேரம் கிடைக்கிற நேரம் ஆறுதலாய் வந்திருந்து கதைச்சு சாப்பிட்டுப் போகலாமெண்டு நான் பேசிறனான். வேற நீங்கள் புதினங்களைச் சொல்லுங்கோ அப்பு!'. அப்பிடியே கனநேரம் போய்ச்சிது. அந்த வீட்டுக்காரன்ரை தாய் ஊரிலை இருந்து என்னை மாதிரித்தான் ஸ்பொன்சரில 3 மாதத்துக்கு வந்து நிக்கிறா. நாங்கள் அமளியாய் கதைச்சுக்கொண்டிருக்க அவா வைச்ச கண் வாங்காமல் ரிவி பார்த்துக் கொண்டிருந்தா. ரிவிச்சத்தம் நல்லாய் குறைச்சுக்கிடந்திச்சிது. 'தம்பி! எங்கட கதையைக் குழப்பக் கூடா தெண்டிட்டு உங்கட அம்மா ரிவி சத்தத்தை நல்லாய் குறைச்சு வைச்சுப் பார்க்கிறா. அது பிரச்சினையில்லை சத்தத்தை தேவையான மாதிரி வைச்சுப் பார்க்கச்சொல்லுங்கோ!'. 'ஐயோ! அப்பு அவா நாட்டில தவறாமல் பார்க்கிற நாடகமாம். இஞ்சை நாங்கள் எங்களைப் பற்றிக் காட்டிற எங்கட ரிரிஎன் சேவைக்க மட்டும் தான் கார்ட் வாங்கி வைச்சிருக்கிறம். மற்றம்படி வழமையான யேர்மன் சணலுகள்தான். உது சண்-ரிவி தங்கட கார்ட்டை வாங்கப் பண்ணிறதுக்காக சத்தம் இல்லாமல் வெறும் படத்தை மட்டும் காட்டிக்கொண்டிருக்கிறாங்கள். சத்தம் வேணுமெண்டால் அவையின்ரை கார்ட் வாங்கட்டாம். உதுகளுக்குக் காசு குடுத்தால் வீடு, வாசல், ஏன் நாடே உருப்படாது. அந்த ஊமைப்படத்தைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறா. வாயாட்டத்தை வைச்சு கதைவசனத்தை அவா கிட்டத்தட்ட கண்டுபிடிச்சிடுவா', எண்டுகொண்டு லபக்கெண்டு பெரீசாய் சிரிச்சார். நாங்களும் கூடவே விழுந்து விழுந்து சிரிச்சம். இது எதுவுமே காதில விழாத அளவுக்கு அந்தப் பாட்டி அந்தத் தொடர்நாடகத்தின்ரை 347 ஆவது அங்கத்திலை லயிச்சுப் போயிருந்தா. எங்களுக்கிள்ளை நடக்கிற மட்டுமில்லை, உலகத்தில நடக்கிற எதுவுமே அவாவின்ரை காதுகளில விழப்போறேல்லை. அவ்வளவுக்கு ஆரோக்கியமற்ற குப்பைத் தொடர்கள் அவாவை அந்நியப்படுத்தி வைச்சிருக்கிது. அவாவின்ரை பேரப்பிள்ளையள் பாட்டியைப் புதினமாய் படம் பார்த்துக்கொண்டு இருந்திதுகள். நான் அவையளைக் கூப்பிட்டுக் கதைச்சன். 'உங்களை மாதிரி ஏன் எங்கட பாட்டி எங்களோட கதைக்கிறேல்லை? இண்டைக்கு எங்கட வீட்டில நீங்கள் நில்லுங்கோவன் ஒப்பா (டொச் மொழியில தாத்தா)!', அந்தச் சின்னனுகள் என்னைக் கேட்டிதுகள். தன்ரை பேரப்பிள்ளையளோட கதைக்கக்கூடவிடாமல் பண்ணிற தொடர்நாடகங்களைப் பற்றி நினைச்சுப்பார்த்தன். எங்கட உறவுகளுக்கிள்ளை இருந்துவாற உயிரோட்டத்தையும் சீரழிக்கத் தயங்காத குப்பையள் வெறுமன பொழுதுபோக்கு அம்சம் எண்டு விட்டுவிடப் படக் கூடியவையா ? யோசியுங்கோ! அடுத்தமுறை சந்திப்பம்.

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




*பாவலா!*

*சிறிலங்காவில் பிக்குகளின் அட்டகாசம் தாங்க முடியவில்லை என்ன செய்யலாம்.*

*பிரியங்கா,*
*யாழ்ப்பாணம்.*

சிறிலங்காவில் அவர்கள் எந்த அட்டகாசத்தையும் செய்யட்டும், தமிழீழப் பகுதிக்குள் அட்டகாசம் செய்தால் அதுவும் இறுதியில சிறிலங்காவைத்தான் பாதிக்கும்... விளக்கம் தேவையற்றது என நினைக்கிறேன்.

*பாவலரே!*

*சட்டமா அதிபருக்கே சட்டம் காட்டுகிறார்கள் சிங்கள இனவாதிகள் இவர்களுக்கு என்ன தெரியும்.*

*தர்ஷா,*
*வவுனியா.*

பேரினவாதச் சட்டம் மட்டுமே தெரியும்.

*பாவலா!*

*எத்தகைய எதிர்ப்புகள் வந்தாலும் பொதுக் கட்டமைப்பு விரைவில் உருவாக்கப்படும் என சனாதிபதி உறுதி கூறியுள்ளாரே உருவாக்கப்படுமா?*

*யாழினி,*
*யாழ்ப்பாணம்.*

விருப்பத்தின் பேரிலல்ல- அழுத்தங்களின் பேரில் உருவாக்கப்படவேண்டியது அவசியம்.

*பாவலா!*

*பௌத்த பேரினவாதிகளின் இலட்சியம் என்னவாக இருக்கும்?*

*உஷா.*
*உருத்திரபுரம்.*

தமிழர்களை- அவர்களின் உரிமைகளை அலட்சியம் செய்வதே அவர்களின் இலட்சியம்.

*பாவலா!*

*சிற்பத்தையும் சிற்பியையும் வேறுபடுத்துங்கள்?*

*மாலினி,*
*கிளிநொச்சி.*

சிற்பியின்றி சிற்பமில்லை....
சிற்பமின்றி சிற்பியிருப்பார்.

*பாவலா!*

*முன்பு போல இப்பொழுதும் போர்க்களத்தில் வாளையும் ஈட்டியையும் பயன்படுத்தினால் எப்படியிருக்கும்?*

*தர்மினி,*
*கோணாவில்.*

சரித்திரபடம் பார்ப்பது போல இருக்கும்.

*பாவலா!*

*இப்போது வெளிவரும் இலக்கியப் படைப்புக்கள் எல்லாம் போர்க்காலங்களில் வெளிவந்த இலக்கியப்படைப்புக்கள் போல் இல்லை ஏன்?*

*முரளி,*
*இரத்தினபுரம்.*

போர்க்கால இலக்கியங்கள் தன் மானத்தோடு படைக்கப்படுபவை. தற்போதைய இலக்கியங்கள் சில சன் மானத்திற்காகப் படைக்கப்படுபவை.

*பாவலா!*

*சமாதானம் என்பது எது வரை?*

*பிரியன்,*
*புதுக்குடியிருப்பு.*

அடுத்த சண்டை ஆரம்பமாகும் அதுவரை.

*பாவலா!*

*நாங்கள் யார் மீது நம்பிக்கை வைக்கலாம்?*

*ரூபி,*
*கிளிநொச்சி.*

தன்நம்பிக்கைதான் உயர்ந்தது என்கிறார்கள் அறிஞர்கள்.

*பாவலா!*

*கனவுகளும் நினைவுகளும் வாழ்க்கையில் எப்படிப் பட்டது.*

*புவிதா,*
*ஸ்கந்தபுரம்.*

விழிதிறந்தால் கனவு கலையும் விழிமூடினால் நினைவு மறையும்.

*பாவலரே!*

*நீர் வாய்ச்சொல்லில் வீரரா?*

*பரிமிலா,*
*புதுக்குடியிருப்பு.*

நான் அரசியல்வாதியல்ல.

*பாவலா!*

*உபதேசம் உமக்குப் பிடிக்குமா?*

*சியாமளா,*
*கிளிநொச்சி.*

உபதேசங்களால்தானே நம் தேசத்திற்கு ஆபத்துக்கள் அதிகம்.

*பாவலரே!*

*தமிழர் தாயகப் பகுதிகளில் புத்தர்சிலை அமைப்பது பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?*

*ப.மனோஜினி,*
*கிளிநொச்சி.*

புத்தர் சிலைகளை அமைத்து, யுத்த நிலையை உருவாக்குகிறார்கள்.

*அன்பின் பாவலரே!*

*காதலிப்பவர்கள் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?*

*ப.நிதர்சினி,*
*கிளிநொச்சி.*

அவர்களே தங்களைப் பற்றி எதுவும் நினைப்பதில்லையே, நான் என்ன அவர்களைப் பற்றி நினைப்பது.




*என்ன பிறகும் வீட்டு வேலை துவங்கியாச்சுப் போல... எப்பமட்டில முடியும்.*

*எங்க முடியுற வேலைக்கு ஆள்பிடிக்கிறது தானே முட்டையில மயிர் புடுங்கிற மாதிரிக் கிடக்கு.*

*எட, அப்படித்தான் வந்தாலும் ஒழுங்கா வேலை செய்யிறாங்களே.. ஏதும் வேலையில பிழை கதைச்சா "வேற யாளைப் பார் எண்டெல்லே சொல்லுகினம்."*

*நீ உதைச் சொல்லுறாய்... அரிவிவெட்டுக்கு ஆள் கூப்பிடப் போனன்.*

*ஆ... போன உடன வந்திட்டாங்களே.*

*முதல் கேள்வி- புழுதியா பலகையடிப்பா.*

*அடுத்த கேள்வி- புல்லா... நல்ல பயிரா.*

*பிறகு சேறா- விழுந்த வெள்ளாமையா?*

*இதுக்குப் பிறகு இன்னொண்டு கேக்கயில்லயே என்ன சாப்பாடு- எந்த வாகனத்தில ஏத்திக்கொண்டு போவியள்.*

*சரியாச் சொன்னாய் எங்கட பகுதியில கள்ளுக் கிடைக்குமோ எண்டுமெல்லே கேட்டவையல்.*

*இருக்கிற தொழிலாளியளும் இனி வருங்காலத்தில இல்லாமப் போயிருவினம்.*

*ஏன் அப்பிடிச் சொல்லுறியள்.*

*பின்ன இப்ப இந்தத் தொழிலாளியளின்ர பிள்ளையள் ஆரும் தாய் தேப்பனுக்குப் பின்னால வருகினமோ.*

*அதுகள் இளந்தாரியள் மேசன்கரண்டி, மண்வெட்டி எண்டு தூக்குதுகளே. இது நல்லகதை.*

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –124



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –124

.................................................
.................................................
.................................................
.................................................

பெயர் : ................................................. **ஈழநாதம்**
முகவரி : ................................................. யாழ்சாலை,
................................................. கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –123



**எஸ்.ராஜி,**
**வட்டக்கச்சி.**

### பரிசுக்குரிய வரிகள்

*"தலைவன்" சொல்லுக்கு செயல் தந்தீர்*
*"தமிழர்" பெயரை உலகறியச் செய்தீர்*
*தன்னிகரில்லாத் தலைவனுடன்*
*தரணியிலே தமிழீழம் வெல்வீர்- இது உறுதி.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*வெஞ்சமருக்கு புறப்படும் புலிகள்*
*வீறு நடை கொண்டு எழும் புலிகள்*
*தலைவனின் கையசைவுக்கு*
*காத்திருக்கும் புலிகள் இவர்கள்.*

மு.ராஜேஷ்,
புளியங்குளம்.

*இளம் துளிர்களே! ஆயுதம் ஏந்தி*
*ஈழம் துளிர்க்க ஆதிக்கப்படையை விரட்டி*
*தமிழன் தலை நிமிர்ந்து வாழ*
*தரணியெல்லாம் முத்திரை பதித்தீர்களே!*

க.சிவராசா,
கிளிநொச்சி.

*வளரும் தமிழீழத்தின்*
*வரலாற்று நாயகரே எங்கள்*
*தானைத் தலைவர் தருவார்*
*ஆணை அது வரையில் காப்பீர் பொறுமை.*

இ.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

*ஒழுக்கத்தில் சிறந்து ஈகத்தில் உயர்ந்து*
*பலம் பெற்ற படையணியாகி பார் புகழும்*
*புலிவீரர்களே! இணையில்லா இலட்சியப் பயணத்தில்*
*நாமும் உம்மோடு நகர்வோம்.*

சு.செல்வி,
பரந்தன்.

இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்

அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு








# 90 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும்

என்னசொல்லி நாம் - வரைய எம்
கண்ணீர் கதையுனக்கு - கடல்நீரே
பேனா மையாக ஊற்றெடுத்தாலும் - எம்
கதை சொல்லி மாளாதம்மா

கல்வியில் சிறந்தவளே
பண்பில் உயர்ந்தவளே
பள்ளியில் சில ஆண்டு
ஆசானாய் வலம்வந்தவளே
கணக்காய்வாளர் பதவிபெற்று
கண்ணியமாய் கடமை செய்தாயே.

சொர்க்கத்தில் நிச்சயம் ஆகிடும் ! திருமணம்
உனக்குமட்டுமேன் நரகத்தில் ஆனதுவோ
மழலை முகம்காண ஆசையாய் இருந்தவளே
பல ஆண்டு பாராத தம்பியை பார்க்க எண்ணினாயே
தம்பி வந்து உன்முகம் காணத் துடிக்கின்றான்
ஓடோடிவாராயோ....

பிறந்து வளர்ந்த கிராமத்தில்
உயிரற்ற உன் உடலும்
வராமல் போன மர்மமென்ன
சட்டமும் கண்மூடி நின்றதென்ன
மண்ணில் மீண்டும் நீ மலரமாட்டாயோ - எம்
செவிகளில் உம் கீதம் கேட்காதோ.

பூ போன்ற புன்னகை முகமம்மா
புரியாமல் புகுந்தவீடு அனுப்பிவைத்த - பாவமம்மா
காலம் கடந்தாலும் இந்தக் காயம் மாறுமா
கண்மணியே வானுலகில் என்றாலும்
நிம்மதியாய் நீ வாழ வாழ்த்துகின்றோம்.
ஓம்... சாந்தி... ஓம்... சாந்தி... ஓம் சாந்தி

தோற்றம்
16-02-1978

மறைவு
20-03-2005



20-03-2005 அன்று ஜெயந்திநகர்ப் பகுதியில் காலமான எமது அன்புத் தெய்வத்தின் மரணச்செய்தி அறிந்து நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆறுதல் தெரிவித்து எம் துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அரசியல்துறை, நிதிப்பிரிவுப் போராளிகள், பணியாளர்கள், தமிழரசி நகைமாட போராளிகள் பணி யாளர்கள், புதுக்குடியிருப்பு காந்தரூபன் அறிவுச்சோலை போராளிகள், பணியாளர்கள், புதிய வளாகம் பாரதிபுரம் போராளிகள், பணியாளர்கள், தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர்கள், பணியாளர்கள், அக்கராயன் ப.நோ.கூ. சங்க தலைவர், பணியாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## ஏசுபரன் கலைவாணி

(கணக்காய்வாளர், நிதிப்பிரிவு, அரசியல்துறை)

குடும்பத்தினர்,
217, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

(சி-12208)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆனி–03 | 17–06–2005 | வெள்ளிக்கிழமை | ஓசை–119



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12122) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# ஜே.வி.பி அமைச்சர்கள் சிலர் நேற்று பதவிகளை இராஜினாமாச் செய்யவில்லை

## பதவி விலகமாட்டார்கள் எனச் சந்திரிகா நம்பிக்கை

(கொழும்பு)

**கூட்டமைப்பு அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்து நேற்று மாலையுடன் தமது அமைச்சுப் பொறுப்புக்களை இராஜினாமாச் செய்வதாக ஜே.வி.பி அறிவித்தபோதும் அதன் அமைச்சர்கள் சிலர் இன்னமும் தமது பொறுப்புக்களை மீளக் கையளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.**

நேற்று இரவு செய்மதிமூலம் கண்டியில் இடம்பெற்ற பொதுக்கட்டமைப்பு யோசனைகள் தொடர்பாக விளக்கும் கூட்டத்தில் உரையாற்றிய சனாதிபதி சந்திரிகா இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்த அமைச்சர்கள் தமது பொறுப்புக்களை மீளக் கையளிக்க மாட்டார்கள் என்று தான் நம்புவதாகவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி விலகியதாக ஊடகவியலாளர் மாநாட்டில் அறிவிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜே.வி.பியின் கோரிக்கையை அரசு ஏற்காததையடுத்து ஜே.வி.பி. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் இருந்து விலகிவிட்டதாக அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்க அறிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் இருந்து விலகுவது தொடர்பாகத் தாம் மேற்கொண்ட தீர்மானத்தை அறிவிக்கும் முகமாக கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார். இதேவேளை, பாராளுமன்றத்திலும், மாகாணசபையிலும் எதிர்க்கட்சியில் சுயாதீனக் குழுவாக மக்கள் விடுதலை முன்னணி எதிர்காலத்தில் செயற்படுமெனவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க மேலும் கூறினார்.

## ஜே.வி.பி மீண்டும் இணைய வழிவிட்டே ஐ.ம.சு.முன்னணியின் நடவடிக்கை அமையும்

### – ஐ.ம.சு. முன்னணியின் செயலர் சுசில் பிறேம ஜயந்த

(கொழும்பு)

ஜே.வி.பி விரும்பினால் மீண்டும் கூட்டமைப்பு அரசாங்கத்தில் இணைந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கும் வகையிலேயே தம்முடைய எதிர்கால நடவடிக்கைகள் அமைய விருப்பதாக, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதற்கமைய அந்தக் கட்சிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாது என்பதுடன், அந்தக் கட்சி இவ்வளவுகாலமும் வகித்துவந்த அமைச்சுப் பொறுப்புக்களுக்கு தற்காலிக அமைச்சர்களே நியமிக்கப்படுவர் என்றும் அவர் கூறியுள்ளார்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உடன்படிக்கையின் பிரகாரம் கூட்டமைப்பிலிருந்து ஒருதரப்பு ஒருதலைப்பட்சமாக விலகும் பட்சத்தில் அதற்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கமுடியும்.

அவ்வாறான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுமா என்று, கூட்டமைப்பின் செயலாளர் என்றவகையில் அமைச்சர் பிரேமஜயந்தவிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை உரியமுறையில் நடைமுறைப்படுத்தின் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும்

(கொழும்பு)

சுனாமி அனர்த்த மீள்கட்டுமானத்திற்கான பொதுக்கட்டமைப்பை சனாதிபதியும் பொதுசனஐக்கிய முன்னணி அரசாங்கமும் இணைந்து உரிய முறையில் உண்மையானதாக உருவாக்கினால் தமிழ்க்கூட்டமைப்பு உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் அரசைத் தொடரமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 105 ஆசனங்களில் ஜே.வி.பியின் 39 நீங்கலாக 66

(IV ஆம் பக்கம் பார்க்க)

## தேரரைப்பொலிசார் தூக்கிச் சென்றமைக்கு சனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து உண்ணா விரதப்போராட்டத்தில் ஈடுபட்டுவந்த தேசிய பிக்கு முன்னணியின் தலைவர் தம்பர அமிலதேரர் பொலிசாரால் பலவந்தமாக தூக்கிசசெல்லப்பட்ட சம்பவத்திற்கு சனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும் என அம் முன்னணி தெரிவித்துள்ளது. நேற்று கொழும்பு நிப்போன் ஹோட்டலில் நடைபெற்ற தேசிய பிக்குகள் முன்னணியின் ஊடகவியலாளர் மாநாட்டில் அம் முன்னணியின் செயலாளர் சந்ராலோக்கதேரர் இதனைத்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## அமெ. சட்ட வல்லுனர்கள் சிறி.பொலிசாருக்கு பயிற்சி

(கொழும்பு)

கொழும்பு பொலிஸ் உயர் பயிற்சி நிறுவகத்தில் அமெரிக்க சட்ட அமுலாக்கல் அறிவுறுத்தலாளர்களால் இருவாரப்பயிற்சிகள் வழங்கப் பட்டுள்ளது.

நேர்காணல்,விசாரணை நுட்பங்கள் மனித கௌரவம்,நீதி, சமூகக் காவற்கடமை என்பன அமுலாக்கல் பற்றிய பயிற்சியே வழங்கப்பட்டுள்ளதாக அமெரிக்கத்தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. அமெரிக்காவின் இரண்டு சட்ட வல்லுனர்கள் மேற்படி பயிற்சியை வழங்கியுள்ளனர். இப்பயிற்சியை வழங்கிய செவின் கிற்றிடிச் கூறுகையில்;மக்களின் தேவைகளை முதன்மைப்படுத்தியே ஒரு சுயேச்சையான சமூகத்திற்கு முக்கிய பங்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

சுகயீனம் காரணமாக நேற்று நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

☐ நாட்டுப்பற்றாளர்,சிவகாந்தன் (பொன்னையா, சிவகாந்தன் கோட்டைப்பளை, துன்னாலை தெற்கு, கரவெட்டி, யாழ்ப்பாணம்) என்ற நாட்டுப்பற்றாளரே சாவடைந்தவராவார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர். .

## நோர்வே ஓய்வு பெற்ற பிரதம நீதிபதி வ–கி. மனித உ. செயலகத்திற்கு விஜயம்

வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்திற்கு கடந்த செவ்வாய்க்கிழமை வருகைதந்த நோர்வேயின் ஓய்வு பெற்ற பிரதம நீதிபதி பேராசிரியர் ஹாசன் சிமித் அவர்கள் மனித உரிமைகள் செயலகத்தின் நடப்புக்கள் பற்றி இயக்குனர் வணபிதா கருணாரட்ணம் அடிகளாரிடம் விபரமாகக் கேட்டறிந்தார்.

பின்னர் தனிமனித உரிமை மீறல்களையும் நிறுவனம் கையாளுகின்றது என்பதனை அறிந்துகொண்ட அவர் அதைக் கையாளும் முறை பற்றியும் விபரமாகக் கேட்டார். இங்கு அதிகமான காணிப்பிரச்சினை தொடர்பான முறைப்பாடுகள் கையாளப்படுகின்றது என்பதை அறிந்து, ம . உ .செயலகமானது ஓர்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படாவிட்டால் ஏற்படப்போகும் விளைவுகள் என்ன?

### சிறிலங்கா சுதந்திரக்கட்சி துண்டுப்பிரசுரம்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பிற்கு ஆதரவு சேர்க்கும் பொருட்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சியினால் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தெற்கில் உள்ள 18 மாவட்டங்களில் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தத் தவறினால்... என்ற விபரிப்புடன் இத்துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுகின்றன.

விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு நாம் உடன்படாவிட்டால் உதவி வழங்கும் நாடுகளின் உதவிகள் விடுதலைப்புலிகளிடமும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் நேரடியாகச்செல்லும், புனர் நிர்மாணப் பணிகளுக்கான தீர்மானங்களை உருவாக்குவதிலிருந்து அரசாங்கம் விலத்தப்படும் எனவும்

(IV ஆம் பக்கம் பார்க்க

## வரிவிளம்பரம்

**Digital Photo Album**
உருவாக்குபவர்களுக்கு

எம்மிடம் மேற்படி வேலைக்கான **Frame**, சீனறீஸ், முன்பக்கம் ஆகியன **Photoshop File** ஆக உள்ளன. தொடர்புகளுக்கு நிலவு கணனித் தொழில்நுட்பம், கச்சேரி அருகாமை, கிளிநொச்சி. (சி.12207)

### சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு

4ஆம் கட்டை, மல்லாவி வீதி, வன்னிவிளான்குளத்தில் இயந்திரத்தால் செய்த சீமெந்துக் கல் விற்பனைக்குண்டு 5"x6"x12"- ரூபா.23.00 4"x6"x14"- ரூபா .20.00. (6211)

### விசேட ஆங்கில வகுப்புக்கள்

**GRAMMAR & SPOKEN**

O/L,A/L மாணவர்களுக்கும், தொழில் புரிவோருக்கும் காலம்:- புதன்,சனி, ஞாயிறு மாலை 5-6 மணி,இடம்:-அன்னை வேளாங்கன்னி ஆலயம் முன்பாக, உதய நகர் கிழக்கு, ஆசிரியர் **K.YOKAN (BBA &NDE)** (6253)

### காணிவிற்பனைக்கு

கிளிநொச்சி உதயநகர் மேற்கு, இலக்கம் 200 இல் 1/4 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்புக்கு:- தங்கமதி நகை மாடம் திருநகர் வீதி, கிளிநொச்சி. (5937)

### விண்ணப்பப்படிவங்கள்

தேசிய கல்வியியல் கல்லூரிக்கான அனுமதி- 2006 படிவம்,o/ட பரீட்சைக்கான படிவம், ஆசிரியர் இடமாற்ற நியமனம் பெறுவதற்கான படிவம் போன்ற பல்வேறு படிவங்களையும் பெற்றுக்கொள்ளலாம். நிலவு கணனி தொழில் நுட்பம், கச்சேரி அருகாமை, கிளிநொச்சி. (6278)

## காணி விற்பனைக்குண்டு

கனகபுரம் 104ஆம் இலக்கத்தில் இரண்டு ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய இடம் கனகபுரம், 11ஆம் பண்ணை இல.104 விலைவிபரம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.

(6276)

## கூறு விலை விற்பனை

## (Sealed Tender)

### வட பிராந்திய போக்குவரத்துச்சபை-யாழ் சாலை

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் பேருந்துகளில் இருந்து கழிக்கப்பட்ட பின்வரும் உதிரிப்பாகங்கள் கூறுவிலை விற்பனைக்காக யாழ்சாலையில் விடப்பட்டுள்ளன.

உடைந்த வில்லுத்தகடுகள், இரும்புவகைகள், அலுமினியம், பாவித்த ரயர், ரியூப், பிளப், அடிச்சட்டம் போன்ற பொருட்களாகும்.

மேலே கூறப்பட்ட பொருட்களைக் கொள்வனவுசெய்ய விரும்புவோர் 20.06.2005 இற்குப் பின்னர் "வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் யாழ் சாலையில்" சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய வேலை நாட்களில் காலை 09.30 மணியிலிருந்து மாலை 04.00மணி வரை பார்வையிட அனுமதிக்கப்படுவர். மேலும் மீளளிக்கப்படாத வைப்புத்தொகையாக ரூபா 1000/- உம் மீளளிக்கக்கூடிய வைப்புத்தொகையாக ரூபா 25,000/-உம் எமது பிராந்திய கணக்காளர், வ.பி.போ.சபை கோண்டாவிலில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும். தங்கள் கூறுவிலைக் கோரிக்கைகளை அனுப்புவதற்கான விண்ணப்பப் படிவங்களை பலாலி வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள வட பிராந்திய போக்குவரத்துச்சபையின் தலைமைக்காரியாலயத்தில் விநியோக உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளவும். கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்களை 08.07. 2005 இற்கு முன்னர் தலைவர், கூறுவிலைச் சபை, வ.பி.போ.சபை பலாலி வீதி, கோண்டாவில் சாலை. என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.10.07.2005 காலை 10.00 மணிக்கு விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் பொழுது வ.பி.போ. சபை தலைமைக் காரியாலயத்திற்குத் தாங்கள் சமுகமளிக்க வேண்டும். இப்பொருட்கள் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்கப்படமாட்டாது. பொருட்களின் பெறுமதியின் 25வீதம் இற்குரிய பணம் உடன் செலுத்தப்படுவதுடன்,மிகுதிப்பணம் ஒருவார காலத்திற்குள் செலுத்தப்பட்டு, இக் காலப்பகுதியில் பொருட்கள் சாலை வளவினுள் இருந்து எடுத்துச் செல்லப்படல் வேண்டும்.

தலைவர்
கூறுவிலைச்சபை,
வ.பி.போ.சபை,
கோண்டாவில்.

(சி-12211)

## சாவு அறிவித்தல்



### நாட்டுப்பற்றாளர்:
### பொ.சிவகாந்தன் (மாஸ்ரர்)

நாட்டுப்பற்றாளர் பொன்னையா சிவகாந்தன் (மாஸ்ரர்) கடந்த 16.06.2005 அன்று சுகவீனம் காரணமாக சாவடைந்துள்ளார். இவரின் புகழுடல் 16.06.2005 10 மணி தொடக்கம் தூயவன் அரசறிவியல் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று பிற்பகல் 2 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
போராளிகள்

(6277)

## TAFREN

TASK FORCE FOR REBUILDING THE NATION

ILO

## Post Tsunami Recovery
## Rapid Income Recovery Framework
## District Livelihood Units

**TAFREN with tha assistance of the International Labor Organization is facilitating communities affectad by the Tsunami to regain their livelihoods As-part of this initiative District based units are being established to provide critical services to District and Divisional commirtees.**

**Ths folliwing opportunities are now available it three districts.**

- **District Livelihood Coordinators**
- **Livelihoods Database Officer**
- **Committee Facilitator Trainer**

**Attractive Salary packages are available for these positions to be based in the first in stance in Galle,Batticoloa, and jaffna with additional opportunities to be made availa ble In the other Tsunami Af fected Districts.**

**Eligibility criteria and detaailed Job Descri ptions are available on the TAFREN website or by contacting Olinka Berengar.**

**Email:Qlinka @tafren gov.lk Telephone:-2426161**

**Website:-www.tafren gov.lk**
**Please submit written applications on or bfore 22nd June 2005.**

**Livelihood Section**
**TAFREN,**
**21 Janadhipathi Mawatha,**
**Colombo 01**

(சி.12253)

## கேள்வி அறிவித்தல் 2005

### வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளரினால் 2005 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 30 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 11.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| இல: பாடசாலையின் பெயரும் வேலை விபரமும் | மீளளிக்கப்படாத வைப்பு பணம் | மீளளிக்கப்படும் வைப்பு பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|
| 01. யா/இடைக்குறிச்சி சிவசுப்பிரமணிய வித்தியாலயம் | | | |
| (I) மலசலகூடம் திருத்த வேலை (10பகுதிகள்) | ரூ. 250/= | ரூ. 700/= | தரம் 9 |
| (II) அதிபர் அறை புனரமைத்தல் | ரூ. 500/= | ரூ. 2,650/= | தரம் 9 |
| (III) நீர் விநியோகம் | ரூ. 100/= | ரூ. 200/= | தரம் 9 |
| (IV) உத்தியோகத்தர்களுக்கான மலசல கூடத்திருத்தம் | ரூ. 100/= | ரூ. 260/= | தரம் 9 |
| (V) வகுப்பறைகள் அமைத்தல் | ரூ. 250/= | ரூ. 700/= | தரம் 9 |
| 02. யா/எருதிடல் அ.த.க பாடசாலைக் கட்டடத் திருத்தம் | ரூ. 250/= | ரூ. 940/= | தரம் 9 |
| 03. யா/கச்சாய் அ.த.க பாடசாலைக் கட்டடத் திருத்தம் | ரூ. 500/= | ரூ. 2,550/= | தரம் 9 |

01 (அ) மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 09 ஆம், அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதிபெற்றவர்களாவர்.
(ஆ)பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தங்களால் இவ்வேலையைச் செய்து முடிக்க முடியுமானால், தங்கள் பாடசாலைக்குரிய கேள்விப்பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு முதலாம் பந்தி 'அ' இல் குறிப்பிட்ட சட்ட திட்டம் மீளளிக்கக்கூடிய, மீளளிக்க முடியாத வைப்புப் பணமும் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

02 கேள்விப்பத்திரங்களில் பெறுமதி சேர் வரி (VAT) 15 % சேர்க்கப்பட்ட கேள்வித்தொகைப் பெறுமதி சேர் வரி (VAT) 15 % சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

03 மேற்படி வேலைக்கான கேள்விப்பணத்தை தென்மராட்சி கல்வி வலயத்தின் வலயக் கல்விப்பணிப்பாளரின் வங்கிக்கணக்கில் வைப்புச் செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 16.06.2005 ஆம் திகதியிலிருந்து 28.062005 ஆம் திகதி முற்பகல் 11 மணிவரை தென்மராட்சி கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் கிளையில் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04 விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும், கேள்விப்பத்திர இணைப் பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையில் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விபரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறையில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தக்காரரின் முத்திரையிடப்பட்டு தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2005 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 30 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

05 தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 03 மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளிக்க வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய, தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

06 கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன்,மேலதிக விபரங்களை பாடசாலை வேலைகள் கிளையிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக் கல்வி அலுவலகம்,
தென்மராட்சி.

(சி.12215)

திருமதி றெஜினா இருதயநாதன்
வலயக்கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.

# மலேசியாவில் உலகத் தமிழ் மறை ஆராட்சி மாநாடு இன்று ஆரம்பம்

மலேசியத்தலைநகர் கோலாலம்பூரில் நடைபெறும் உலகத் தமிழ் மறை ஆராட்சி மாநாடு இன்று வெள்ளிக்கிழமை ஜூன் 17 தொடங்கி மூன்று நாளுக்கு நடைபெறும்.

இம்மாநாட்டில் பங்கேற்கும் தமிழகக்குழு நேற்று முன்தினம் கோலாம்பூர் சென்றது. காலை பத்துமணிக்குத் தொடங்கும் ஆய்வுக்கருத்தரங்கு தொடக்கவிழாவைத் தமிழக தி.மு.க. பொதுச் செயலர் க.அன்பழகன் தொடக்கி வைப்பார்.

மலேசிய அமைச்சர் டத்தோ எஸ்.வீரசிங்கம் தலைமை வகிக்கிறார்.

மாலை 5.30 மணிக்கு நடைபெறும் கண்காட்சியை அமைச்சர் முகமது தொடங்கி வைக்கவுள்ளார். அன்று இரவு திருவள்ளுவர் மேடைநாடகம் இடம்பெறவுள்ளது.

அதற்கு அமைச்சர் எஸ். விக்னேஸ்வரன் 18 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு திருவள் ளுவர் சிலையை டத்தோ ச.சாமி வேலு திறந்து வைக்கவுள்ளார். டத்தோ கே.ஆர் சோமசுந்தரம் தலைமை வகிக்கவுள்ளனர். காலை 11 மணிக்கு நடைபெறும் அதிகாரத் தொடக்கவிழாவுக்கு அமைச்சர் டத்தோ.சாமிவேலு தலைமை வகிக்கவுள்ளார். இவ்விழாவில் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதிக்கு வழங்கப்படும் செம்மொழி அறிஞர் விருதினை க.அன்பழகன் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

பிற்பகல் இரண்டு மணிக்கு விழா மலர் வெளியீடு நடைபெறுகின்றது. இவ்விழாவுக்கு பா.ம.க.நிறுவுனர் டாக்டர் எஸ். ராமதாஸ், ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ, மற்றும் தொல்.திருமாவளவன், பழ.நெடுமாறன் உள்ளிட்ட 160 பேர் புதன்கிழமை இரவு கோலாலம்பூர் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்கந்தா, நியூஸ்ரார் அணிகள் இலகுவாக வென்றன

நேற்றைய அமரர் சத்தியதர்சன் பூஜிதா ஞாபகார்த்த மென்பந்தாட்ட நான்காம் நாள் போட்டியில் ஸ்கந்தா, நியூஸ்ரார் அணிகள் வெற்றிபெற்றன.

கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் மேற்படி போட்டியில் லக்கிஸ்ரார், ஸ்கந்தா அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற லக்கிஸ்ரார் அணி முதலில் களத்தடுப்புச் செய்யத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய ஸ்கந்தா அணி 14.5 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 128 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய லக்கிஸ்ரார் அணி 13.1 ஓவர்கள் நிறைவில் 50 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

அடுத்து சந்திரோதயா, நியூஸ்ரார் அணிகள் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சந்திரோதயா அணி 13 ஓவர்கள் நிறைவில் 31 ஓட்டங்களைப்பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

பதிலுக்கு 32 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூஸ்ரார் அணி 3.3 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இப்போட்டிக்கு நடுவர்களாக குமார், பூ.சுபானந்த் ஆகியோர் கடமையாற்றினர்.

இதேவேளை நேற்று நடைபெற விருந்த உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறுமென போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

### 1000 பிக்குகளுடன் சனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக 1000 பௌத்த பிக்குகளுடன் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆலோசனை நடத்தவுள்ளார். எதிர்வரும் வெள்ளிக்கிழமை இச்சந்திப்பு நடைபெறவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்கங்கள் குறித்து இந்த கூட்டத்தில் பிக்குகளுக்கு சனாதிபதி விளக்கம் அளிப்பார் என்றும் தெரிகிறது.

## இனவாத செயற்பாட்டைக் கண்டித்து நேற்று கைதடியில் இரண்டாவது நாளாக உண்ணாவிரதம்



(தென்மராட்சி)

சிறிலங்கா அரசினதும், பிக்குகளினதும் இனவாத பயங்கரவாதச் செயற்பாடுகளை கண்டித்து நேற்று இரண்டாவது நாளாக தென்மராட்சியில், கைதடிச்சந்தியில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டத்தை தென்மராட்சி வணிகர் சங்கங்களின் ஒன்றியம் நடத்தியது.

காலை ஒன்பது மணியளவில் வணிகர் ஒன்றியங்களின் பிரதிநிதி சற்குணராசா தலைமையில் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் நூற்றுக் கணக்கான வர்த்தகர்களும், பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளும், ஏராளமான பொதுமக்களும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (28)


# கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு கீழ்வரும் மாதங்களுக்கு உலர் உணவு விநியோகிப்பதற்கு தேவையான நாட்டுப்புழுங்கல் அரிசி முதல்தரமான கிறீன் பிறாண்ட் கோதுமை மாவு ஆகியவற்றை வழங்கக்கூடிய பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| மாதம் | நாட்டுப்புழுங்கல் அரிசி | கோதுமை மா |
|---|---|---|
| 2005 யூலை | 300 மெ.தொன் | 130 மெ.தொன் |
| 2005 ஆகஸ்ட் | 280 மெ.தொன் | 120 மெ.தொன் |
| 2005 செப்ரெம்பர் | 280 மெ.தொன் | 120 மெ.தொன் |

இதற்கான கேள்விப்பத்திரத்தையும், ஆவணங்களையும், 2005.06.24 ஆம் திகதி வரை மாவட்டப் புனர்வாழ்வுச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தி.இராசநாயகம்,**
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம். (சி.12217)



# வடகிழக்கு கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்

## கட்டட நிர்மாண ஒப்பந்த வேலைகள்

## "உடன் தேவை"

கூலி ஒப்பந்த அடிப்படையில் அடுக்குமாடிக் கட்டடங்கள், சாதாரண கட்டடங்கள் நிர்மாணிப்பதற்குத் தகுதியான ஆளணி உடையோரும், ஆற்றலுடையோரும் உடன்தேவை.

- கூலி வீதம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தகுதியுடையோர் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
வடகிழக்குக்கட்டுமானத் தொழில்நுட்பநிறுவனம்,
கண்டிவீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

தொலைபேசி எண்: 021-2285917 (சி-12203)


# 90 ஆம் நாள் நினைவஞ்சலி



உள்ளத்தில் குழந்தையாய்
வார்த்தைகளில் நேர்மையாய்
கடமைகளில் கண்ணியமாய்
துள்ளி வந்த பூங்கொடியே!
மணவாழ்வை
இன்புற கழிக்கும் முன்னே
காலனவன் உனை கவர்ந்ததென்ன
மணமாகி ஓராண்டாகவில்லை
நீ பிரிந்து 90 நாள் ஆகுதம்மா
உன் பிரிவு எம்மை வாட்டுதம்மா
உன் ஆத்மா சாந்தியடைய
தினமும் நாம் பிரார்த்திக்கின்றோம்.

**ஈசுபரன் கலைவாணி**
**(கணக்காய்வாளர் நிதிப்பிரிவு அரசியல்துறை)**

**தோற்றம்:16-02-1978 மறைவு:20-03-2005**

**போராளிகள்-பணியாளர்கள்,**
**அரசியல்துறை நிதிப்பிரிவு**

(6270)


# கணினியியல் கல்லூரி

**இன்றைய கணினி உலகிற்கு வன்னி மண்ணில் உங்களையும் அழைத்துச் செல்ல...**

- Diploma in hard ware
- Diploma in grapic design
- Diploma in Microsoft office
- Diploma in web design
- Diploma in computer studice
- Diploma in web multimedia
- Diploma in computer programming
- Diploma in visual programming
- Diploma in Desk top publishing
- Diploma in computer soft ware engineering

03-04 Months

**Jaffna Road, Kilinochchi.**

**யாழ். சாலை, கிளிநொச்சி.**

(சி.12214)

**20-06-2006 புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

# THE COMPUTER COLLEGE

# உயிலங்குளம் இராணுவத்தினரின் கெடுபிடியால் ஏழு மணிநேரம் வெயிலில் காத்திருந்த மக்கள்

(அலுவலக செய்தியாளர்)

மன்னார் உயிலங்குளம் இராணு வச் சோதனைச்சாவடியில் கடமை யிலுள்ள இராணுவத்தினரின் கெடு பிடி காரணமாக மன்னார் மாவட்டத்



திலிருந்து கிளிநொச்சி மாவட்டத் திற்கு வருகை தரும் மக்கள் சொல் லொன்னா துன்பங்களுக்குள்ளாகி வருவதாகத் தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் காலை 8.00 மணிக்கு மன்னார் பேசாலை ஒவ சியர் நலன்புரி நிலையத்திலிருந்து 12 குடும்பங்களைச்சேர்ந்த 48 உறுப்பினர்கள் கிளிநொச்சியில் தங்கள் சொந்தக்கிராமங்களுக்கு மீளக்குடியமரும் பொருட்டு மன்னார் அரச அதிபரின் ஏற்பாட்டின் பிரகாரம் அரச பேருந்துகளில் அனுப்பி வைக் கப்பட்டனர். அப்போது உயிலங்குளம் இராணுவத்தினர் சோதனைச்சாவடி யில் பேருந்துகளை தடுத்து நிறுத்தி சோதனை மேற்கொண்டனர். இதன் போது பயணித்த மக்களும் பேருந் தும் கிளிநொச்சிக்கு செல்ல முடி யாது அப்படியெனில் மீளவும் அரச அதிபரிடம் சென்று அனுமதி பெற்று வர வேண்டுமென பணித்துள்ளனர்.

இதன்காரணமாக அவர்களுக்கு பொறுப்பாக பயணித்த அரச அதி காரி மீளவும் மன்னார் அரச அதி பரிடம் சென்று அவர்கள் கூறியபடி அனுமதிக் கடிதம் பெற்று வந்த பின்பே மாலை 4.15 மணியளவில் மீளவும் அவர்களை பயணத்தினை மேற்கொள்ள அனுமதித்துள்ளனர்.. இதனால் ஏழுமணி நேரம் பலத்த கொடூர வெயிலுக்கு மத்தியில் தங் கள் பிள்ளைகளுடன் உணவும், குடி நீரும் அற்ற நிலையில் காத்து நின்று பின் நேற்று அதிகாலை கிளி நொச்சிப் பிரதேச செயலகத்தினை வந்தடைந்துள்ளனர்.

இவர்களுக்கான உணவு வசதி கள் கரைச்சிப்பிரதேச செயலர் க.சுலோஜினியின் பணிப்புரைக்கமை வாக உடனடியாக வழங்கப்பெற்று நேற்றுக்காலை 9.00மணிக்கு 12 குடும்பங்களும் வாகனங்கள் மூலம் அவர்களது சொந்தக்கிராமங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உயிலங்குளம் இராணுவச் சோத னைச்சாவடியில் இராணுவத்தினரின் கெடுபிடி இல்லாவிடில் தங்களுக்கு இந்த துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டி ருக்க மாட்டாதென பயணித்தவர்கள் கிளி.பிரதேச செயலகத்தில் தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## பொதுக்கூட்டம்

(பூநகரி)

பூநகரி கடற்றொழிலாளர் சங்க சமா சத்தின் புதிய நிர்வாகத்தெரிவிற்கான பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக் கிழமை 10.00 மணிக்கு சமாசத் தலை வர் தலைமையில் சமாச ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறவுள் ளது. இந்நிர்வாகத்தெரிவில் பள்ளிக் குடா கடற்றொழிலாளர் சங்கம், நல் லூர் கடற்றொழிலாளர் சங்கம், கௌ தாரி முனை விநாயகர் கடற்றொழிலாளர் சங்கம், நாகதேவன்துறை கடற்றொழி லாளர் சங்கம், பள்ளிக்குடா வளர்மதி கடற்றொழிலாளர் சங்கம், பாலாவி கடற்றொழிலாளர் சங்கம், வலைப் பாடு புனித அந்தோனியர் கடற்றொழி லாளர் சங்கம், இரணைதீவு கடற்றொழி லாளர் சங்கம், கிராஞ்சி சிறிமுருகன் கடற்றொழிலாளர் சங்கம், நாச்சிக் குடா, அன்னை வேளாங்கண்ணி கடற் றொழிலாளர் சங்கம், நாச்சிக்குடா கடற்தொழிலாளர் சங்கம் ஆகியவற் றின் உறுப்பினர்கள் கலந்துகொள்ள வுள்ளனர். ஒவ்வொரு கடற்றொழில் சங்கத்தில் இருந்தும் ஆண்கள் ஐந்து பேரும் பெண்கள் இருவரும் மொத்தம் 77 உறுப்பினர்கள் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வு உரிய நேரத்தில் நடை பெறும் எனவும் கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்களை தவறாது சமுகமளிக்குமாறு தலைவர் அன்பா கக் கேட்டுள்ளார். (34)

# பிக்கு மாணவர் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தவில்லை

## –பொலிஸ்மா அதிபர் மறுப்பு

(கொழும்பு)

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பிக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாம் தாக்குதல் மேற்கொள்ளவில்லையென பொலிசார் மறுப்புத் தெரி வித்துள்ளனர். கடந்த திங்கட்கிழமை பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரி வித்து கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டதில் ஈடுபட்ட பிக்கு மாணவர்கள் மீது தாம் தாக்குதல் மேற்கொள்ள வில்லையெனவும்,

பிக்கு மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதாக வெளியான தக வல்களில் எந்தவிதமான உண்மையும் இல்லையெனவும் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பொலிஸ் அதிகாரியொருவர் பிக்கு மாணவரொருவரை குடையால் தாக்கும் போது எடுக்கப்பட்ட படமொன்று நேற்று முன்தினம் ஆங்கில ஊடகமொன்றில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள பொலிஸ்மா அதிபர், ஒரு படத்தை வைத்துக்கொண்டு பொலிசார் எல்லா பிக்கு மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதாகக் கூறமுடியாதெனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆர்ப்பாட்டக் காரர்கள் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் நுழைய முற்பட்ட வேளை அவர்களைத் தடுப்பதற்கே தாம் நடவடிக்கையெடுத்ததாகவும், இதன் போது பிரயோகிக்கப்பட்ட கணணீர்புகைக்குண்டுத் தாக்குலில் பல பிக்கு மாணவர்கள் காயமடைந்து வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ சுட்டிக்காட்டினார்.

இதேவேளை இந்த ஆர்ப்பாட்டத்தின் போது உண்ணாவிரதப் போராட் டத்தில் ஈடுபட்டிருந்த தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தம்பர அமலி தேரர் மீதும் பொலிசார் கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசியதாக குற்றஞ்சாட்டப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் பிரதேசங்களுக்குள் செல்ல பொலிசாருக்கு அதிகாரி தடைவிதிப்பு

விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசங்களுக்குச் செல்ல மாட்டோம் என்றும், அவர்களின் கட் டுப்பாட்டுப் பிரதேசங்களில் வசிக்கமாட்டோம் என்றும், திருமலை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் கடமை யாற்றும் அனைத்துப் பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் அவர்களின் கையொப்பமிடப்பட்ட கடிதங்களைக் கையளிக்க வேண்டும் என திருமலைப் பிரிவிற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

திருமலை மூதூர் பொலிசில் கடமை யாற்றிய அமல் பிரசன்ன எனும் பொலிஸ் கான்ஸ்டபிள் உப்பாறுப் பிரதேசத்தில் வைத்து விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்ட மையே இவ்வாறு அனைத்து பொலிஸ் உத்தியோகஸ்தர்களிடமி ருந்தும் கடிதங்களைக் கோருவதற்கு காரணம் என திருமலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். இவ்விரு நிபந் தனைகள் தவிர அனுமதியின்றி பொலிஸ் நிலையத்தை விட்டு செல்ல மாட்டேன் என்றும் எழுதிக் கையெ ழுத்திடுமாறு பொலிஸ் உத்தியோ கஸ்தர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

## ஜே.வி.பிமீண்டும்...

எதிர்காலத்தில் ஜே.வி.பி.மீண்டும் கூட்டமைப்பு அரசாங்கத்தில் இணைந்து கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்கும் நோக்குடனே, அந்தக் கட்சிக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை எதனையும் மேற்கொள்வதில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். இதற்கேற்றவகையில், அந்தக் கட்சியினால் இவ்வளவுகாலமும் வகித்துவந்த அமைச்சுப் பொறுப் புக்கள் தற்காலிகமாக வேறு நபர்களிடம் ஒப்படைக்கப்படத் தீர்மானிக் கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கருத்துத் தெரிவித்தார்.

## தேரரை...

தெரிவித்தார்.

தம்பரஅமிலதேரரின் உண்ணா விரதப்போராட்டம் முறியடிக்கப்பட் டாலும் பொதுக்கட்டமைபிற்கு எதிரான தங்களின் போராட்டம் தொட ரும் என அவர் கூறினார் .

எந்த வகையிலும் இந்த உத் தேசப்பொதுக்கட்டமைப்பு யோச னையில் சனாதிபதி கையெழுத்திடு வதற்கு தாங்கள் இடமளிக்கமாட் டோம் என்றும் அடுத்த வாரத்துதினுள் தாம் இது தொடர்பில் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவிருப்பதாக வும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அமெ...

கெனவும் இவ்வாறு பயிற்சியளித்து உதவியதன் மூலம் சிறிலங்கா தேசியப் பொலிசாரிடமிருந்து விசாரிக்கும் . சமூகத்தில் உணர்வுடன் கூடிய திறமையான செயற்பாடுகள் என்பனவற்றுடனான பலன்களை பொலிஸ்மா அதிபர் சந்திரா பெனாண்டோ பெற்றுக் கொள்வதற்கு உதவியுள்ளதாக அமெரிக் கத்தூதரகம் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

## நோர்வே...

சட்ட அறிவுரை வழங்கும் நிறு வனமாகச் செயற்படுகின்றது எனப் பாராட்டினார்.

மேலும் மண்டைதீவில் காணா மல் போனோர் பற்றி விரிவாகக் கூறப்பட்டு, அது தொடர்பாக இருக் கும் கோவைகளும் காட்டப்பட்டது. இது தொடர்பாக அறிக்கைகள் எழுதி னால் வெளியுலகிற்குத் தெரியவரும் எனவும், அதன் முக்கியத்துவம் பற்றி யும் கூறினார். பின்பு பிந்துனுவெவ வழக்குத் தொடர்பாகவும் கலந்துரை யாடப்பட்டு. இதுதொடர்பாக இருந்த கோவைகளும் சமர்ப்பிக்கப்பட்டது. சிறுவர்களை இயக்கத்திலிருந்து விடுவிக்கும் முறை பற்றியும் கேட்டார். அது பற்றி இயக்குனரால் விபரமாகக் கூறப்பட்டது. சமூக சமபந்தமான அனைத்துப் பிரச்சினைகளுக்காகவும் ம .உ செயலகத்தின் கதவுதிறந் திருக்கின்றது என அறிந்த அவர் மேலும் பாராட்டி மகிழ்ச்சி தெரிவித் துச் சென்றுள்ளார். (தீ)

## பொதுக்கட்டமைப்பு...

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான பங்குக்கட்சியான சிறிலங்கா சுதந்திர கட்சியினால் விநியோகிக்கப்பட்டதுண்டுப்பிரசுத்திற் குறிப் பிடப்பட்டுள்ளது.

தெற்கில் பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு திரட்டும் கூட்டங்களை நேற்று முன்தினம்ஆரம்பித்தபோதே இத்துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பொதுக்கட்டமைப்பில் கையொப்பமிடத்தவறினால் ஏற்படப்போகும் விளைவு ... என்று விபரிக்கும் பல்லாயிரக்கணக்கான துண்டுப்பிரசுரங்கள் மருதானைச்சந்தி கோட்டை புகையிரத நிலையத்தின் முன்பாக, நுகேகொட பேருந்து தரிப்பிடம் ஆகிய இடங்களிலும் பொதுமக்களிற்கு விநியோகிக்கப்பட்டதாகத் தெரி விக்கப்படுகிறது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைச்சர்களான சரத அமுனுகம, நிமால் சிறிபால டிசில்வா ஆகியோர் கொழும்பு நகரில் இக் கூட்டங்களிற்குத் தலைமை தாங்கினர்.

## ஜே.வி.பிஅமைச்சர்...

அரசாங்கத்திலிருந்து வெளி யேறுவது என்ற ஜே.வி.பி யின் நிலைப்பாட்டில் கட்சி உறுப்பினர்கள் பலர் உடன்படவில்லை என்று முன் னதாகத் தகவல்கள் வெளியாகி யிருந்தன.

கட்சியின் பின்வரிசை பாராளு மன்ற உறுப்பினர்கள் சிலரும், மீன் பிடித்துறை அமைச்சர் மகிந்த விஜே சேகர போன்றவர்களும் இத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருந்ததாக கட்சிவட்டாரங்கள் மூலம் தெரியவந் திருந்தது.

இந்த நிலையில், தற்போது ஜே.வி.பி யின் அமைச்சர்கள் சிலர் தமது பொறுப்புக்களை இன்னமும் கையளிக்கவில்லை என்று சனாதிபதி தெரிவித்திருப்பதானது,

சில ஜே.வி.பி. அமைச்சர்கள் அமைச்சுப் பதவிகளில் நாட்டம் கொண்டு ஜே.வி.பி.யின் நிலைப் பாட்டுக்கு மாறாக முடிவெடுக்கலாம் என்ற ஊகங்களை அரசியல் வட்டாரங்களில் தோற்றுவித்துள்ளது இதேவேளை, ஏனைய ஜே.வி.பி அமைச்சர்களும், அவர்களுடைய பிரதி அமைச்சர்களும் தங்களது இராஜினாமாக்கடிதங்களை உத்தி யோகபூர்வமாக நேற்று சிறிலங்கா அரசிடம் கையளித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை தங்களது அமைச்சுக்காரியாலயத்திற்கு இவர்கள் சென்று அங்கிருந்து தங்களுக்குரிய ஆவணங்கள் மற்றும் தனிப்பட்ட பொருட்களை எடுத்துச் சென்றதுடன் உரியகாரியாலயங்களில் அமைச்சின் திறப்புக்களையும் கையளித்ததாகத் தெரிகிறது.

இவர்கள் கையளித்துள்ள இராஜினா மாக் கடிதங்களில் விடுதலைப்புலி களுடன் பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்க சனாதிபதி முயல்வதைத் தங்களது கட்சி ஏற்றுக்கொள்ள முடியாதுள்ள நிலையிலேயே தாம் இராஜினாமா செய்வதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும் இந்தப்பொதுக் கட்டமைப்பானது ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டணியின் விதிகளுக்கு முரணாகவும் உள்ளதாக அதிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை ஜே.வி.பி ஆளும் கூட்டணியில் இருந்து விலகியமையால் அரசாங்கத்திற்கு எந்தவிதமான பாதிப் பும் இல்லை. ஆனால் ஜே.வி.பி தனது தவறான தீர்மானத்தைத் திருத்திக் கொண்டு மீண்டும் அரசாங்கத்தில் இணைந்து கொள்ளவேண்டுமென சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமார துங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஜே.வி.பி யின் இந்தத்தீர்மானத்தி னால் அரசாங்கத்தின் ஸ்திரநிலை சீர்குலையப்போவதில்லையெனவும் கூறிய அவர், ஜே.வி.பி யின் துணை இல்லாமலேயே மக்கள் வழங்கிய ஆணைக்கு மதிப்பளித்து தேசத்தின் நலனிற்காக திடகங்கற்பத்துடன் செய லாற்றப்போவதாகவும் கூறினார்.

உத்தேச பொதுக்கட்டமைப்பு தொடர்பாக ஜே.வி.பி தரப்பிலிருந்தோ, பௌத்த பேரினவாதத் தரப்பிலிருந்தோ எத்தகைய அச்சுறுத்தல்களை எதிர் நோக்கினாலும் அதிலிருந்து பின்வாங் கப்போவதில்லை.

இத்தகைய நிலை தொடருமா னால் நாட்டில் இராணுவ ஆட்சி அல்லது சர்வாதிகார ஆட்சிதோன்றும் நிலை ஏற்படலாம்.

விடுதலைப்புலிகளை ஆதரிக் கின்ற பெரும்பான்மையான மக்களுக் காக உத்தேச பொதுக்கட்டமைப்பு அவசியமானது. உலகவங்கியை விமர்சிக்கும் சிலர் அவர்கள் வழங் கும் நிதியிலேயே தமது பணிகளை மேற்கொள்கின்றார்கள்.

தமது மக்களுக்கு அரசாங்கம் இதுவரை எதுவும் உரிய முறையில் செய்யவில்லையென விடுதலைப் புலிகள் சுமத்தும் குற்றச்சாட்டு நியாய மானது எனச் சந்திரிகா மேலும் தெரி வித்துள்ளார்.

## பொதுக்கட்டமைப்பை...

ஆசனங்கள் முன்னைய பொது சன ஐக்கிய முன்னணிக்கு உண்டு. இந்த ஆசனங்களின் எண்ணிக்கை யுடன் இலங்கைத் தொழிலாளர் காங் கிரசின் எட்டு ஆசனங்கள் முஸ்லிம் காங்கிரசின் அதிருப்தியாளர்கள் நான்கு பேரின் ஆசனங்கள் மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் இரண்டு ஆசனங்கள், ஈ.பி.டி.பி யின் ஒரு ஆசனம் மற்றும் ஐக்கியதேசியக் கட்சியில் இருந்து சென்ற ஒருவர் ஈறாக 81 ஆசனங்கள் அரசாங்கத் திற்கு ஆதரவாக உள்ளன. இந்த நிலையில் பொதுக்கட்டமைப்பில் உரிய முறையில் கையொப்பம் இட்டு அதனை நடைமுறைப்படுத்தினால் தமிழ்க் கூட்டமைப்பு ஆதரவு வழங்கு வதாகத் தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையில் 22 ஆசனங்கள் சேர்க்கப்பட்டால் 103 ஆசனங்கள் அரசிற்கு ஆதரவாக உள்ளன. இந்த நிலையில் மலையக மக்கள் முன்ன ணியின் இரண்டு ஆசனங்கள் ஐக் கியதேசியக்கட்சிப் பட்டியலில் போட்டி யிட்ட மேல்மாகாண மக்கள் முன்ன ணியின் ஒரு ஆசனம் ஈறாக அரசாங் கத்திற்கு 106 ஆசனங்கள் ஆதரவாக உள்ளன. இந்த விடயம் குறித்து ஐக்கியதேசியக்கட்சியின் பேச்சாள ரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜீ.எல் பீரிஸ் கருத்துத் தெரிவிக்கை யில்;

சனாதிபதி முக்கிய தீர்மானத்தை விரைவில் எடுக்கவேண்டும். அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். எமது கட்சி பொதுக்கட்டமைப்பிற்கு எதி ரானதல்ல. அதன் உருவாக்கத் திற்காக ஒருபோதும் அரசைக் கவி ழ்க்க மாட்டாது. குறிப்பாக ஒஸ்லோ மற்றும் டோக்கியோ பிரகடனங்க ளுக்குஅமைவாக பொதுக்கட்டமைபு உருவாக்கப்பட்டு விடுதலைப்புலி களுடன் கையொப்பமிட்டால் எமது கட்சிபூரண ஆதரவை வழங்குமென் றார் சனாதிபதிக்கு சார்பான தமது நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது. (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது